# மஞ்சரி

ஜய - சித்திரை

ஏப்ரல், 1954

மணம் வீசும் பூச்சி
புரட்சி விளைத்த இந்திய எஃகு
பாவைக் கூத்து
அழகுக்கு ஆதாரம்
க்வஹே-ரி (மலையாளக் கதை)

THE TANJORE MAHARAJA ... TANJORE
RECEIVED
2 APR 1954

-6-
அணா

## கை

கடவுள் கொடுத்த கையைக் கொண்டு தொழுபவர்களே, நீங்கள் பாக்கியசாலிகள். உங்களை நான் போற்றுகிறேன். உலக மக்கள் பணத்தைப் போற்றுவதுபோல நான் இந்தக் கைகளைப் போற்றுகிறேன்.

—வியாசர், 'மகாபாரதம்'

## மஞ்சரி


ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.



மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: :: ஏப்ரல் 1954 [இதழ் 4

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

பாகிஸ்தான் பிரதேசமான கிழக்கு வங்காளத்தில் பெரிய 'புரட்சி' ஏற்பட்டுவிட்டது. இதைக் 'கம்யூனிஸ்ட் புரட்சி' என்றுகூட ஸ்தல நிருபர் ஒருவர் வர்ணித்து விட்டார். அது கொஞ்சம் மிதமிஞ்சிய வர்ணனை தான். என்றாலும், கிழக்கு வங்காளத் தேர்தல் முடிவுகளைப் 'புரட்சி' என்றே சொல்ல வேண்டும். முஸ்லிம் லீக் மந்திரிகள் அத்தனை பேரும் கவிழ்ந்து விட்டார்கள். அவர்களோடு கூடியிருந்த ஷெட்யூல் வகுப்பு மந்திரியும் கவிழ்ந்துவிட்டார். முஸ்லிம் லீகுக்கு ஏழெட்டு ஸ்தானங்களுக்குமேல் கிடைக்கவில்லை. அதை எதிர்த்த ஐக்கிய முன்னணிக்கு இருநூறு ஸ்தானங்களுக்குமேல் கிடைத்திருக்கின்றன. சபையின் மொத்த ஸ்தானங்களே 309-தான். எனவே, பெரும்பான்மைக் கட்சியான 'ஐக்கிய முன்னணி'யையே வங்காள மந்திரி சபை அமைக்கக் கேட்டுக் கொள்ளப்போவதாக, பாகிஸ்தான் பிரதம மந்திரி சொல்லியிருக்கிறார். ஆனல், அரசியல் நிர்ணய சபையில் உள்ள வங்காள முஸ்லிம் அங்கத்தினர்கள் ராஜீநாமாச் செய்ய மாட்டார்களாம். இதனலெல்லாம் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சிக்குள்ளேயே பெரும் பிளவு தோன்றியிருக்கிறது. முஸ்லிம் லீக் கட்சியே ஒழிந்து, புதிய அரசியல் கட்சி தோன்றினலும் தோன்றலாம் என்கிறார்கள். மதத்தின் பெயரால், வகுப்பு வாதத்தால் ஒரு ராஜ்யத்தைப் படைக்கக் கூடப் படைக்கலாம்; ஆனல், வெகு நாள் ஆள முடியாது. சமூக, பொருளாதார முன்னேற்ற முயற்சிகளின் மூலம் மக்களுக்கு நலம் பயந்துதான் ராஜ்யத்தை ஆள முடியும்; காப்பாற்ற முடியும். இந்த உண்மையையே பாகிஸ்தான் விவகாரம் போதிக்கிறது.

* * *

இந்தியாவில் பிரெஞ்சு உடைமையாக இருந்துவரும் புதுச்சேரி, காரைக்கால் பிரதேசங்களின் மேயர்களும், பிரெஞ்சு இந்தியாவின் மந்திரிகளும் சில நாளைக்குமுன் ஒரே விதமாய் முடிவு செய்தார்கள். ஜன அபிப்பிராயக் கணிப்பு இல்லாமலே, இந்திய யூனியனில் பிரெஞ்சு இந்தியப் பிரதேசங்களைச் சேர்த்து

விடவேண்டும் என்பதே அந்த முடிவு. ஆனும் ஸோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இவர்களின் இந்த முடிவை, பிரெஞ்சு இந்திய மக்களின் ஏகோபித்த முடிவு என்றே கொள்ள வேண்டும். பிரெஞ்சு இந்திய அதிகாரிகள் அப்படிச் செய்வதாய்த் தெரியவில்லை. அடக்குமுறையைக் கையாளத் தொடங்கியிருக்கிறார்கள். இதைப் பலமாய் ஆட்சேபித்து இந்திய சர்க்கார் பாரிஸ் சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்கள். பிரான்ஸுக்கும் இந்தியாவுக்கும் இப்போது வியாபார உறவு முதலியவை சுமுகமாக இருக்கின்றன. பிரெஞ்சு இந்தியப் பிரதேசங்களின் நிர்வாகத்தை நட்பு முறையில் மாற்றிவிட இதுவே மிகவும் ஏற்ற தருணம். என்ன இருந்தாலும், இந்திய மண்ணில் இனியும் நெடுங்காலம் அந்நிய ஆதிக்கத் துண்டு துணுக்குகள் இருக்க முடியாது. வீணே கால தாமதம் செய்யாமல் கண்ணியமாக இந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதுதான், உலகிலேயே ஜனநாயக சுதந்தரப் புரட்சிக்கு வழி காட்டிய பிரெஞ்சு நாட்டுக்கு அழகு.

* * *

என்னதான் தேசிய மொழியை வளர்த்தாலும் சரி; பிரதேச மொழியின் வளர்ச்சிக்குத் தடை செய்யக் கூடாது. கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம் லீக் கவிழ்ந்ததற்கு மிக முக்கியமான காரணம் வங்காளி-உருது விவகாரந்தான். இதை இந்தியப் பிரதம மந்திரி நேருவே சுட்டிக் காட்டியிருக்கிறார். இந்திய யூனியனில் 'ஹிந்தி'யைத் தேசிய பாஷையாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், பெரும் பெரும் பிரதேசங்களில் தமிழைப்போல் பல மொழிகள் மக்களின் தாய் மொழிகளாக இருக்கின்றன. ஆங்கில ஆட்சியில் ஆங்கிலம் எவ்வளவுதான் பரவினும் படித்த வகுப்பாரின் பாஷையாகத்தான் இருக்க முடிந்தது; இன்னமும் இருந்து வருகிறது. 'ஹிந்தி' வெகு தூரம் வளர்ந்த பிறகுதான், ஆங்கிலத்துக்குரிய ஸ்தானத்தையாவது அடைய முடியும். அந்த அந்தப் பிரதேசங்களில் தாய் மொழியை வளர்த்தால்தான், தேசம் சிறப்படையும்; ஜனநாயகம் தழைத்தோங்கும். அகில இந்திய விவகாரங்களுக்கு மட்டுமே 'ஹிந்தி'யை வைத்துக் கொள்ள வேண்டும். பல பிரதேசங்களிலும் தாய் மொழிகளையே அரசாங்க நிர்வாகம் உள்படப் பல விவகாரங்களுக்கும் மிக அதிகமாய்ப் பயன்படும்படி உருவாக்க வேண்டும். இதுவே உருப்படும் மார்க்கம்.

## வாழும் வழி

இயற்கையோடு ஒத்து வாழ் என்கிறார்களே; அது தேக்கத்துக்கு வழி; சாவுக்கு வழி. ஒரு வீட்டை மனிதன் எப்படிக் கட்டுகிறான்? இயற்கையோடு ஒத்து வாழ்ந்தா? அல்ல; இயற்கையை எதிர்த்துப் போர் புரிந்தே. இயற்கையோடு புரியும் ஓயாத போரே, மனித முன்னேற்றத்துக்கு மார்க்கம்; அதோடு ஒத்து வாழ்வதன்று.

—சுவாமி விவேகானந்தர்

# எகிப்திலே நடந்தது

★

**ஒரு குட்டிக் கலகம் நடந்து, மீண்டும் நஜீப் பதவி பெற்ற வரலாறு, சுவாரஸ்யமான கதைபோல் இருக்கிறது. ஜனாதிபதி பதவியை மட்டும் அல்ல; இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, பிரதமமந்திரி பதவியையுமே பெற்று, மக்களின் அன்பைக் கொள்ளை கொண்ட தலைவராக விளங்குகிறார் நஜீப்.**

கெய்ரோ நகரில் பிரம்மாண்டமான ஜன்னலுக்குப் பக்கத்தில் தம் காரியாலயத்தில் ஒரு நாள் அமர்ந்து எகிப்து ஜனாதிபதியும் பிரதமமந்திரியுமான ஜெனரல் நஜீப், புகை குடித்தபடி இன்பமான ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தார்.

ஆனால், இதே சமயத்தில், எகிப்தின் உண்மையான சர்க்கார்-பன்னிரண்டு வாலிபர் அடங்கிய



ஸலேம்; நஜீப்; நாஸர்

காப்பிரைட்: டைம் (ஆங்கிலம்: 8-3-'54), நியூ யார்க்.

புரட்சிக் கமாண்ட் கவுன்ஸில் - ஓர் அவசரக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தது. நஜீபின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காகவே அந்தக் கூட்டம். இதற்கு மூன்று நாளைக்கு முன்புதான் இந்தப் புரட்சிக் கவுன்ஸிலுக்கு நஜீப் ஓர் இறுதிக் கடிதம் கொடுத்திருந்தார். கவுன்ஸில் முடிவுகளை நிராகரிக்க, மந்திரிகளை நியமிக்க, நீக்க, ராணுவ உத்தியோகஸ்தர்களை உயர்த்த, தள்ள இந்த அதிகாரங்களையெல்லாம் தமக்கு அளிக்க வேண்டும் என்றும், இல்லையானால் தாம் விலகிக்கொள்வதாகவுமே அந்தக் கடிதத்தில் அவர் கூறியிருந்தார். தம் இறுதிக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு, குல்லாயை எடுத்துத் தலையிலே வைத்துக் கொண்டு, வீடு போய்ச் சேர்ந்தார்.

நைல் நதிக்கரையில் ஒரு சமயம் ஃபரூக் ஆடம்பரமாய் வாழ்ந்த அரண்மனையில் அன்றிரவு முழுதும், புரட்சிக் கவுன்ஸில் என்ன முடிவுக்கு வருவது என்று புரியாமல் போராடிக்கொண்டிருந்தது. பத்தொன்பது மாதங்களுக்கு முன்பு, ஃபரூக் அரசரைக் கவிழ்க்க எழுந்த வாலிப ராணுவ அதிகாரிகள், வயதான ஒரு தலைவரைப் பெயரளவுக்குப் பொறுக்க நேர்ந்தது. ஜனங்களின் மரியாதைக்கு உரியவரும் மும்முறை ரணகளத்தில் காயமுற்றவருமான நஜீபைப் பொறுக்கினார்கள். அது மிக நல்லதாய்ப் போயிற்று. 'யாஹிஷ் (நீடு வாழ்க) முகம்மது நஜீப்!' என்று தேசமே கோஷித்தது. மக்களெல்லாம் அவரைச் சூழ்ந்து ஆதரித்தார்கள். மக்கள் அவருடைய கைகளை முத்தமிடுவார்கள். அவர்களை அவர் தூக்கி எடுத்து, அவர்களுடைய கன்னத்திலே முத்தமிடுவார். நஜீப் நாணயமானவர். அவர் முகமே அதைக் காட்டியது. தலைமுறை தலைமுறையாய்த் துரோகத்துக்காளாகி நாதனற்ற எகிப்து மக்களுக்கு ஒரு நாதன் கிடைத்துவிட்டார். கண்ணிலே ஒளி தவழ, அவரைப் பார்க்க அவர்கள் ஓடி வந்தார்கள்.

ஜனங்களிடம் இவ்வளவு செல்வாக்கைச் சுவைத்துவிட்ட நஜீப், அதிகாரத்தை விரும்பினார். பெயரளவில்தான் அவர் ஜனாதிபதி; பிரதம மந்திரி. தன்னலமற்ற தீரர் 36 வயது கமால் அப்துல் நாஸர் என்பவர்தான் புரட்சியின் உண்மைச் சிற்பி. அவரே முக்கியமான பெரிய முடிவுகளையெல்லாம் செய்தார். ராஜாங்க தஸ்தாவேஜிகளை யெல்லாம் இன்ன மாதிரி பைசல் செய்ய வேண்டுமென்ற குறிப்புக்களுடன் அவரே நஜீபுக்கு அனுப்பிவந்தார். எகிப்து ஒரு குடியரசு ராஜ்யம் ஆனதும், அதன் பிரதம மந்திரி, ஜனாதிபதி இரண்டு பதவிகளையும் பெற்றவர் நஜீப். ஆகவே, தம் பதவிகளின் பெருமைக்கு ஏற்ற நேர்த்தியான வீடு தமக்கு வேண்டும் என்று அவர் கேட்டார். தம் இஷ்டங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, ராஜதந்திர ரீதியில் அவருக்கு உடம்புக்கு வந்து, அவர் படுத்துவிடுவார்.

மேலே குறிப்பிட்ட நாளைக்கு மறுநாள் போது விடிந்ததும், ரேடியோவைத் திருகினார் நஜீப். ஓர் ஆச்சரியமான செய்தியைக் கேட்டார். புரட்சிக் கவுன்ஸில் அவருடைய ராஜீநாமாவை அங்கீகரித்துவிட்டது! நாஸர் பிரதம மந்திரியாகிவிட்டார்! முகம்மது நஜீபைப் பேராசை கொண்டவர்,

பாசாங்குக்காரர், விளம்பரக்காரர் என்றெல்லாம் பிரசார மந்திரி ஸாலா ஸலேம் ரேடியோவில் ஒரு நாளும் இல்லாதபடி வர்ணித்தார்! மேலும், "நஜீப் கைது செய்யப்பட வில்லை. ஒன்றிரண்டு மாதங்களுக்குத் தம் வீட்டிலேயே இருக்கும்படி அவருக்கு உத்தரவு மாத்திரம் பிறந்திருக்கிறது" என்றும் ஸலேம் அறிவித்தார்!

பத்து மைல் தூரத்தில் ஹெல்மீ என்ற கிராமத்தில் தரித்திரம் தாண்டவமாடும் தெரு ஒன்றில் உள்ள சின்ன ஒற்றை மாடி வீடே நஜீபின் வீடு. நிருபர்களெல்லாம் அங்கே ஓடினார்கள். வீட்டைச் சுற்றிலும் ஆயுதம் தாங்கிய துருப்புக்கள் வளைத்துக்கொண்டு காவல் புரியக் கண்டார்கள். எவரும் வாய் திறக்கவில்லை. வீட்டுக்குள் சென்ற டெலிபோன் கம்பியையும் அறுத்திருந்தார்கள்.

அன்று கெய்ரோவாசிகள் பத்திரிகைகளைப் படித்ததும் இன்னது செய்வதென்றே தெரியாமல் திகைத்துப் போனார்கள். எகிப்தின் ஆசை விக்கிரகத்தைப் புரட்சிக்கவுன்ஸில் இறுதியாக ஒதுக்கித் தள்ளிவிட்டது என்றே தோன்றியது. மகிழ்ச்சியற்ற இந்தக் காரியத்தைச் செய்துவிட்டு தம் ஆறடி உடம்பை ராணுவத் தலைமை ஸ்தலக் கட்டில் ஒன்றில் கிடத்தி, உறங்கினார் கமால் அப்துல் நாஸர்.

ஆனால் ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்கு வெளியே தெருக்களில், ராணுவத்தின் அறிவாளிகளான குதிரைப் படை அதிகாரிகள் பலர் தங்களுக்குள் தர்க்கம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். பன்னிரண்டு மெம்பர் புரட்சிக் கவுன்ஸிலில் பதவி வகிக்கும் 3-வயது காலேத் மொஹிதீன் என்ற தங்கள் சகோதர அதிகாரியிடம் அவர்கள் சென்றார்கள்.

நாஸர் வந்து ஆஜராகக் கட்டளை பிறந்தது. ஐந்து மணிநேரம் பேச்சு நடந்தது. நஜீபைத் திரும்பவும் ஜனாதிபதியாக்கவேண்டும் என்றும், நாஸர் விலகி மொஹிதீனைப் பிரதம மந்திரி யாக்கவேண்டும் என்றும் அவர்கள் சொன்னார்கள். நாஸர் துளியும் வளைந்து கொடுக்காமல், தலைமை ஸ்தலத்துக்குச் சென்று சடசட என்று உத்தரவுகள் போட்டுவிட்டார்.

அடுத்த நாள் காலையில் குதிரைப் படை அதிகாரிகள் தங்கள் முகாம்களில் விழித்தெழுந்தபோது தெருவின் மறு புறத்திலே தங்களை நோக்கிப் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் மெஷின் கன்களும் வாயைப் பிளந்துகொண்டு நிற்கக் கண்டார்கள். தங்கள் வீரர்களையெல்லாம் குதிரைப்படை அதிகாரிகள் உடனே கூவி யழைத்தார்கள். ஷாரியா எல் கெய்ஷ், அதாவது ராணுவ வீதி எங்கும் வீட்டுக் கூரைகள் மீதெல்லாம் வீரர்கள் மொய்த்துவிட்டார்கள். ஒரு கோஷ்டியும், அதை எதிர்க்கும் மறு கோஷ்டியுமாக யுத்த முழக்கம் செய்தார்கள். பீரங்கிக் கொக்கிகளை அழுத்த வேண்டியது தான் பாக்கி. "கலகம் செய்வோர் கடுமையாய் நசுக்கப்பெறுவார்கள்" என்று கெய்ரோ ரேடியோ கோஷித்தது.

இப்படிச் சூழ்ந்து வந்த போராட்டத்துக்கு நடுவே, வெளியே மற்றொரு பிரம்மாண்டமான கூட்டம் திரண்டு வளைத்தது. அதைக் கண்டு பயந்த ராணுவக் கோஷ்டிகள் ஒன்றுக்கொன்று ராஜியாயின. "நஜீப் இல்லாமல்

புரட்சியில்லை" என்று ஏதோ மந்திரஜாலம்போல் கெய்ரோ தெருக்களிலெல்லாம் மக்கள் கூச்சலிட்டு ஆரவாரம் செய்தார்கள்; "ஸலேம் ஒழிக!" என்று கத்தினார்கள். புரட்சிக் கவுன்ஸிலை உடனே கூட்டினார் நாஸர். உள்ளே கவுன்ஸில் விவாதம் நடந்துகொண்டிருக்கையில் வெளியே ஜனக் கும்பலின் கூச்சல் அதிகரித்துக்கொண்டே போயிற்று. கடைசியில் ஜனக் கும்பலுக்குக் கவுன்ஸில் பணிய வேண்டியதாயிற்று. பகல் ஒரு மணிக்கெல்லாம் ஓர் அதிகாரி ஹெல்மீ ராணுவ வளையத்துக்குள் புகுந்து, நஜீப் அருகே சென்று ஸலாம் வைத்தார். இன்னும் பஜாமா அணிந்தபடி புகை குடித்துக்கொண்டிருந்தார் நஜீப். "தாங்கள் திரும்பி வந்து ஜனாதிபதி பதவியை ஏற்கவேண்டும். ஆனால், நாஸர்தான் பிரதம மந்திரியாக இருப்பார். சம்மதமா?" என்று புரட்சிக் கவுன்ஸில் அந்த அதிகாரி மூலம் கேட்டனுப்பியது. "சம்மதம்" என்றார் நஜீப்.

கெய்ரோ நகரம் ஒரே கோலாகலத்தில் ஆழ்ந்தது. மோட்டார் டிரைவர்களெல்லாம் ஓயாமல் 'பூம், பூம்' என்று ஹார்ன் அடித்த வண்ணம் ராணுவத் தலைமை ஸ்தலத்தைக் கடந்து அதிவேகமாய்க் கார்களை ஓட்டிச் சென்றார்கள். "மாப்ரூக்! மாப்ரூக்!" (மகிழ்ச்சி! மகிழ்ச்சி!) என்று கோஷித்தார்கள். பெரியவர்களும் குழந்தைகளும் ஓட்டல்கள், தெருக்கள் எங்கும் கைகொட்டி ஆரவாரித்து நாட்டியமாடிக் கொண்டு ஓடினார்கள். ஆயிரக் கணக்கான மக்கள் நஜீபின் வீட்டு வாசலுக்குச் சென்று கூடி, "நாங்கள் எல்லாரும் மன்னிப்புக் கேட்கிறோம், ஜனாதிபதி நஜீப்" என்று கத்தினார்கள். நஜீப் பத்திரிகை நிருபர்களைக் கூட்டி, தமக்கு வழக்கமான அடக்கத்துடன், "எல்லாப் புரட்சிகளிலுமே இப்படி நடப்பது வழக்கந்தான். வெறும் குடும்பச் சச்சரவு. அல்லாவின் கிருபையால் எல்லாம் ஒருவாறு தீர்ந்தது" என்றார்.

நஜீபும் புரட்சிக் கவுன்ஸில்காரரும் மீண்டும் ஒற்றுமைப்பட்டு, பெருமகிழ்ச்சி கொண்டார்கள். ஐக்கியமாக இருந்தபோது, அவர்களை எதிர்க்க யாராலும் முடியவில்லை. பிரிந்திருந்த 48-மணி நேரமும் தாங்காத வேதனையாய்ப் போயிற்று. நஜீப், நாஸர் இருவரும் ஒருவர் கழுத்தை ஒருவர் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டார்கள். நஜீப் மந்திரி சபைக் கூட்டத்துக்குச் சென்று ஒவ்வொருவரோடும் கை குலுக்கினார்: "என் மனத்திலே துளியும் வருத்தமில்லை; இதெல்லாம் சின்ன விஷயம்" என்றார். தம்மைப்பற்றி மிகவும் குரூரமாய்ப் பேசிய ஸாலா ஸலேமைப் பார்த்து, "தயாராயிரு. நாளைக்கு என்னோடு ஸூடானுக்கு வர வேண்டும்" என்று உள்ளன்போடு கட்டளையிட்டார். ஸலேம் புன்சிரிப்புடன் வணங்கினார். மிகப் பெரிய நெருக்கடி தீர்ந்தது. ஆயினும், நாஸரின் கௌரவம் கொஞ்சம் குறையத்தான் குறைந்துவிட்டது. நஜீபின் கௌரவமோ மிகவும் உயர்ந்துவிட்டது. மக்கள் தம்மிடம் பெருமதிப்பு வைத்திருப்பதை அவர் கண்டுகொண்டார்.

இயற்கையில்தான் எத்தனை விசித்திரங்கள்!
அவற்றில் ஒன்று இது.

# மணம் வீசும் பூச்சி

டாக்டர் எஸ். என். பிரஸாத்

வானவில்லின் பல நிறங்களுடன் பொலிவுற்றுக் கண்ணைக் கவரும் வடிவம்கொண்டு விளங்குவது வண்ணாத்திப் பூச்சி. அது எப்போதும் பல மலர்களிடையே வாழும். அநேகம்பேர், இயற்கை அழகு பொலியும் ஒரு பொருளாக அதைக் கருதிவருகிறார்களே யொழிய, அதை ஒரு பூச்சி என்ற வகையில் ஆராய்ந்தறிய அதிகமாக அக்கறை கொள்வதில்லை. அதன் நிறம், வடிவம், பருவ காலத்தில் அதன் பழக்க வழக்கம் இப்படி மொத்தத்தில் ஏதோ கொஞ்சம் தெரிந்திருக்கலாம். ஆனால் இந்த ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டவர்களுக்குச் சில விசேஷங்கள் தெரியும். வண்ணாத்திப் பூச்சி வகைகள் பலவற்றுள் ஆண்களிடம் நல்ல வாசனையுள்ள மலர்களைப் போலவே ஒருவித மணம் வீசும். அதுவும் சர்வ சகஜமாக நாம் பார்க்கும் வண்ணாத்திப் பூச்சிகளிலேயே மிக விசேஷமாக மணம் வீசும் வகைகள் இருக்கின்றன.

சாதாரண வண்ணாத்திப் பூச்சிகளில் 'பைரிட்ஸ்' என்றவகையினிடந்தான் மிகுந்த மணம் வீசும். இந்த வகையில் கிட்டத்தட்ட ஒரேமாதிரி இருக்கும் வண்ணாத்திப் பூச்சிகளிடம் வெவ்வேறு விதமான மணமும் வீசலாம். இது சம்பந்தமாக ஆராய்ந்த ஸ்கட்டர் என்பவர், "வெளுப்பாக இருக்கும் சாதாரண வண்ணாத்திப் பூச்சியிடத்தில்கூட இப்படி மெதுவாக மணம்வீசுவதுண்டு. ஒரு சமயம் அதன் இறக்கையின் மேல்புறத்தைத் தேய்த்து உடனே மோந்து பார்த்திருக்கிறேன். அப்போது இது தெரிந்தது. இருந்



புது வைக்கோல் மணம் வீசும் 'பாப்பிலியோ டெமோலியஸ்' என்ற வகைப் பூச்சிகள்.

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 21-2-'54), கல்கத்தா.

தாலும் எப்போதும் இப்படி மணம் வீசுவதாகச் சொல்வதற்கில்லை. இந்தியாவில் உள்ள 'பைரிஸ் கனீடியா' என்ற இந்த இனத்தைச் சேர்ந்த வண்ணாத்திப் பூச்சியிடத்தில்கூட இப்படி மணம் வீசுவதுண்டு.

'யூரேமா என்டெர்ப்' என்ற பொடி வண்ணாத்திப் பூச்சி வகையில் ஆண்களிடத்தில் மல்லிகை போல் ஒருவித மெல்லிய மணம் வீசும் என்று தெரிகிறது. பிரேஜிலில் இருக்கும் பெரிய மஞ்சள் வண்ணாத்திப் பூச்சியிடத்தில் கஸ்தூரி மணம் வீசும். மேற்கிந்தியத் தீவுகளில் இருக்கும் இதே வகை வண்ணாத்திப் பூச்சியிடம் இன்னும் அதிகமாகவே இந்த மணம் வீசுகிறது.

அஸ்ஸாமிலுள்ள 'கடோப்ஸிலியா பைராந்தே' என்ற வண்ணாத்திப்பூச்சி வகையில் ஆணுக்கு இறக்கையில் மயிர் உண்டு; அதை மோந்தால் மல்லிகை மாதிரி ஒருவித மணம் வீசும். அஸ்ஸாமிலுள்ள 'டெலியாஸ் இண்டிகா' என்ற வண்ணாத்திப் பூச்சி வகையில் ஆண் பெண் இரண்டிடத்திலும் நல்ல கஸ்தூரி மணம் வீசுமாம். இதே மாதிரி இலங்கையிலும் சில ஆண் வண்ணாத்திப் பூச்சிகளிடத்தில் இனிய மணம் வீசுவதாக ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார்கள்.

நான் பலவகை வண்ணாத்திப் பூச்சிகளை ஆராய்ந்ததில் பெரும்பாலும் இவர்கள் சொல்வது சரியாகத்தான் இருந்தது; ஆனால் சில சமயம் ஒருவித மணமும் வீசாமலேகூட இருந்தது; வேறு வித மணமும் இருப்பது தெரிந்தது. அலாகாபாதுக்கு அருகில் தான் இப்படி ஆராய்ந்தேன். சாதாரண 'அப்பியாஸ்' என்ற வண்ணாத்திப் பூச்சி வகையில் ஆணிடத்தில் ஏதோ சற்று மணம் வீசுகிறது. வால் நீண்டு இருக்கும் 'பாபிலியோ டெமோலியஸ்' என்ற வகை வண்ணாத்திப் பூச்சியினிடத்தில் புது வைக்கோல் மணம் வீசும். எல்லா ஆண்களிடத்திலுமே இந்த மணம் வீசுகிறது. சற்று மென்மையாக வீசினால் இதுவே இனிமையாக இருக்கலாம். இந்த வகையில் பெண்களிடத்திலும் மணம் வீசுவது உண்டு. ஆனால் அவ்வளவு அதிகமாக இராது; மணமும் வேறு விதமாக இருக்கும்.

இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்த ஆஸ்டின் கிளார்க் என்பவரின் அநுபவம் இது: "30 ஆண்டுகளுக்கு முன் சில வண்ணாத்திப் பூச்சிகளைக் கவனித்தபோது இவைகளிடத்தில் சந்தன வாசனையும் சில சமயம் தேவதாரு வாசனையும் வீசின. இதோடு இறக்கையிலிருந்து பொடிபோல் ஏதோ ஒரு பொருள் உதிர்ந்தது. சமீபத்தில் இதைக் கூர்ந்து கவனித்திருக்கிறேன்" என்று அவர் சொல்லுகிறார். இதிலிருந்து வண்ணாத்திப் பூச்சிகளில் சிலவகைகளிடமாவது மலரைப்போல் ஒருவித மணம் வீசுகிறது என்று நிச்சயமாகத் தெரிகிறது.

நீலநிறத்திலும், செம்பு நிறத்திலும் இப்படிப் பல விதத்தில் சின்னஞ் சிறு வண்ணாத்திப் பூச்சிகள் அநேகம் உண்டு. இந்தச் சின்ன வகையில் ஓரளவு பெரிய வண்ணாத்திப் பூச்சி 3 அங்குல அகலத்துக்கு மேல் இராது. இதில் நடுத்தரமாக இருப்பது - இறக்கை விரித்தால் $1\frac{1}{2}$ அங்குல அகலம் உள்ளது தான் - அதிகம்; மிகச் சின்னது

½ அங்குல அகலம் இருக்கும். சின்னஞ் சிறியதாகவும் நுட்பமாகவும் இருக்கும் இந்த வண்ணாத்திப் பூச்சியிடந்தான் எளிதில் உணரக் கூடியபடி நல்ல மணம் வீசுகிறது. டாக்டர் டிக்ஸி, லாங்ஸ்டாஃப் தம்பதிகள் போன்ற ஆராய்ச்சியாளர்கள், "எந்தக் கலப்புமில்லாத அசல் சாக்கோலேட்டை மோந்தால் என்ன வாசனை வீசுமோ அதேமாதிரி இருக்கிறது இந்த வண்ணாத்திப் பூச்சிகளின் மணம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வண்ணாத்திப் பூச்சிகளின் இறக்கைகள் பளிங்குபோல் இருப்பவை தான். ஆனாலும் அவைகளின் மேல்புறம் நுண்ணிய வர்ணச் செதிள் களைக் காணலாம். இவைகளைத் தொட்டால் தும்புபோல் விரலில் ஒட்டிக்கொள்ளும். சில வகை வண்ணாத்திப் பூச்சிகளில் ஆண்களுக்கு இவை தவிர 'ப்ளூமூல்ஸ்' என்ற செதிள்களும் உண்டு. இவை இறக்கையின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கும். சில சமயம் இறக்கையிலுள்ள நரம்புகளில் இப்படி இருப்பதைக் காணலாம். ஆனாலும், பெரும்பாலும் பட்டை போலவும் திட்டுத் திட்டாகவும் அமைந்துள்ள பாகங்களில் இந்தச் செதிள்கள் அமைந்திருக்கும். அந்த அந்த வகைக்கு ஏற்றபடி இவை சில சமயம் மயிர்போலவும் வேறுவிதமாகவும் இருக்கும். இறக்கையிலுள்ள வாசனைக் கிரந்திகளுக்கும் இவைகளுக்கும் சம்பந்தம் உண்டு. இதனால்தான் ஆண்களிடத்தில் மலரின் மணம்போல் ஒருவித மணம் வீசுகிறது.

'மேவேட்' என்ற வகை வண்ணாத்திப் பூச்சிகளின் அடிவயிற்றுப் பாகத்தில் இப்படி மயிர் இருப்பது உண்டு. இதிலிருந்து நல்ல மணம் வீசும். இன்னும் சில வண்ணாத்திப் பூச்சிகளுக்கு இந்த மாதிரி மயிர் பின்னங் காலின் மேல் பாகத்தில் இருக்கும். வேறு சில ஆண்களிடம் வாசனை வீசும் செதிள்கள் இருப்பதோடு அடிப் பாகத்தில் இரு புறமும் நிறைய மயிர் இருக்கிறது. இறக்கையைப் பிரிக்கும்போது இந்த மயிர்கள் சுற்றிலும் பரவலாக அமையும். இந்த மயிர்களுக்கும் பூச்சியின் உடலிலுள்ள நீண்ட நரம்புக் குழாய்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. இந்தக் குழாய் வெளிப்பக்கம் புடைத்துக் கொள்ளும்போது அந்த மயிர்களும் பரவலாகக் காட்சியளிக்கும். இந்தமாதிரி சந்தர்ப்பங்களில்தான் வண்ணாத்திப் பூச்சிகளிடம் அதிக மணம் வீசுகிறது.

பெண் பூச்சியைக் கவர வரும்போது ஆணின் உடலில் மணம் கமழும். சற்று மோந்தாலேகூட அந்த மணத்தை நாம் உணர முடியும்.

இவைகளில் பெண்களிடத்திலும் மணம் வீசுவதுண்டு. ஆனால் அவ்வளவு எளிதில் அதை உணர முடியாது. ஆண்களிடத்திலும் எப்போதுமே இப்படி மணம் வீசும் என்றுசொல்வதற்கில்லை. காலையில் இளவெயிலில்பறக்கத்தொடங்கும் வண்ணாத்திப் பூச்சியிடம் வீசுகிற அளவு மணம், வெகு நேரம் பறந்து திரிந்த பூச்சியிடம் வீசாது. ஆணும் பெண்ணும் ஒன்றைச் சுற்றி ஒன்று பறந்து வட்டமிடும்போது காற்று எந்தப் பக்கத்தில் அடிக்கிறது என்று ஆண் கவனிக்கும். பிறகு தன்னிடத்திலுள்ள மணம் பெண் பூச்சியின் பக்கமாக வீசும்படி பார்த்துக்கொள்ளும்.

சில சமயம் ஆண்பூச்சி விடாமல் பெண்பூச்சி அருகில் வந்து இப்படி வட்டமிட்டபடி மணம் வீசும். அப்போது அது மலரின் மணம் போல் அப்படிப் பிரமாதமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. இந்த மணம் காம உணர்ச்சியைத் தூண்டுவது. இதேமாதிரி சில பிராணிகளில் பெண்களிடத்திலும் மணம் வீசுவதுண்டு. சில வண்ணாத்திப் பூச்சிகளில் ஆண்களிடத்தில் துர்க்கந்தங்கூட வீசுவதால் ஒரே மாதிரி எல்லா வண்ணாத்திப் பூச்சிகளிடத்திலும் மலரின் மணம் வீசுகிறதென்று கொள்ள முடியாது. சில வண்ணாத்திப் பூச்சிகளின் உடலில் அடி வயிற்றுக்கு அருகில் ஓர் உறுப்பிலிருந்து வரும் மணம் குடலைக் குமட்டும் 'பைரிட்' என்ற வகையைச் சேர்ந்த வண்ணாத்திப் பூச்சிகளிடங்கூட இந்த மாதிரி உறுப்பு உண்டு; அவற்றிலிருந்து வரும் மணமும் இதே மாதிரிதான் இருக்கும். கரப்பான் பூச்சி நாற்றம் என்கிறோமே, அதே மாதிரி ஒரு நாற்றம் வீசும். இது இந்த வகை வண்ணாத்திப்பூச்சிகளுக்கு ஒரு பாதுகாப்பு என்றே சொல்லவேண்டும். இவைகளை இரையாகக் கொள்ள வரும் மற்றப் பூச்சியோ பிராணியோ இரண்டொரு தடவை ருசி பார்த்துவிட்டால், அப்புறம் இவைகளை நெருங்குவதுகூட இல்லை.

## ஆசிரியர் செல்வாக்கு

ஒரு நூலாசிரியருடைய செல்வாக்கை நிர்ணயிக்க, அவருடைய நூல்களை ஐந்நூறு பேர் படிக்கிறார்களா, ஐந்து லட்சம் பேர் படிக்கிறார்களா என்று கணக்கிடத் தேவையில்லை. சரியான ஐந்நூறு வாசகரை அவர் பிடித்துவிட்டால் போதும்; ஐந்து லட்சம் பேர் தாமாகவே அவருக்கு வந்து சேர்ந்துவிடுவார்கள்.

—ஹென்ரி ப்ரூர் ஆடம்ஸ்

## பெண் போலீஸ்

சென்ற ஏழு வருஷங்களில் 500 ஜப்பானியப் பெண்களுக்குப் போலீஸ் ஜவான் வேலை கொடுத்தார்கள். அவர்களில் இன்னும் போலீஸ் உடுப்பில் இருந்து வரும் பெண்கள் 170 பேர்தான். 'பீட்'டில் இருந்து வேலை செய்யும் கஷ்டத்தால் மற்ற 330 பேரும் விலகி விடவில்லை. அவர்களில் நூற்றுக்கு 80 பேர் ஆண் போலீஸ் ஜவான்களைக் கலியாணம் செய்துகொண்டு விட்டார்கள்.

—'ஜப்பான் டைஜெஸ்ட்'

## நண்பன் யார்?

இது ஒரு சிறுவனுடைய அபிப்பிராயம்: உங்களைத் தெரிந்திருந்தும் எவன் உங்களிடம் பிரியமாயிருக்கிறானோ அவனே உங்கள் நண்பன்.

'—ஐரிஷ் டைஜெஸ்ட்'

# விஞ்ஞானி போஸ்

★



**''அவருக்கு ஒரு சிலை நிறுவ வேண்டும்'' என்று, உலகத்தின் பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டின் இவரைப்பற்றிச் சொன்னார். 'தாவரம், பிராணி ஆகிய அகில உயிர்களும் ஆதியில் ஒன்றே' என்று நிரூபிக்கும் உண்மைகளைத் தம் ஆராய்ச்சியால் விளக்கினவர் இவர்.**

விஞ்ஞானிகள் உலகத்திலே ஒருவிதத்தில் தனிப்பிறவி ஸர் ஜகதீச சந்திர போஸ். அவர் ஆராய்ச்சி முழுவதிலும், ஒரு கவியின் உள்ளத் துடிப்பைக் காணலாம்.

போஸின் தந்தை, பகவான் சந்திர போஸ், பரீத்புர் என்னும் ஊரில் உதவி கலெக்டராக இருந்தார். தொழில்கள் சிலவற்றை ஆரம்பிக்க முயன்று கைப்பணத்தைப் பறிகொடுத்த லட்சியவாதி அவர். மகனின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்தார். கல்கத்தாவில் பள்ளிப் படிப்பு முடிந்தவுடன், தாய் தன் நகைகளை விற்று அருமை மகனை வைத்தியப் படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்தாள். ஆனால் மலேரியாக் காய்ச்சல் அவருடைய வைத்தியப் படிப்புக்குத் தடையாயிற்று. பின்னால் அவர் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ், லண்டன் இரண்டு யூனிவர்ஸிடிகளிலும் படித்துப் பட்டம் பெற்றார்.

இந்தியா வந்ததும் அவருக்கு ஓர் ஏமாற்றம் காத்திருந்தது. ரிப்பன் பிரபு செய்த சிபார்சின் பேரில் அவருக்குக் கல்கத்தா யூனிவர்ஸிட்டியில் பௌதிகப் பேராசிரியர் பதவி கிடைத்தாலும் இந்தியராயிருந்ததால், அவருக்கு மூன்றில் இரண்டு பங்கு சம்பளமே போட்டார்கள். ஆயினும் போஸ் தாற்காலிகமாக அந்தப் பதவியை வகித்தார். அவருக்கு இதிலும் பாதிதான் சம்பளமாகக் கொடுத்தார்கள். இந்த அநீதியை எதிர்த்து, போஸ் மூன்று வருஷம் சம்பளத்தை வாங்கவே இல்லை. போஸுக்கு ஏற்ற ஓர் உத்தமி மனைவியாகக் கிடைத்ததால், கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொண்டு சந்தோஷமாக ஆராய்ச்சி நடத்த அவரால் முடிந்தது.

போஸ் எத்தனையோ விதமான விஞ்ஞானப் பொழுது போக்குகளில் ஈடுபட்டிருந்தார். என்றாலும், அவர்மனத்தைக் கவர்ந்த விஷயம், புதிதாக ஹெர்ட்ஸ் என்னும் ஜெர்மன் விஞ்ஞானி கண்டுபிடித்த ரேடியோ அலைகளே. அவற்றில் ஆரம்பித்த ஆராய்ச்சிதான், கடைசியில் மரஞ் செடி கொடிகளின் வாழ்க்கையை

காப்பிரைட்: விஞ்ஞானி (தமிழ்: மார்ச் '54), வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம், இலங்கை.

ஆராய்வதில் முடிந்தது. ஹெர்ட்ஸ் உண்டு பண்ணியதைவிட மிகவும் நீளம் குறைந்த ரேடியோ அலைகளை, போஸ் புதிய முறையில் உண்டு பண்ணினார். மேலும் இந்த அலைகளைக் கண்டு பிடிக்க மிகவும் புதிய அழகிய சிறிய கருவி ஒன்றையும் செய்து முடித்தார். இரண்டு வழியிலும் போஸின் சாதனை ஹெர்ட்ஸின் சாதனைக்கு ஒரு படி மேலே சென்றுவிட்டது.

ரேடியோ அலைகளை ஆராயும் போது, போஸுக்குப் புதிய விஷயம் ஒன்றில் சிந்தனை ஓடிற்று. ரேடியோ அலைகளைக் கண்டு பிடிக்க உபயோகித்த கருவி கொஞ்ச நேரம் அந்த அலைகளைக் கண்டு பிடித்துக் காட்டியவுடன், திறனற்றுப் போய்விடும். சிறிது நேரம் அதற்கு ஓய்வளித்தால், அது முன்போலத் தன் பழைய சக்தியைப் பெற்றுவிடும். இது, மனித உடலிலும் பிராணி உடலிலும் உள்ள தசைகளின் செயலைப் போலவே இருந்தது. தசைகள் அயர்ந்துவிடுவதும், இளைப்பாறிய பின் புதிய திறன் பெறுவதும் போலவே இந்தக் கருவியும் செய்தது. இதைக் கொண்டு போஸ் மனித உடலின் செயல்களுக்கும், மற்ற உயிரற்ற பொருள்களின் செயல்களுக்கும் உள்ள ஒற்றுமையை உணர்ந்துகொண்டார். இதை மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து புதிய உண்மைகளைக் கண்டார்.

செடிகளிலும், மனிதர் மிருகங்களிலும், எல்லாவற்றிலும் பொதுவாக உள்ளது 'ப்ரோடோப்லாஸம்' என்னும் பொருளே. ஆகவே, இந்த இரண்டு வகை இனங்களுக்கும் பொதுவான சில குணங்கள் இருக்க வேண்டும். அவைகளைப் பிரத்தியட்சமான பலவிதச் சோதனைகளால், போஸ் கண்கூடாகக் காண்பித்தார். மின்சக்தி உட்பாய்ந்து செல்லும்போது, மிருகங்களின் தசைகள் டக்க வாட்டில் சுருங்கும். செடிகளின் தசைகளும் அப்படியே சுருங்குகின்றன என்று அவர் காண்பித்தார். இரண்டாவதாக, வெப்பம், மயக்க மருந்து, விஷப் பொருள் இவைகளைக் கொடுத்தால், செடி கொடிகளும் பிராணிகளைப் போலவே செயல் புரிகின்றன என்று காட்டினார். அடுத்தபடியாக, மரஞ் செடிகளில் எப்படி அவற்றின் 'ஸாப்' (தாவரப்பால்) கீழிருந்து மேலேறுகிறது என்பதைப்பற்றியும் சில புதிய உண்மைகளை அறிந்து சொன்னார். 'ஸாப்' மேலே செல்லுவதன் காரணம் இலைகளில் உள்ள சாறு நீராவியாவதும், வேர்களின் அமுக்கமும் மட்டுமல்ல; மனிதர் உடம்பிலும், மிருகங்களின் உடம்பிலும் ரத்தம் குப்குப் என்று பாய்ந்து செல்வது போலவே இதுவும் பாய்ந்து செல்லுகிறது என்று போஸ் காண்பித்தார்.

போஸ் ரிடையராகும் தருணத்திலேயே, அரசாங்கம் அவருக்குப் பெரிய தீங்கிழைத்ததை அறிந்தது. முன்பே பெரிய பதவிக்கு அவரை நியமித்திருக்க வேண்டும் என்று உணர்ந்து, முன் கொடுக்காத ஊதியத்தையெல்லாம் சேர்த்து அவருக்குக் கொடுத்தது. இந்தப் பணத்தையும் வேறு நண்பர்கள் அளித்த பணத்தையும் போஸ் தமக்கென்று வைத்துக்கொள்ளாமல், தம் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த ஓர் ஆராய்ச்சிச்சாலை அமைக்க ஏற்பாடு செய்தார்.

போஸ் வெளிநாடுகளுக்குச் சென்று, தம் ஆராய்ச்சிகளை விளக்கிப் பெரிய பாராட்டுகளை யெல்லாம் பெற்றார். வெளிநாடுகளிலிருந்தும் பல விஞ்ஞானிகள் அவருடைய ஆராய்ச்சிச் சாலைக்கு வந்து, அங்கே நடக்கும் ஆராய்ச்சிகளைக் கண்டு வியந்து சென்றார்கள். 1938-இல் அவர் இறந்தார். அதற்குப் பின்பும் அங்கே இந்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

**போ**ஸைப்பற்றிய இந்தக் குறிப்புகள், திரு. பொ. திருகூட சுந்தரம் பிள்ளையவர்கள் தொகுத்த வரலாற்றிலிருந்து எடுத்தவை:

பரீத்புர் என்னும் ஊரில் கோயிலுக்கருகில் ஓர் ஈச்சமரம் நின்றது. காலையில் கோவிலில் வழிபாட்டுக்காக மணி அடிக்கும் போது அந்த மரம் கடவுளை வணங்குவதுபோல அடியோடு கீழே சாய்ந்துவிடும். மக்கள் அதை ஒரு புதுமையாக எண்ணி வந்தார்கள். அதற்குப் பலி ஊட்டி அந்த உணவை உண்டால், நோய்கள் தீருமென்று எண்ணினார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவுடன் போஸ் காலையிலும் மாலையிலும் அதைப் புகைப் படம் எடுக்கச் செய்தார். விஷயம் உண்மைதான் என்று அறிந்து கொண்டார். பிறகு அதன் காரணத்தைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு கருவி அமைத்தார். அந்த மரம் வெப்பம் மிகும்போது சாய்கிறதென்றும் வெப்பம் குறையும்போது நிமிர்கிறதென்றும் அந்தக் கருவியின் மூலம் அறிந்தார். 'இந்த மரம் மட்டும் இப்படி நடந்துகொள்வது ஏன்?' என்று சிந்தித்தார். தம்முடைய கருவியைக் கொண்டு பிற மரங்களையும் பரிசோதித்தார். அவைகளும் கண்ணுக்குத் தெரியாத அளவில் அந்த ஈச்ச மரத்தைப்போலவே நடந்துகொள்வதைக் கண்டார். மரங்கள் வெப்பத்தின் காரணமாக மட்டும் இப்படி நடந்துகொள்வதில்லை என்றும், சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கபடியும் நடந்துகொள்கின்றன என்றும் அறிந்தார்.

**பொ**துவாகக் குளங்களில் உண்டாகும் அல்லி அரும்புகள் மாலையில் விரிகின்றன. இரவு முழுவதும் விரிந்திருந்து காலையில் குவிந்து விடுகின்றன. இதன் காரணம் என்ன என்று போஸ் ஆராயலானார். சந்திரன் அல்லியின் காதலன் என்றும், அதனால் நிலா ஒளி பட்டதும் அல்லி மன மகிழ்ந்து விரிகிறதென்றும், இரவு முழுவதும் சந்திர வெளிச்சத்தில் களிப்போடு கண் விழித்திருக்கிறதென்றும், காலையில் சூரியன் தோன்றியதும் அவனுடைய கதிர்கள் படவே பயந்து போய்க் கண்ணை மூடிக் குவித்துக்கொள்கிறதென்றும் நம்முடைய நாட்டுக் கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள்.

இவை உண்மைதானா என்று போஸ் யோசித்தார். சந்திரன் வராத அமாவாசை நாளில் விளக்கைக் கையிலேந்திக்கொண்டு அல்லிக் குளத்துக்குச் சென்றார். அங்கே அல்லிப் பூக்கள் அழகாக மலர்ந்திருந்தன. காலையில் சென்று பார்த்தார். சூரியன் எழுந்த பிறகும் அல்லி மலர்கள் குவியாமலே இருந்தன. அவைகள் காலை 11 மணிக்குத்தான் குவியத் தொடங்கின. ஆகவே,

கவிஞர்கள் கூறும் காரணம் தவறு என்று கண்டார்.

வெயில், காற்று, மழை இவை தாக்காதபடி ஒரு செடியைக் கண்ணாடிப் பந்தலின் கீழே போஸ் மிகவும் கருத்தாக வளர்த்தார். ஆனால் அதற்குப் போதுமான உரம், நீர், காற்று, வெயில் இவையெல்லாம் கிடைத்தபோதிலும் அது நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே வந்தது. இதன்பின் அவர் அந்தச் செடிக்கு மெதுவாக அடிமேல் அடியாகப் பல அடிகள் கொடுத்தார். அவ்வளவுதான். செடி மெலிவு நீங்கிச் செழிப்பாக வளரத் தொடங்கியது.

தமிழ் நாட்டில் மாமரங்கள் நன்றாகக் காய்க்கவில்லையானால், அதன் அடி மரத்தைச் சுற்றிக் கத்தியால் சிறிதளவு கொத்தி விடுவது வழக்கம். அப்படிக் கொத்திவிட்ட மரங்கள் பிறகு நன்றாகக் காய்க்கும் என்று சொல்வார்கள். மரங்களும் செடிகளும் எந்த விதமான வருத்தமும் இல்லாது வளர்ந்தால் அவை சீக்கிரம் மெலிந்து இறந்து போகின்றன. அப்படியேதான் சொகுசாய் வாழும் மனிதர்களும் நல்ல வீரர் ஆக முடியாமல் எந்தச் சிறு துன்பத்தையும் பொறுக்க இயலாத கோழைகள் ஆகிவிடுகிறார்களென்று போஸ் கூறுகிறார்.

இங்கிலாந்தில் மிகப் பெரிய நாடகாசிரியராக இருந்த பெர்னார்ட் ஷா, தம் நூல்களின் மேல், 'மிகச் சிறிய உயிர்நூல் புலவரிடருந்து மிகப் பெரிய உயிர்நூல் புலவருக்கு' என்று எழுதி அவைகளைப் போஸுக்கு அனுப்பி வைத்தார்.

பிரான்ஸ் நாட்டில் நோபெல் பரிசு பெற்ற பெரிய நாவலாசிரியர் ரொமேன் ரொலண்டு தம் நூலின் மேல் 'புதியதோர் உலகத்தைக் காட்டிய பெரியாருக்கு' என்று எழுதி அதைப் போஸுக்கு அனுப்பி வைத்தார்.

## பகுத்தறிவும் பக்தர்களும்

ஒரு பகுத்தறிவு மகாநாட்டில் சுயமரியாதைத் தலைவர் எஸ். ராமநாதன், 'பகுத்தறிவுக்குப் பொருந்தாத முரணான கடவுள் பாடப் புத்தகங்களைப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கலாகாது' என்பதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதைத் திரு. வி. க. ஆமோதித்தார். சபையோர் ஆச்சரியப் பட்டார்கள். திரு. வி. க. வணக்கத்தோடு சொன்னார்; "நாயன்மார்களும் ஆழ்வார்களும் பகுத்தறிவுக்கு முரணாகப் பாடவே இல்லை. அதனால்தான் நான் இதை ஆமோதிக்கிறேன்."

—'நாட்டாண்மை'

## அணுக்குண்டு நிலைத்தது

அணுக்குண்டு வந்து நிலைத்துவிட்டது. சரி. நாம் நிலைப்போமா?

—'ஐரிஷ் ந்யூஸ்'

# சஞ்சீவிக் குளம்

திருக்கழுக்குன்றத்தின் அருகில் மலைச்சாரலில் வேட்டையாடப் போயிருந்தான் ஓர் அரசன். அவன் ஒரு காலத்தில் கண்ணுக்குப் பார்ப்பதற்கு வெகு லட்சணமாக இருந்தவன். ஆனால் நாளடைவில் முன்பிறப்பு வினையாலோ என்னவோ, ஒரு பயங்கர நோய்க்கு ஆளாகிவிட்டான். இருந்தாலும் வேட்டையிலுள்ள ஆர்வத்தால் அவன் இன்னும் முன்போலவே அதில் ஈடுபட்டுத்தான் வந்தான்.

அரசனுடைய வேட்டை நாயைக் காவலாட்கள் முதலில் மலைச்சாரலில் விட்டு ஏதாவது வேட்டை கிட்டுகிறதா என்று பார்த்து வர அனுப்புவது வழக்கம். அந்த நாய், வேட்டையைக் கண்டால், தான் இருக்கும் இடத்திலிருந்து குரைக்கும். உடனே அந்தத் திசையை நோக்கி அரசனும் காவலாட்களும் செல்வார்கள்.

அப்பேர்ப்பட்ட உயர்சாதி வேட்டை நாய்க்கும் உடம்பு முழுதும் சொறி ஏற்பட்டுத் தவித்து வந்தது. இருந்தாலும் எஜமான விசுவாசம் காரணமாக அரசனுடைய பரிவாரத்துடன் தவறாமல் போய் வரும். அன்று காலை ஏவிவிட்ட நாய், நடுப்பகலாகியும் திரும்பவில்லை. அரசனும் அவன் பரிவாரத்தாரும் வெகு நேரம் அந்த நாய்க்காகக் காத்திருந்தார்கள். கடைசியில் பிற்பகல் பொழுதும் வந்துவிடவே தாங்களே காட்டுக்குள் சென்று பார்ப்பது என்று முடிவு செய்தார்கள். சற்றுத் தூரம் உட்புறமாகச் சென்றதும் தொலைவில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

அரசன் குதிரைமேல் சவாரி செய்தபடி வெகு வேகமாகக் காட்டின் அடர்ந்த பாகத்தில் நுழைந்தான். நெருங்க நெருங்க நாயின் குரைப்பு அதிகமாகக் கேட்டது. அரசன் நாய்க்கு என்ன ஆபத்தோ என்று பின்னும் துரிதமாக அத்திசை நோக்கிச் சென்றான். கடைசியில் ஒரு புதரண்டை வந்ததும் நாயின் உருவம் தெரியாவிட்டாலும் அதன் குரைப்புக் கேட்டது. அந்தப் புதருக்கு அருகில் ஒரு பெரிய குளம் இருந்தது. நாய் ஒரு கொடிக்குள் சிக்கி வெளி வர முடியாமல் தவித்தது. அரசன் அதை மெல்லக் கொடிப் பிணைப்பிலிருந்து விடுவித்தான்.

இதென்ன அதிசயம்! நாய் சொறி நீங்கி வெகு சுத்தமாகக் காட்சியளித்தது. விடுபட்ட நாய் நேராகக் குளத்தில் துழாவ ஆரம்பித்தது. இதில்தான் ஏதோ விசேஷம் இருக்கவேண்டுமென்று அரசன் தானும் குளத்தில் இறங்கினான். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் உடல் வெகு சுத்தமாகிவிட்டது. அந்தப் பயங்கர நோயும் நீங்கிவிட்டது.

—'கிராம ராஜ்யம்'

கும்பகோணத்துக்காரர் மலாய் நாட்டை வர்ணிக்கிறார்.

# நான் வாழும் மலாயா

## லெ. நடராஜன்

நான் ஒரு கும்பகோணத்தான். இருபத்தைந்து வருஷங்களாக மலாய் நாட்டில் உத்தியோக ஜீவனம் செய்து வருகிறேன். இரண்டு வருஷங்களுக்கொரு தடவையாவது கும்பகோணத்தைப் பார்க்காவிட்டால் எனக்குத் தூக்கம் வராது. கும்பகோணத்தின் அழகு, சங்கீதம், திறமை, நாகரிகம், கலாசாரம், பண்பு, வெள்ளி வெண்கலப் பாத்திரங்கள், மகாமகம், காலேஜ், டிகிரி காபி இவைகளில் பொறாமை மனப்பான்மைகொண்ட மற்ற ஊர்க்காரர்கள், "இவன் கும்பகோணத்தான்; ஜாக்கிரதை!" என்று சொல்லுகிறார்களே, அந்தப் பேச்சு, உண்மையில் கும்பகோணத்தின் பெருமையைத்தான் குறிக்கிறது.

மலாய் நாட்டில் சுமார் பதினைந்து நாட்டுப் பாஷைகளைப் பேசுகிறார்கள். ஆனால் நகரங்களில் பெரும்பாலோர் சாதாரணமாகப் பேசுவது ஆங்கிலந்தான். என்னதான் ஆங்கிலம் பேசினாலும் அதற்காக என் தாய் மொழியான தமிழை மறந்துவிடுவேனா? அதில்லை. தற்சமயம் தமிழ் நாட்டில் இந்தியா சுதந்தரம் அடைந்த பிறகு தமிழுக்கு ஒரு தனிப் பெருமை, சலுகை, பலம் ஏற்பட்டிருக்கிறது. அது நியாயமே. இருந்தாலும் சில தமிழர்கள் உபயோகிக்கும் கடுமையான நடை, கொடுந்தமிழ், அடுக்கு மொழி இவைகளைப் பார்த்தால்மட்டும் என்னவோ எனக்குப் பயமாயிருக்கிறது. நான் 'பென்ஷன்' பெற்றுத் தாய் நாடு திரும்பி வரும்போது அங்கே வழங்கும் தமிழ் எனக்கே புரியாதோ என்று தோன்றுகிறது.

மலாய் நாட்டை யுத்தத்துக்குப் பிறகு பெடரேடட் மலாய் நாடு, சிங்கப்பூர் காலனி என இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். இருந்தாலும், நான் எழுதுவதில் மலாய் நாடு என்பதில் சிங்கப்பூரையுந்தான் சேர்த்துக்கொள்கிறேன். இது ஒரு தீபகற்பம்; அதாவது, மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த சிறிய நாடு. சுமார் 600 மைல் நீளம்; 200 மைல் அகலம். மூன்றில் இரண்டு பங்கு காடு. சிங்கப்பூர், கோலாலம்பூர், பினாங்கு, ஈப்போ, மலாக்கா, அலோர்-ஸ்டார் என்ற ஆறு முக்கியப் பட்டணங்களைக் கொண்டது மலாயா. ஜனத்தொகை 65 லட்சம். சீனர், மலாய்க்காரர் இவர்களின் ஜனத்தொகை ஏறக்குறையச் சமம். இந்தியர் 7 லட்சம். மற்றவர் 4 லட்சம். ஐரோப்பியர்மட்டும் சுமார் ஐம்பதினாயிரம்.

**மூலம்: குடந்தை நகராட்சியின் கலைக் கைத்தொழில் பொருட்காட்சி நினைவு மலர் - 1954; (தமிழ்).**




சிங்கப்பூரின் ஜனத்தொகை சுமார் 12 லட்சம். இங்கே சுமார் ஐம்பதினாயிரம் மோட்டார்க் கார்கள் சதா ஓடிக்கொண்டிருக்கின்றன. துறைமுகம் பெரியது; இயற்கையானது. தினசரி சுமார் 20 கப்பல்கள் வந்து போகின்றன. உலகத்தில் பெரிய துறைமுகங்களில் இதை ஐந்தாவதாகச் சொல்லுகிறார்கள். அழகிய பட்டணம். 20, 30 அடுக்கு மெத்தைக் கட்டிடங்கள் பல உண்டு. இதைக் கிழக்கு லண்டன் என்று சொல்லுவார்கள். எங்கும் மேல்நாட்டு நாகரிகம். பாஷை ஆங்கிலம். சிங்கப்பூரில் சுமார் 80,000 இந்தியர் இருக்கிறார்கள். இவர்களில் 70,000 பேர் தமிழர். பெரும்பாலான தமிழர் நகரசபை, துறைமுகம், மராமத்து இலாகா முதலிய இடங்களில் தினசரிச் சம்பளத்துக்கு வேலை செய்யும் தொழிலாளர். மற்றவர் உத்தியோகஸ்தர்கள், டாக்டர்கள், வியாபாரிகள், வக்கீல்கள்.

சிங்கப்பூரில் சீனரே அதிகம். அவர்கள் தொகை 8 லட்சம். எங்கும் சீனர். ஆனால் அவர்கள் ஐரோப்பியர்களைப்போலவே மேல்நாட்டு நாகரிகத்தில் வாழ்கிறார்கள். உலகத்தில் பல பாகங்களிலிருந்தும் பல மதஸ்தர்கள் இங்கே வந்து குடியேறி வியாபாரம் செய்து சுகமாக வாழ்கிறார்கள். பல மதஸ்தர்களும் சகோதரர்கள் போலவே சந்தோஷமாக வசிக்கிறார்கள். தமிழரில் பெரும்பாலோர் இந்துக்கள்; ஏழைகள். இந்திய முஸ்லிம்களும் பாகிஸ்தான் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். எல்லாரும் மிக மிக ஒற்றுமையாக வாழ்கிறார்கள். மலாய்க்காரரும் முஸ்லிம்கள்தான். வித்தியாசம் இல்லாமல் சகோதரர்கள் போல் பழகுகிறார்கள். இந்துக்களுக்குச் சுமார் பத்துக் கோவில்கள் இருக்கின்றன. உற்சவங்கள் சிறப்பாக நடக்கின்றன. தைப்பூச உற்சவம் மிகவும் விமரிசையாக இருக்கும். பல ஊர்களில் தீமிதி கூட மிதிக்கிறார்கள். 'தமிழ் முரசு', 'தமிழ் நேசன்' என்ற இரண்டு தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் நன்றாக நடக்கின்றன. 'தமிழர் திருநாள்' என்று, புதிதாகச் சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகத் தைப் பொங்கலை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். 'மலேயாத் தமிழ்ப் பண்ணை' என்ற சங்கத்தின் ஆதரவில் வருஷந்தோறும் தமிழ் இலக்கிய மகாநாடு மாதர் பகுதியுடன் விமரிசையாக நடந்துவருகிறது. பரதநாட்டியம், சங்கீதம், பேச்சுப் போட்டி, வியாசப் போட்டி

முதலிய கலாசார அபிவிருத்தி சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

தமிழ்ப் படம் ஒவ்வொன்றையும் பல தடவை பார்த்து ரசிக்கிறார்கள். சில தமிழ்ப் படங்களை மற்ற ஜாதியினர் - சீனர், யுரேஷியர், மலாய்க்காரர்கள்கூட - பார்த்து ஆனந்திக்கிறார்கள். வடிகட்டிய உபயோகமற்ற தமிழ்ப் படத்துக்குக்கூட நஷ்டமில்லாமல் இந்த நாட்டில் வசூலாகி வருகிறது. இதற்குக் காரணம், கடல் கடந்த தமிழனின் தாய்நாட்டு அபிமானந்தான். தமிழர் நன்றாகச் சம்பாதிக்கிறார்கள்; நன்றாகச் செலவும் செய்கிறார்கள். கஷ்டப்பட்டு மிச்சப்படுத்தித் தாய் நாட்டுக்கும் பலர் பணம் அனுப்பி வருகிறார்கள். சிங்கப்பூரில் உள்ளபடிதான் மற்றப்பாகங்களிலும் தமிழர் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அகில இந்திய ரேடியோ டில்லியிலிருந்து ஒலிபரப்பும் தமிழ் நிகழ்ச்சிகளை இங்குள்ளவர் மிகவும் ஆர்வத்துடன் கேட்கிறார்கள்.

இங்கே மதுபான விலக்கில்லை. பார்க்கப் போனால் மதுபானத்துக்குக் கொஞ்சம் மதிப்பும் செல்வாக்கும் இருப்பதாகவே சொல்ல வேண்டும். மிதமாகக் குடிப்பவர்களின் எண்ணிக்கை மிதமாகவே தான் இருக்கிறது. பிராந்தி, விஸ்கி முதலிய சாராயங்களை, சோடா, லெமனேட் போலச் சாதாரணமாகச் சாப்பிட வசதியாகப் பல கடைகள் இருக்கின்றன. சிகரெட் சர்வ சாதாரணம். இவைகளில் பழக்கமில்லாதவரைப் பழைய பஞ்சாங்கம் என்று கூடப் பலர் நினைக்கிறார்கள். இந்தப் பழக்கங்களில் நம் தமிழ் அன்பர்கள் பின்வாங்கவில்லை.

இந்தியரின் ஜனத் தொகை ஏழு லட்சம். அதில் தமிழர் சுமார் ஆறு லட்சம். இந்த ஆறு லட்சம் பேரில் சுமார் மூன்று லட்சம் பேர் ரப்பர்த் தோட்டங்களில் புல், பால் வெட்டும் தொழிலாளராக இருக்கிறார்கள். ஆண், பெண் சகலரும் நன்றாகச் சம்பாதிக்கிறார்கள். ரப்பர் போன வருஷம் வரையில் மிக உயர்ந்த விலைக்கு விற்றது. மலாய் நாடு செல்வத்தில் கொழித்தது. ஆனால் நம் தமிழரில் பெரும்பாலோர் பணத்தைச் சேமித்து வைக்கவில்லை. காரணம், ரப்பர்த் தோட்டங்களிலுள்ள கள்ளுக்கடைகளும் சீனச்சாராயக் கடைகளுமே. தோட்டத் தொழிலாளரை முன்னுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் இந்த நாட்டுச் சர்க்கார் சமீபத்தில் இனாமாக நிலம் கொடுத்துப் பலரை விவசாயத்தில் ஈடுபடச் செய்து வருகிறார்கள். இது மிகவும் பாராட்டத் தக்கது.

சாதாரண டாக்டர்களைவிட, பல் டாக்டர்களுக்குத்தான் வரும்படி அதிகம். இங்கே ஸ்திரவாசிகளாகத் தங்கிய இந்தியரில் பலர் எண்ணெய் ஸ்நானத்தையும் மோரையும் விட்டுவிட்டார்கள். சில இந்திய வாலிபர், சீனப் பெண்களை விவாகம் செய்துகொண்டு வாழ்கிறார்கள். இங்கே ஜாதி வித்தியாசமே இல்லை. மத வித்தியாசங்கூட இல்லையென்று சொல்லலாம். குப்புசாமி ஐயர் குமாரத்தி கௌஸ் பீபீ அம்மாளை, வேலு நாயர் மகன் சுப்பிரமணியப் படையாச்சிக்கு, மாப்பிள்ளையின் பாட்டனார் ஜேம்ஸ் வீட்டில் விவாகம் செய்விப்பதாக, தாராசிங் கையெழுத்திட்ட கலியாணப் பத்

திரிகை வரும். இந்த மாதிரியான கலப்பு மணங்கள் அநேகம். மலாய் நாட்டு ஜனத்தொகையில், இப்போது 115 ஆண்களுக்கு 100 பெண்கள் இருக்கிறார்கள். 1931-இல் 171 ஆண்களுக்கு 100 பெண்கள்தான் இருந்தார்கள். இப்போது பெண்களுக்கு இங்கே அவ்வளவாகப் பஞ்சமில்லை.

ஜனனம் அதிகம்; மரணம் குறைவு. ஜனன விகிதம் 47.5. மரண விகிதம் 11.20. வருஷத்துக்கு வருஷம் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. சௌக்கியமான பூமி. வருஷத்தில் சுமார் 185 நாட்களில் 125 அங்குல மழை கலந்து பெய்கிறது. இங்கே பருவ காலங்கள் இல்லை. மழை அடிக்கடி பெய்கிறது. எங்கே பார்த்தாலும் எப்போதும் பச்சைப் பசேலென்று இருக்கிறது. ரப்பரும் ஈயமுந்தான் முக்கியமானவை. நெல் விளைவில் 40 சதவிகிதமே இங்குள்ளவருக்குப் போதுமானது. ஒரு மனிதனுக்குச் சராசரி மாத வரும்படி சுமார் ரூ. 60. இந்தியாவிலோ அது பத்து ரூபாய்கூட இல்லை. சென்ற 6 வருஷமாகப் பயங்கரவாதிகள் என்ற கூட்டத்தார் - இவர்களைக் கம்யூனிஸ்ட் என்கிறார்கள் - இந்த நாட்டுக்குத் துன்பம் கொடுத்து வருகிறார்கள்; காட்டில் ஒளிந்து வாழ்கிறார்கள். திடீரென்று துப்பாக்கியால் மோட்டார், ரெயில் வண்டி இவைகளைத் தாக்கிக் கேடு புரிகிறார்கள். இவர்களை அடக்குவதற்காகச் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் இவர்களின் அட்டகாசம் இன்னும் நின்றபாடில்லை. ஏதோ கொஞ்சம் குறைந்து வருகிறது. சர்க்கார் இதற்காக நாள் ஒன்றுக்குச் சுமார் 6 லட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள். இந்தப் பயங்கரக் கூட்டத்துக்கு உண்மையில் அரசியல் கொள்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை; ஜனங்களின் ஆதரவும் இல்லை. இதனால் ஒரு நன்மை. காடுகள் நாடுகளாக மாறி வருகின்றன. ஏழைகள் பலர் சீர்திருத்தம் அடைந்து வருகிறார்கள்.

தமிழருக்கிடையில் நாட்டுக் கோட்டை நகரத்தார் என்ற செட்டியார்கள் லேவாதேவித் தொழில் செய்துகொண்டு வாழ்கிறார்கள். இவர்களுக்குச் சுமார் 30 கோடி ரூபாய் பெறுமான சொத்துக்கள் இங்கே இருக்கின்றன. இவர்கள் ஒவ்வோர் ஊரிலும் நல்ல இந்துக் கோவில்கள் - முக்கியமாய் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில்கள் கட்டி மிக விமரிசையாக நிர்வகித்து வருகிறார்கள். தமிழ்ப் படங்களும், அகில இந்தியா ரேடியோவும் இங்கே தமிழ்ப் பாஷையைக் காப்பாற்றிக்கொண்டு வருகின்றன. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இந்த நாட்டில் விவாகம்செய்துகொள்வதில்லை. ஒன்றிரண்டு பேர்களைத் தவிர மற்றவர் ஒழுக்கம், சிக்கனம், தேச பக்தி இவை மிகுந்தவர்.

நகரங்களில் வசிக்கும் தமிழர்களுக்கிடையில் விவாகமாகாத ஆண்களும் பெண்களும் நிறைய இருக்கிறார்கள். ஆண்கள் சிலர், சீனப் பெண்களைக் கட்டிக்கொள்வதில் மோகமுள்ளவர்களாக இருக்கிறார்கள். பெண்கள் சிலர் வயது வந்தும் தக்க மாப்பிள்ளை அகப்படாமல் தவிக்கிறார்கள். இவர்

களில் பலர் இந்தியாவையே பார்க்காதவர்களாகையால், இந்தியாவுடன் விவாக சம்பந்தம் வைத்துக்கொள்ளப் பயப்படுகிறார்கள். இந்த நிலையில், இந்தியாவிலிருந்து தக்க நல்ல காரணங்கள் இருந்தால் ஒழிய இந்த நாட்டில் பெண் கொடுக்கவோ, எடுக்கவோ யோசிப்பது அவ்வளவு நல்லதல்ல. பழைய சொந்தம், நிச்சயமாய் நல்ல மாப்பிள்ளை, நிச்சயமாய் நல்ல பெண், நல்ல குடும்பம் என்று வெகு நன்றாய்த் தெரிந்தாலொழியப் பணத்துக்காகமட்டும் இங்கே வந்து கொள்வினை கொடுப்பினை செய்துகொள்ள நினைப்பது அவ்வளவாக அழகல்ல. இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்து ஸ்திரவாசிகளாகத் தங்கி வாழும் தமிழர் குடும்பங்கள் பல, மிக மிக உத்தமமாக இருக்கின்றன. 'ஆரறிவார் நல்லாள் பிறக்குங் குடி?' என்பதுபோல நல்ல பெண்கள், நல்ல பையன்கள் எங்கும் இருக்கிறார்கள். இருந்தாலும், ஒரு நாட்டை விட்டு, கடல் தாண்டி மற்றொரு நாட்டில் பெண் கொடுக்கவோ எடுக்கவோ யோசிக்கும்போது நன்றாய்க் கவனித்து ஆராய்ந்துதான் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். மலாய் நாட்டை ஒவ்வோர் இந்தியனும் ஒரு தரமாவது சுற்றிப் பார்ப்பது நல்லது. அதனால் அவனுடைய அறிவும் தெளிவாகும்; மனமும் உற்சாகம் அடையும்.

## விவாக வெற்றி

விவாகம் நடந்த ஐம்பதாவது வருஷத்தில் கொண்டாடும் தங்க விழாவைக் காலஞ் சென்ற ஹென்ரி ஃபோர்டு கொண்டாடினார்.

அப்போது ஒரு பத்திரிகை நிருபர், "தங்கள் விவாக வெற்றிக்கு என்ன காரணம்?" என்று அவரைக் கேட்டார்.

"என் மோட்டார்க் கார் வெற்றியின் காரணம் என்னவோ அதுவே தான் இதன் காரணமும். ஒரே மாடலை விடாமல் பிடித்துக்கொண் டிருக்கிறேன்" என்றார் ஃபோர்டு.

—'தி ஐரிஷ் டைஜெஸ்ட்'

## அப்பாவின் யுக்தி

அடைப்புப் போட்ட முற்றத்தில் என் இரண்டு வயதுச் சிறுவனை விட்டு விளையாடச் சொல்லி, கதவை மூடுவேன். அவன் ஓரேயடியாய்க் கூச்சலிட்டு அழுவானே தவிர விளையாட மாட்டான்.

ஒரு நாள் என் கணவர் அப்படி முற்றத்தில் விட்டுக் கதவை அடைத்தார். அன்று அவன் அழவே அழாமல் விளையாடிக்கொண் டிருந்தான். இதற்கு என் கணவர் சொன்ன காரணம் இதுதான்:

"அடே, உன் அம்மா உள்ளே வந்துவிடப் போகிறாள், அப்படி வராமல் கதவைச் சாத்திப் பூட்டி விடுகிறேன் என்று சொல்லி வைத்தேன்" என்றார்.

எல். ஓ. ஓ., 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்.



# வேலூர்க் கோட்டை

**எம். கே. ரங்கஸ்வாமி ஐயங்கார்**

**சரித்திரப் பிரசித்தமான வேலூர்க் கோட்டையில் உள்ளது ஜலகண்டேசுவரர் கோயில். அரிய கல் சிற்பங்கள் அதில் இருக்கின்றன.**

விக்கிரகம் இல்லாத கோயில், நீர் இல்லாத ஆறு, சேனை இல்லாத கோட்டை இந்த மாதிரி ஒன்றுக்கொன்று முரணாக விளங்கும் ஊர் ராயவேலூர். இந்தக் கோயில், கோட்டை, ஊர் வரலாறுகள் எல்லாமே ரசமானவை. பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு வேலங் காட்டுக்கருகில் தோன்றியதால்தான் இதற்கு இந்தப் பெயர் வந்தது. பொம்மி ரெட்டி என்பவன் இந்தக் கோட்டையையும் கோயிலையும் கட்டினான். பின்னால் விஜயநகர மன்னர்கள் ஆண்ட காலத்தில் இவைகளைப் பின்னும் விஸ்தாரமாகக் கட்டினார்கள்.

பழைய வரலாறு இதுதான்: பொம்மி ரெட்டி அந்தக் காட்டில் வேட்டையாடப் போயிருக்தான். அப்போது ஒரு முயல், தான் ஒளிந்திருந்த இடத்திலிருந்து ஓடிவந்தது. பொம்மி ரெட்டியின் வேட்டை நாய் அதைத் துரத்தவே, அது ஓர் எறும்புப் புற்றைச் சுற்றிச் சுற்றி வந்தது. திடீரென்று, "இந்த எல்லையில் ஒரு கோயில் கட்டு" என்று அசரீரி கேட்டது. பிறகு

**காப்பிரைட்: ஹிந்து (ஆங்கிலம்: 28-2-'54), சென்னை.**



கல்யாண மண்டபத்தில் உள்ள ஒரு சிற்பம்

வட இந்தியாவிலிருந்து ஒரு சிற்பியை வரவழைத்து அங்கே கோயில் கட்டினன் பொம்மி ரெட்டி. கி. பி. 1274-இல் தொடங்கிய கோயில் கட்டிட வேலை முடிய 7 ஆண்டுகள் ஆயின.

சிற்ப சாஸ்திரத்தின்படி கோட்டைகளில் மூன்று வகை உண்டு: (1) ஜலதுர்க்கம்; இது ஆற்றங்கரையோரமோ கடற்கரையோரமோ இருக்கும். (2) கிரி துர்க்கம்; இது மலைமேல் இருக்கும். (3) வனதுர்க்கம்; இது காட்டோரம் இருக்கும். இவைகளில் வேலூர்க் கோட்டை வேலங்காட்டோரம் இருந்ததால் வனதுர்க்கம் என்ற வகையைச் சேர்ந்தது.

துறு கல்லால் அமைந்து இன்னும் அப்படியே உறுதியாகவும் கம்பீரமாகவும் விளங்குகிறது இந்தக் கோட்டை. கோட்டைக்கு மேல் மரங்களின் உச்சி பச்சைப் பசேல் என்று தெரிவதும், கீழே அகழியில் திட்டுத் திட்டாகத் தாமரை இலைகள் காட்சி அளிப்பதும் கோட்டைக்கு இன்னும் அழகு தருகின்றன. வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்க்கும்போதும் கோட்டை மதிலுக்கு மேல் கோயில் கோபுரம் நிமிர்ந்து நிற்கும் காட்சி பலவகையில் கண்ணைக் கவரும். அகழிக்கும் கோட்டைக்குள் இருக்கும் 'சூரிய குள'த்துக்கும் வழி உண்டு. இந்த அகழியில் முன் காலத்தில் முதலைகள் ஏராளமாக இருந்தன. ராஜத்துரோகிகளையும் போர்க் கைதிகளையும் முதலைக்கு இரையாக இதில் தூக்கிப் போட்டுவிடுவார்களாம். பிற்காலத்தில் இந்தக் கோட்டையைப் பிடித்துக் கொண்டு பட்டாளத்தார் தங்கிய போது முதலைகளைத் தமாஷுக்குச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

கோட்டைக்குள் ஒரு சிற்றூர் இருந்தது. அதில் கடைகண்ணிகளும், கோயிலுக்கு எதிரில் ஒரு குளமும் இருந்தன. அவை இருந்த சுவடே இப்போது தெரியவில்லை. பழைய குளத்தைத் தூர்த்துவிட்டார்கள். அது இப்போது விளை

யாட்டு மைதானமாகப் பயன் படுகிறது. கி. பி. 16-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இங்கே ஒரு சிற்றரசன் ஆட்சி செலுத்தி வந்தான். அவனுடைய சபையில் ஓவியர்களும் சங்கீத வித்துவான்களும், தத்துவ சாஸ்திரிகளும் இன்னும் பல அறிஞர்களும் இருந்தார்கள். கிறிஸ்தவப் பாதிரி ஒருவரும் இருந்தார். அந்தச் சிற்றரசனைக் கிறிஸ்துவனுக்க வேண்டு மென்பது அவருடைய விருப்பம். கடைசியில் விஜயநகர சாம்ராஜ்யம் குலைந்து வேங்கடாத்ரி என்ற அந்தச் சிற்றரசனும் இறந்ததும் இந்தக் கோட்டையும் கோயிலும் பழம் பெருமை குன்றி வெறிச்சென்ருகிவிட்டன. பிஜாபுரிலிருந்து வந்த முஸ்லிம் படை இந்தக் கோட்டையை ஒரு சமயம் பிடித்துக்கொண்டு அங்கே தங்கிவிட்டது. அந்தப் படையை வெல்ல, சிவாஜியின் இந்து சேனபதி தன்னுல் முடிந்த வரை பார்த்தான்; ஆனுல் முடியவில்லை. பிறகு ஆற்றங் கரையோரமுள்ள பகுதியில் தங்கிப் 'பிருந்தாவனம்' என்ற விஷ்ணுகோயில் ஒன்றைக் கட்டினுர் சிவாஜி. அப்போது அவருடைய சொப்பனத்தில் பகவான் தோன்றிப் பாலாற்றங்கரையில் சர்ப்ப யாகம் செய்யும்படி சொன்னுராம். அப்படியே செய்தபொது ஏராளமான பாம்புகள் தோன்றினவாம். இதனுல் பிஜாபுர் முஸ்லிம்கள் கோட்டையை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. பிஜாபுர் முஸ்லிம்களின் தலைவன், பின்னுல் முகாம்போட்ட இடந்தான் அப்துல்லாபுரம்.



துவாரபாலகச் சிற்பங்களில் ஒன்று

கோயிலில் இருந்த லிங்கம் நீரில் அமைந்திருந்ததால், ஸ்வாமிக்கு ஜலகண்டேசுவரர் என்று பெயர் வந்தது. சுற்றுப் பிராகாரம், மதில் எல்லாம் மற்றக் கோயில்களைப் போலத்தான் அமைந்திருக்கின்றன. இவைகளில் கல்யாண மண்டபந்தான் மிகவும் அருமையான சிற்பச் சிறப்பு வாய்ந்தது. அதன் ஒவ்வொரு பகுதியும் அற்புதமாக இருக்கிறது. கூரையிலும் தூண்களிலும் மிக நுணுக்கமான சிற்ப வேலைப்பாட்டைக் காணலாம். ஒரு சமயம் கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்த மண்டபம் முழுவதையுமே இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று பார்த்தார்கள்.

ஆனால் நம்முடைய அதிருஷ்டம், அவர்கள் ஏற்பாடு செய்து வைத்திருந்த கப்பலே மூழ்கிவிட்டது. இதனால் அவர்கள் உற்சாகம் குன்றிவிட்டது.

இப்போது இந்தக் கோயிலில் பூஜை நடைப்பதில்லை; கர்ப்பக்கிருகத்தில் லிங்கமோ விக்கிரகமோ எதுவும் இல்லை. துவாரபாலகர்களைக்கூட வெளியே கொண்டு போய்விட்டார்கள். இந்த மாதிரி சிறப்பும் கம்பீரமும் வாய்ந்த கோயிலை இந்த நாளில் கட்டுவதென்றால் முடியாது; இது இன்னும் நன்றாகவே இருப்பதால் உள்ளூர்வாசிகள் ஒன்று சேர்ந்து, இதில் லிங்கப் பிரதிஷ்டையும் உற்சவ விக்கிரகமும் செய்து வைக்க வேண்டியது அவசியமாகும்.

## இழந்த பணம்

ஒரு வாலிபன் தன் மனைவியிடம் ஐந்து ரூபாயை வாங்கிக்கொண்டு, கிண்டி ரேஸுக்குப் போனான்.

ஒரு குதிரைமீது ஒரு டிக்கட் வாங்கினான். ஐம்பது ரூபாய் கிடைத்தது. அத்தனையையும் அடுத்த ரேஸில் ஒரு குதிரைமீது கட்டினான். ஐந்நூறு ரூபாய் கிடைத்தது. அப்படியே மூன்றாவது ரேஸில் கட்டியபோது மூவாயிர ரூபாய் கிடைத்தது. முழுவதையும் மீண்டும் மீண்டும் இவ்விதம் கட்டி வந்தபோது, ஏழாவது ரேஸில் 50,000 ரூபாய் கிடைத்தது.

வீட்டுக்கு வரும்போது, வழியிலே ஒரு சிநேகிதனைச் சந்தித்தான். ரேஸில் மிகவும் பழக்கமான ஒரு பணக்காரன் அந்தச் சிநேகிதன். அவனோடு பல முறை இவன் ரங்காட்டம் ஆடியிருக்கிறான். எப்போதும் இவன்தான் தோல்வியடைவது வழக்கம்; பணக்காரனுக்கே ஜயம். இன்றோ அதிருஷ்ட சக்கரம் சுழன்று இவன் பக்கம் அடித்துக்கொண்டிருக்கிறது. சிநேகிதனுடன் சீட்டாட அவன் வீட்டுக்குப் போனான்.

முதலில் 10,000 ரூபாய் வந்தது. மறுபடியும் 20,000 ரூபாய் வந்தது. கையில் மொத்தம் லட்ச ரூபாய் சேர்ந்தது. லட்ச ரூபாயையும் அப்படியே பந்தயம் வைத்தான்.

“இந்தச் சீட்டுக்கு ஜவாபு சொல்” என்று கூறி, மூன்று ராஜாக்களை மேஜைமீது இவன் விரித்துப் போட்டான்.

நண்பன் புன்சிரிப்போடு, மூன்று ஆஸ்களைக் காட்டிவிட்டு, லட்ச ரூபாயையும் எடுத்துப் போட்டுக்கொண்டான்.

வாலிபன் வெறுங்கையனாக வீடு வந்து சேர்ந்தான்.

“போனீர்களே, என்ன ஆச்சு?” என்று கேட்டாள் மனைவி.

வாலிபன் வெகு அலட்சியமாக, “நீ கொடுத்த ஐந்து ரூபாயும் போய்விட்டது” என்று சொல்லி, ஒரு ஸிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான்.

—‘ஸ்போர்ட்’ தழுவல்



மதுவிலக்கு வீரர்கள் —'சங்கர்ஸ் வீக்லி'



கனவான்களும் முரடர்களும் —'பம்பாய்க் கிரானிக்கிள்'

# உலகமறியாத் தீவு

## டி ஃபாய்க்னி தீட்டிய சித்திரம்

**துன்பம் என்பதையே அறியாத இன்ப உலகம் எப்படி இருக்கும் என்பதுபற்றி வெவ்வேறு அறிஞர்கள் வெவ்வேறு விதமாய்க் கற்பனை செய்திருக்கிறார்கள். இது ஒரு பிரெஞ்சு ஆசிரியரின் கற்பனை. இவர் காலம் 1630-1692. இந்தக் கட்டுரை வரிசையை எழுதி வருபவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.**

கேப்ரியல் டி ஃபாய்க்னி (Gabriel De Foigny) 1630-ஆம் ஆண்டில் பிரெஞ்சு தேசத்தில் ஒரு கிராமத்தில் ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தார். இவர் கார்டிலியர் மடத்தில் சேர்ந்தார். மிகுந்த சொல்வன்மையுள்ளவர். அந்தக் காரணத்தால் பிரசாரம் செய்யும் பாதிரியானார். ஆனால் நடத்தைக் கெடுதலால், அந்த மடத்தை விட்டு அகல நேர்ந்தது. பாதிரித் தொழிலுக்குத் தகுதி அற்றவர் என்று அந்த வேலையிலிருந்து இவரை நீக்கிவிட்டார்கள். 1666-ஆம் ஆண்டு ஜெனிவாவுக்கு வந்தார். இவருடைய கொடிய வறுமையைச் சொல்லி முடியாது. அந்த ஊரில் தங்க எப்படியாவது தமக்கு இடங் கிடைத்தால் போதுமென்று எண்ணினார். ஊர் முதியோர்கள் இவருடைய குணத்தையும், மத நம்பிக்கையையும் சோதனை செய்த பிறகே, இவர் ஊரில் தங்கும்படி உத்தரவு அளித்தார்கள். பின்பு இவரை ஏன் ஊரில் தங்கச் செய்தோம் என்று சிந்தை நொந்தார்கள். பல பெண்களை இவர் வசீகரம் செய்யத் தொடங்கினார். கலியாணம் செய்துகொள்ளுவதாக வாக்களித்து, வாக்கை நிறைவேற்றவில்லை. கெட்ட நடத்தையுடைய ஒரு கைம்பெண்ணை மணப்பதாகச் சொன்னார். அந்தக் காரணத்தால் ஜெனிவாவை விட்டு இவரைத் துரத்தினார்கள். மீண்டும் ஜெனிவாவுக்கு எப்படியோ திரும்பி வந்தார். ‘உலகமறியா ஆஸ்திரேலியா’ (Terra Incognita Australis) என்ற புத்தகத்தை எழுதினார். புத்தகத்தைப் பிரசுரிக்க அநுமதி கேட்கவில்லை. தம்முடைய பெயரையும் அதில் வரையவில்லை.

புரட்சிகரமான அந்தப் புத்தகத்தை எழுதியவர் ஃபாய்க்னி ஆசிரியராகத்தான் இருக்கவேண்டும் என்றெண்ணி, இவரை முதியோர்கள் வரவழைத்து விசாரித்தார்கள். தாம் அந்தப் புத்தகத்தை எழுதவில்லை என்று இவர் மறுத்தார். இதன் மேல் ஜெனிவாவை விட்டு இவர் போக நேர்ந்தது. தாம் கெடுத்த வேலைக்காரியோடும், தமக்குப் பிறந்த குழந்தைகளோடும் மீண்டும் தம் பிரெஞ்சு நாட்டுக்கே திரும்பி வந்து கத்தோலிக்கர் ஆனார். இறுதி நாட்களை ஒரு மடத்தில் கழித்து 1692-ஆம் வருஷம் உயிர் நீத்தார்.

இவரது வாழ்க்கையைவிட இவர் எழுதின புத்தகம் அவ்வளவு கெடுதலில்லை. இவர் நூல் மதங்களின் அடிப்படைகளையே தாக்குகிறது. பகவான் ஒரு சாராருக்கு மாத்திரம் தன்னைக் காண்பித்து நேரில் உபதேசம் செய்கிறான் என்ற கதையை இவர் ஏற்றுக் கொள்ளுவதில்லை. இவர் கற்பனையில் காணும் ஆஸ்திரேலியர்கள் ஆத்மாவின் அமரத்துவத்தில் நம்பிக்கை வைக்க மாட்டார்கள். ''இறந்தவர்கள் இன்னொரு நாட்டில் சஞ்சரிக்கிறார்கள் என்றால் பொருந்தாதே. உயிரோடு இருக்கிறவர்களைப்போல் அவர்கள் எப்படிச் சஞ்சரிக்க முடியும்? பகவானை யாசிப்பதே ஒரு பெரும் பிழை. நம்முடைய தேவை அவனுக்குத் தெரியாதா? ஆண்டவன் நம் அறிவுக்கு எட்டாதவர். எந்தக் குணங்களையும் அவருக்கு நாம் தர முடியாது. பகவானைப்பற்றிய விசாரம் நமக்கு வந்தால், அது நம்மைச் சேர்த்து வைக்காது; பிரித்துவிடும்'' என்கிறார் ஃபாய்க்னி.

இவருடைய 'ஆஸ்திரேலியர்' கடவுளிடத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால் கடவுள் என்று கூறும் வழக்கம் அவர்களிடத்தில் இல்லை. அவர்களுடைய மதம் மதத்தைப்பற்றிப் பேசாமல் இருப்பதே. அவர்களிடம் பாதிரிமார்கள் இல்லை. அவர்கள் தியானத்துக்காகவே கூடுவார்கள்; பகவானை யாசிக்க மாட்டார்கள்.

'பாவத்தில் பிறந்தவன் மனிதன்' என்ற கிறிஸ்தவக் கொள்கையை ஃபாய்க்னி மறுக்கிறார். மனிதன் பிறக்கிறபோதே பந்தமற்றவன்; அறிவுள்ளவன்; நல்லவன். அவன் தன்னிலையிலிருந்து வழுவுதற்கு முன்பு இருந்த சுவர்க்கத்தை ஃபாய்க்னி சித்திரிக்கிறார் என்று சிலர் கூறுகிறார்கள். அது உண்மை அல்ல. மனிதனின் ஆதிப்பாவம் (Orginal Sin) என்பதில் இவருக்கு நம்பிக்கை இல்லை என்பதே உண்மை. ஆதிப்பாவம் சமயவாதிகளின் கற்பனையே தவிரப் பிறிதில்லை என்று இவர் உரைக்கிறார்.

பிறந்தவர் யாவரும் நல்லவர்களானபடியால், ராஜாங்கம் தேவையில்லை; மதமும் வேண்டியதில்லை. சமுதாயத்தின் அலுவல்களை ஜனங்கள் சர்ச்சை செய்வார்கள். ஆனால் 'எழுத்து மூலமாய் எவ்விதச் சட்டதிட்டங்களும் அந்த நாட்டில் இல்லை; ஆட்சி புரிகிறவர்களும் இல்லை' என்று கூறிவிடலாம். தனித்த சொத்துரிமை அந்த மக்களிடம் தோன்றவில்லை. குடும்பம் சமுதாயத்தைப் பாதிக்கவில்லை. சமுதாயமென்பது ஒன்று இருந்தால் தானே பாதிக்குமென்று சொல்லுவதற்கு? 'நீர் நமதென்றிவைவேர் முதல் மாய்'ந்துவிட்டன. ஆண் பெண் சேர்க்கை அந்த நாட்டில் இல்லையென்று மொழியலாம். குழந்தையைக் கருதியே சேர்க்கை என்ற முடிவை இவர் ஏற்கவில்லை. வேறு விதமாயும் குழந்தையைப் பெற முடியும் என்று சொல்லி இவர் அதை மறுக்கிறார்.

இவர் எழுதிய நூல் இரண்டு பாகங்களை உடையது. முதல் பாகம் ஜேம்ஸ் சாடியர் (James Sadeur) அநுபவித்த சம்பவங்களைக் கூறுகிறது. இரண்டாம் பாகம் கற்பனை ஆஸ்திரேலியா சம்பந்தமான விஷயங்களைக் குறிக்கிறது.

இவருடைய பாலியம் இன்னல்கள் நிரம்பியது. கப்பல் பிரயாணத்துக்கு நடுவே ஜேம்ஸ் சாடியர் பிறந்தார்.

"எனக்கு நிகழ்ந்த இன்னல்களுக்குக் கரையில்லை. அந்த இன்னல்கள் எனக்குச் சகிப்புத் தன்மையை அளித்தன. நல்ல காலமாய் அந்த நாட்டில் ஆடையில்லாமல் ஒதுக்கப் பெற்றேன். அந்த நாட்டில் மக்கள் உடை உடுத்துவதில்லை. ஆடையோடு நான் அங்கே போயிருந்தால் என்னை ஓர் அந்நியன் என்று சந்தேகித்து அடித்துத் துரத்தியிருப்பார்கள். அந்த நாட்டு ராட்சசப் பறவைகளோடு போராடினேன். பிறப்பு வளர்ப்பை அறியாமல் எந்த அந்நியனையும் அந்த நாட்டுக்குள் வரவிடுவதில்லையாம். பறவைகளோடு நான் தைரியமாய்ப் போர் புரிந்ததை அவர்கள் கண்டு வியந்தார்கள். என்னை எல்லாரும் வந்து முத்தமிட்டார்கள். தங்கள் தலைமேலேகூட என்னைச் சுமந்து சென்றிருப்பார்கள். அப்படிச் சுமந்து செல்வது ஒரு கௌரவச் சின்னமாகும். எனக்குச் சிரமம் ஏற்படுமே என்றுதான் அப்படிச் செய்யாது விட்டார்கள். என்னை 'ஹெப் விடுதி' (House of the Heb) என்ற நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அது ஒரு பள்ளிக்கூடம். அங்கே எனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தளித்தார்கள்."

இவ்விதம் சாடியர் தம் கதையைச் சொல்வதாக வர்ணித்து, ஃபாய்க்னி தரும் அந்த நாட்டுச் சித்திரம், தாமஸ் மோர் தந்த சித்திரத்தை நினைவூட்டுகிறது.

ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்னவென்றால், அந்த நாட்டில் ஒரு குன்றையும் பார்க்க முடியாது. எல்லாவற்றையும் அந்த நாட்டு மக்கள் சமதளமாகச் செய்துவிட்டார்கள். அங்கே காடுகளில்லை; சதுப்பு நிலங்களில்லை; பாலைவனங்களில்லை. ஒரே விதமான பாஷைதான்; ஒரே விதமான பழக்க வழக்கங்கள்தான்; ஒரே விதமான கட்டிடங்கள்தான். மக்களெல்லாம் ஒரே விதமான மனப் பண்புடையவர்கள். எல்லாம் ஒரே முறையில் அமைந்து கிடக்கின்றன. ஒரு பாகத்தை அறிந்தால் போதும்; நாடு முழுவதையும் அறிந்ததாகும்.

நாடு 15,000 பாகங்களாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. சியாசெயின் (Seizain) என்ற பெரிய பாகம் 16 சிறிய பாகங்கள் கொண்டது. ஒவ்வொரு சிறிய பாகத்திலும் 25 வீடுகள். ஒவ்வொரு வீட்டிலும் நான்கே அறைகள். அந்தக் கட்டிடங்களில் எந்தப் பொருளையும் பார்க்க முடியாது. நான்கு ஆசனங்கள்தான் போட்டிருக்கும். மலைகளிலிருந்து வரும் ஜலத்தை அந்த மக்கள் தங்கள் பிரதேசத்துக்குச் சாமர்த்தியமாய்க் கொண்டு வந்திருக்கிறார்கள் இதனால் பூமி வளம் பெறுகிறது.

கற்பனையில் வரும் எல்லா ஆஸ்திரேலியர்களும் அர்த்தநாரீசுவரர்கள். அவர்களிடம் ஆண்-பெண் இருவருடைய சின்னங்களும் தோன்றும். அவர்கள் எட்டடி உயரமுள்ளவர்கள். சிவப்பாயிருப்பார்கள். நீண்ட முகம்; அகன்ற நெற்றி; கூர்மையான கண்; பவழ இதழ்; கருங் கூந்தல்— இந்த லட்சணங்களைப் பெற்றவர் உடை அணிய மாட்டார்கள்.

ஒரு குடும்பத்திலிருந்து ஒரு குழந்தையாவது கலாசாலைக்கு வர வேண்டும். குழந்தையை ரகசியமாய்க் கொண்டு வருவார்கள். எப்படிக் குழந்தை பெறுகிறார்கள் என்பதே எனக்குத் தெரியாது; ஆனால் அவர்கள் ஒருவரிடம் ஒருவர் மிகவும் அன்பு செலுத்துகிறார்கள். சகோதரர்கள் போலப் பழகுகிறார்கள். சண்டையுமில்லை; சச்சரவுமில்லை. 'எனது', 'உனது' என்பதில்லை. ஒருவர் கர்ப்பமானால் அவரை (அல்லது அவளை) உயர்ந்த தனியிடம் ஒன்றுக்கு அழைத்துச் செல்வார்கள். குழந்தை பிறந்தவுடன் அதைச் சில இலைகளால் துடைப்பார்கள். பிறகு அதற்குப் பால் தருவார்கள். பெற்றவர் பிரசவ வேதனைப் பட்டதாகவே தெரியாது. கீழே குழந்தைக்குத் துணிகள் போடுவதில்லை. தொட்டில்களும் இல்லை. இரண்டு வருஷங்கள் வரையில் வேறு உணவு தேவையில்லை. தாய்ப்பாலே போதும்.

பள்ளிக்கூடத்துப் படிப்பு 35 வருஷம் வரையில் நடக்கும். குழந்தைகள் எட்டாம் மாதத்தில் பேசும். ஒரு வருஷ முடிவில் நடக்கும். இரண்டாம் ஆண்டில் பால் குடிப்பதை மறக்கச் செய்வார்கள். மூன்றும் ஆண்டிலேயே அதற்கு அறிவு வந்துவிடும். இனி ஈன்ற தாய்க்கு வேலையில்லை. முதல் முதலில் அந்தக் குழந்தை படிக்கக் கற்றுக்கொள்ளும். முதல் உபாத்தியாயரிடம் மூன்று வருஷந்தான் படிக்கும். இரண்டாம் உபாத்தியாயரிடம் நான்கு வருஷங்கள் தங்கும். 35 ஆண்டு வரையில் எல்லாக் கலைகளையும் ஆஸ்திரேலியர் கற்றுக் கொண்டு விடுவார்கள். எல்லாரும் ஒரே அறிவுடையவர்கள். 'எல்லோரும் எல்லாச் செல்வமும்' எய்துகிறார்கள். படிப்பு முடிந்த பிறகு லெஃப்டினண்டு பதவி கிடைக்கும். கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவர்கள் உலக அலுவல்களை விட்டு விலகிவிடுவார்கள்.

அங்கே வேலையில்லை. எல்லாக் காலத்திலும் பழுக்கிற பழங்களைத் தின்றே மக்கள் ஜீவிக்கிறார்கள். தோட்ட வேலை செய்ய வேண்டும்; ஆனால் சமையல் செய்ய வேண்டியதில்லை. உடைகளோ இல்லை. ஆசனங்களும் இல்லை. கைத்தொழில்களும் இல்லை.

மக்கள் முதல் ஜாமத்தில் பள்ளிக்கூடத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பார்கள்; இரண்டாம் ஜாமத்தில் தோட்டத்தில் வேலை செய்வார்கள்; மூன்றும் ஜாமத்தில் சமுதாய சம்பந்தமான அலுவல்களில் ஈடுபடுவார்கள். ஐந்து நாளைக்கு ஒரு முறை, ஒரு நாள் ஒரு ஜாமம் முழுவதையும் தியானத்தில் போக்குவார்கள். ஓர் அடி விலகி நின்று மோனத்தில் ஆழ்வார்கள். பௌதிக ஆராய்ச்சியும், சர்ச்சையுந்தான் அவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தன.

புதிதாய்க் கண்டு பிடித்த பொருள்களைப் புதுப் பொருட்காட்சிப் புத்தகத்தில் பதிவு செய்வார்கள். கண்டுபிடித்தவனுடைய பெயரும் அதில் திகழும். 32 வருஷத்துக்குள் 5,000 புதிய பொருள்களைக் கண்டு பிடித்தார்களாம்.

அரசியல் அற்ற கற்பனை உலகத்தைப் படைத்தவர் இந்த ஆசிரியரே. அதில் மத்திய அரசாங்கமே இல்லை; சமுதாய காரியங்கள் அந்த அந்தப் பாகங்களிலேயே

முடிந்துவிடும். உணவு உற்பத்தி ராஜாங்கத்தைச் சார்ந்ததல்ல. ஒவ்வோர் இலாகாவில் இருக்கிறவர்களும் சங்கத்துக்கு வருகிறபோது ஆகாரத்தைக் கொண்டு வருவார்கள். சேனைகளை நடத்துவதற்குச் சேனாதிபதிகள் இல்லை. அவரவரே அந்த அந்த இடத்தில் போய் நின்றுவிடுவார்கள். ஆயுள் முழுவதும் ராணுவத்தில் உழைத்தவர்களோ என்று சொல்லும்படி நடந்துகொள்ளுவார்கள்.

ஆண்டவன் எங்கும் வியாபித்திருக்கிறான். மௌனமாய் அவனைத் தொழுதாலே போதும். கடவுள் பேச்சுக்கு இலக்கானால் சண்டை சச்சரவுகள்தான் விளையும். சமயத்தைப்பற்றிப் பேசாமல் இருப்பதே உண்மையான சமயம். தங்களுக்கிடையே சண்டை சச்சரவுகள் இல்லாமல் போனாலும், தங்கள் நாட்டின்மீது படையெடுக்கிறவர்களை அந்த நாட்டு மக்கள் வேரோடு மாய்த்துவிடுவார்களாம்.

இத்தகைய சித்திரத்தை ஆசிரியர் நமக்குத் தந்திருக்கிறார். ஆசாபாசங்களுக்கு இடங்கொடுக்காமல் அறிவைக் கொண்டு வாழ்ந்தோமானால், நாம் இன்பம் அடைய முடியும். மோனத்தில் இறைவனை வழிபடுவதுதான் சாலவும் நன்று. அகந்தையை மாய்ப்பதுதான் இன்பம் என்பது ஆன்றோர் காட்டிய வழியன்றோ?

## பெண் நினைப்பு

ஒரு பத்திராசிரியர் தங்கள் நிருபர் ஒருவரைக் கூப்பிட்டார். "அக்கம்பக்கத்தில் போகிறவர்களை வழியிலே நிறுத்தும். இன்றைய பெண்களைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று விசாரித்துப் பதில் வாங்கி வாரும்" என்று கட்டளையிட்டார்.

நிருபர் அப்படியே சென்று, வீதியிலே முதல் முதலாக ஒரு கிழவரைப் பேட்டி கண்டார். கிழவரின் வயது 101.

"இன்றைய பெண்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

கிழவர் சிரித்துக்கொண்டே, "இன்றைய பெண்களைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று கேட்கிறாய்? மகனே, பெண்களைப்பற்றி நினைப்பதை நான் வெகு நாளைக்கு முன்பே விட்டுவிட்டேனே; அப்படி விட்டு இரண்டு வருஷம் ஆகிவிட்டதே!" என்றார். —'டைம்ஸ் ஹெரால்டு'

## நிச்சயமான லாபம்

சட்டசபையை ஒத்திப் போட்டால், ஒரே ஒரு லாபம் இருப்பது நமக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. அதாவது, அப்போது சட்டசபை அங்கத்தினர்கள் கட்டாயம் தங்கள் சொந்தப் பணத்தையே செலவழித்துக்கொண்டிருப்பார்கள்.

—ஆர்த்தர் காட்ப்ரி

# நந்தகுமார் தியாகியா?

**டாக்டர் ரமேசசந்திர மஜும்தார்**

**பொய்க் கையெழுத்திட்டதாக நந்தகுமாரைத் தூக்கில் போட்டார்கள் ஆங்கிலேயர் என்பது சரித்திரம். அவரை இந்திய சுதந்தரத்துக்காக உயிர் கொடுத்த முதல் தியாகி என்று நம் அரசியல்வாதிகள் பிரசாரம் செய்வதுண்டு. இது எவ்வளவு தூரம் உண்மை என்று இங்கே ஆராய்கிறார் கல்கத்தா யூனிவர்ஸிட்டியில் சரித்திர ப்ரொஃபஸரான இந்தக் கட்டுரையாளர்.**

ஆங்கிலேயரின் வியாபாரம் இந்தியாவில் ஓங்கி, அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, அதற்கு முன் பதவியில் இருந்த சில இந்திய உத்தியோகஸ்தர்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. என்ன என்னவோ குற்றம் சாட்டி இந்த உத்தியோகஸ்தர்களைப் படாத பாடு படுத்திவிட்டார்கள். இவர்களில் நந்தகுமார் முக்கியமானவர். முதல் ஆங்கிலக் கவர்னர்-ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் அடாத சில காரியங்கள் செய்தார் என்று நந்தகுமார் வழக்காடினார். இதனால் இருவருக்கும் பகை முற்றிச் சுப்ரீம் கோர்ட்டு வரைக்கும் வழக்கு நடந்தது. கடைசியில், கள்ளக் கையெழுத்திட்டதாக நந்தகுமாரின்மேல் குற்றம் சாட்டி, அந்தக் கால ஆங்கில நீதி முறைப்படி அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்கள். இது மிகவும் மோசமான செயல் என்று பின்னால் பிரபல ஆங்கிலப் பிரசங்கியும் பார்லிமெண்ட் அங்கத்தினருமான பர்க் என்பவர் வாதாடி, எழு ஆண்டுகள் வரை வாரன் ஹேஸ்டிங்ஸ், அவர் நண்பரான இம்பே இருவரையும் கலங்க அடித்துவிட்டார்.

ஆங்கிலேயரே பெரும்பாலும் இந்திய சரித்திரத்தை எழுதியிருப்பதால் நந்தகுமாரை இழிவுபடுத்திக் கூறியிருப்பது சகஜந்தான்.

சமீபகாலத்தில் தேசிய உணர்ச்சி மிகுந்ததால், நந்தகுமாரை இந்தியாவில் ஆங்கில ஆட்சியின்போது தோன்றிய முதல் தியாகி என்று பலர் போற்றத் தொடங்கினார்கள். ஆயினும், உண்மையிலேயே தேச நலத்தை நாடி நந்தகுமார் ஆங்கிலேயரை எதிர்த்தார் என்பதற்கு அவர் வழக்கில் ஆதாரம் இருப்பதாக இதுவரையில் தெரியவில்லை.

ஹேஸ்டிங்ஸின் நண்பரான பார்வெல் எழுதிய ஒரு கடிதத்தின் சுருக்கம் இது: "நந்தகுமாரின் தந்தை இரண்டு மூன்று பர்க்கனாக்களுக்கு அதிகாரியாக இருந்தார்.

**காப்பிரைட்: பாரதவர்ஷ (வங்காளி: ஜனவரி '54), கல்கத்தா.**

முதலில் அவரிடமே நந்தகுமார் இருந்துவந்தார். பிறகு நவாபு ஆலிவர்த்தியின்கீழ் ஓர் அதிகாரி யாக இருந்தார். அப்போது குடி மக்களைத் துன்புறுத்தி 1,000 ரூபாய் பொதுப் பணத்தி லிருந்து கையாண்டதால் இவரைக் கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவிட்டார் நவாபு. பின்னல் இவர் தந்தை அந்தத் தொகை யைத் தாமே அடைத்து மகனை மீட்டார். சிராஜுத்தௌலாவை ஒரு சமயம் இவர் அண்டிப் பார்த்தார். அவர் அப்போது இவரை மதிக்கவில்லை. பிறகு முகம் மது இயார் பேக் கான் என்பவ ரின் கீழ் ஹுக்ளியில் திவானகவும் படைத் தலைவராகவும் இவர் இருந்தார்.''

பார்வெல் நந்தகுமாரின் விரோதியாதலால் வேண்டு மென்றே இப்படி எழுதியும் இருக் கலாம்; அல்லது கொஞ்சத்தைப் பிரமாதமாகக் காட்டியும் இருக் கலாம். நந்தகுமார் ஹுக்ளியில் படைத்தலைவராக இருந்தபோது தான் ஆங்கிலப் படைத்தலைவராக இருந்த கிளைவ், பிரெஞ்சுக்கார ருக்குச் சொந்தமான சந்தன நகரை முற்றுகையிட்டார்.

அப்போது சிராஜுத்தௌலா வும் பிரெஞ்சுக்காரர்களும் நட்புக் கொண்டிருந்ததால், ஆங்கிலேய ரோடு சச்சரவு ஏற்பட்டால் பிரெஞ்சு உதவி கிடைக்குமென்று சிராஜ் எதிர்பார்த்தார். ஆகவே, கிளைவைத் தடுக்கும்படி ஹுக்ளி யில் தம் படைத்தலைவராக இருந்த நந்தகுமாருக்குக் கட்டளை யிட்டார். அதோடு நிற்காமல் துர்லபராய் என்பவரின் தலைமை யில் ஒரு புதுப் படையையும் ஹுக்ளிக்கு அனுப்பினர். அப் போது பிரெஞ்சுக்காரரை அடக்காவிட்டால், பின்னல் சிராஜுத்தௌலாவை வெல்ல முடியாது என்று தெரிந்துகொண் டார் கிளைவ். ஆகவே, உமிசந்த் என்பவரின் மூலம் நந்தகுமாருக்கு லஞ்சப் பணம் கொடுத்தனுப்பி அவரைக் கைக்குள் போட்டுக் கொண்டாராம். இதனல் துர்லப ராய் ஹுக்ளிக்கு வந்தபோது நந்தகுமார் அவருக்கு ஏதோ சாக் குப் போக்குச் சொல்லி ஆங்கிலப் படையைத் தடுக்காதபடி செய்து விட்டார். ஆங்கிலேயரே, ''இப்படி நந்தகுமார் உதவியிராவிட்டால் பிரெஞ்சுக்காரர்களை நாம் வென் றிருக்க முடியாது'' என்று சொல்லி யிருக்கிறர்கள். நந்தகுமார் இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்ததால் தான் ஆங்கில ஆதிக்கம் நம் நாட் டில் வேர் ஊன்றியது என்று இதி லிருந்து தெரியும்.

சிராஜுத்தௌலா தோற்ற தும் நந்தகுமார் கிளைவுக்கும் மீர் ஜாபருக்கும் மிகவும் வேண்டியவ ராளுர். ஆனல், பிறகு மீர்ஜாபருக்கு அந்தரங்கக் காரியதரிசியாக நந் குமார் இருந்தபோது செய்த சில காரியங்கள் ஆங்கிலேயருக்குப் பிடிக்கவில்லை.

மீர் ஜாபர், தன்னை ஆங்கிலேயர் பொம்மை நவாபாக நடத்துகிறர் கள் என்று கண்டுகொண்டதும், எப்படி அவர்களிடமிருந்து விடுபடு வது என்று யோசித்து வந்தான். இதற்காக ஸ்ரீராம்புரில் இருந்த டச்சுக்காரர்களுடன் ரகசிய மாக ஒப்பந்தம் செய்துகொண் டான். அதோடு பிற ஐரோப்பி யர்களுடனும் உறவுகொள்ள நந்த குமாரை ரகசியமாக அனுப்பி வைத்தான் என்று ஒரு வதந்தி கிளம்பியது. பின்னல் கல்கத்தா

கவுன்ஸில் என்ற ஆங்கில அதிகாரிகள் கொண்ட சங்கம் இதைப் பற்றி விசாரித்ததில், மீர் ஜாபர் அப்படி ஒன்றும் செய்யவில்லை என்று தெரிந்தது.

ஆனால் பின்னால் மீர் ஜாபரைத் தள்ளிவிட்டு, மீர்காசிம் என்பவரைப் பிரிட்டிஷார் கொண்டுவைத்ததும் நந்தகுமார் மீர் ஜாபர் பக்கமாக இருந்ததாகத் தெரிகிறது. இதிலிருந்து ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததாக அவர்மேல் குற்றஞ் சாட்டிப் பல வழக்குகளை ஆங்கிலேயரில் ஒரு சாரார் தொடுத்தார்கள். கல்கத்தா கவுன்சில் அவரை விசாரணைக்கு அழைத்துக் கடைசியில் காவல் கைதியாக வைத்தது.

ஆனால் மீர் காசிமைத் தள்ளிவிட்டு ஆங்கில உதவியுடன் மீர் ஜாபர் மீண்டும் நவாபானதும் நந்தகுமாரைத் திவானாக நியமிக்கும்படி மீர் ஜாபர் ஆங்கிலேயரிடம் சொன்னான். கவர்னர் வான்ஸிட்டார்ட் என்பவருக்கு இது பிடிக்கவில்லை. ஆயினும் பிரிட்டிஷ் கவுன்சிலில் கவர்னருக்கு எதிர்க்கட்சி ஒன்று இருந்தது. இதைச் சேர்ந்தவர்கள் நந்தகுமாரை ஆதரித்தார்கள். ஆனால் மீர் காசிம் தோற்றோடியதும் நந்தகுமாரின் மேல் பெரிய புகார் எல்லாம் வரத் தொடங்கின.

"தம்மைத் திவானாக ஏற்றுக் கொண்டால் மீர் காசிமை மறுபடியும் நவாபாக ஆக்குவதாக ஓர் ஆள்மூலம் ரகசியமாய் நந்தகுமார் ஏற்பாடு செய்து வருகிறார்" என்பது முதல் புகார்.

அடுத்தது காசி ராஜாவுக்கு அவர் எழுதிய ஒரு கடிதம்: அதில், "மீர் காசிம், ஷூஜா உத்தௌலா இவர்களுக்கு எதிராக நீங்கள் ஆங்கிலேயருக்குத் துணை செய்யப் போவதாகக் கேள்விப்பட்டேன். இப்போது ஆங்கிலேயருக்குள்ளேயே சச்சரவு நடக்கிறது. நீங்கள் அவர்களோடு சேரவேண்டாம்" என்று இருந்தது.

பின்னால் காசி ராஜாவைக் கவர்னர் வான்ஸிட்டார்ட் விசாரித்தபோது அவர் இது உண்மைதான் என்றும், இதனால் தான் தாம் ஷூஜா உத்தௌலாவோடு சேரப் பார்த்ததாகவும் தெரிவித்தார். ஷூஜா உத்தௌலாவுக்கும் நந்தகுமாருக்கும் நடந்த கடிதப் போக்குவரத்திலிருந்து இன்னொரு விஷயமும் வெளியாயிற்று: முதலில் ஒரு கோடி ரூபாயும் பாட்னாவை ஆளும் உரிமையும் தருவதாக நந்தகுமார் எழுதியதற்கு ஷூஜா இணங்கவில்லை. பின்னால் தகுந்த ஆள்மூலம் ஏராளமான தொகை அனுப்பியதன்பேரில் அவன் அதற்கு இசைந்தான். ஆயினும் மீர்ஜாபர் உயிரோடிருந்த வரை நந்தகுமாருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. ஆனால் மீர் ஜாபரின் மகன் நஜமுத்தௌலா நவாபானதும் ஆங்கிலேயருடன் புதிய ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள வேண்டியதாயிற்று. அப்போது நஜமுத்தௌலா என்ன சொல்லியும் ஆங்கிலக் கவர்னர் நந்தகுமாரைத் திவானாக ஏற்க மறுத்துவிட்டார்.

பிறகு நந்தகுமாரைக் கல்கத்தாவில் காவலில் வைத்தார்கள். ஆனால் 1772-இல் ஹேஸ்டிங்ஸ் கவர்னரானதும் நந்தகுமாரின் மகனை ராஜா குருதாஸ் என்பவனை நவாபின் திவானாக்கினர். கல்கத்தா ஆங்கிலக் கவுன்சிலில் பிரதிநிதிகளாக இருந்த

மூன்று பேர் இதை எதிர்த்தார்கள். ஆயினும் அவர், ''நந்தகுமார் முன்னே இப்படிச் சில சூழ்ச்சிகளில் ஈடுபட்டது எனக்கும் தெரியும். இருந்தாலும், சர்க்கார் சரிவர நடப்பதற்கு நந்தகுமாரின் மகனை இந்தப் பதவியில் வைத்திருப்பது அவசியம். நந்தகுமார் நாம் வைத்த வேலையாள் அல்ல; மீர் ஜாபரின் திவான். அவனுடைய மனங்கோணுமல் நடந்து வந்திருக்கிறுர். வெளியார் உதவியினுல் அவர் நம்மை விரட்டித் தம் எஜமானனுக்குப் பலன் தேடப் பார்த்தது, நம்மைப் பொறுத்த வரையில் குற்றமாக இருக்கலாம்; ஆனுல் ஒருவர் எஜமானனின் மேல் உள்ள விசுவாசத்தால் அப்படிச் செய்வது சகஜந்தான். மீர் ஜாபருக்கு அவர் துரோகம் செய்ததாக இதுவரை ஒரு ருஜுவும் கிடைக்கவில்லை. கடைசி வரை மீர்ஜாபருக்கு அவரிடத்தில்தான் நம்பிக்கை இருந்தது. ஆகவே, நாம் அவரைக் குறை கூறிப் பயனில்லை'' என்று சொல்லி விட்டார்.

இதற்குப் பின் ரேஜா கான் என்ற பழைய திவானின்மேல் சில குற்றச்சாட்டுக்களை நந்தகுமார் கொண்டு வந்தார். முதலில் ஹேஸ்டிங்ஸுூம் இதற்கு உடந்தையாகவே இருந்தார். ஆனுல் கடைசியில் ரேஜாகான் மேல் சாட்டிய குற்றம் ருஜுவாகாமல் போய்விடவே நந்தகுமாருக்கும் ஹேஸ்டிங்ஸுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது.

அப்போதுதான் கல்கத்தாவில் புதிய பிரதிநிதிகள் அடங்கிய ஆங்கிலக் கவுன்சில் கூடியது. அவர்களிடம் போய், ஹேஸ்டிங்ஸின்மேல் பல காரணங்களுக்காக நந்தகுமார் வழக்குத் தொடுக்க வேண்டுமென்று முறையிட்டுக் கொண்டார். அப்போது மோகன் பிரசாத் என்பவன் நந்தகுமாருக்கு எதிராக வழக்குத் தொடுத்தான். கடைசியில் நிலைமை குழப்பமாகிக் கள்ளக் கையெழுத்திட்டதாக முடிவாகி அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்கள்.

இதிலிருந்து ஒன்று தெரிகிறது: தாம் சிராஜுத்தௌலாவுக்குத் துரோகம் இழைத்ததால் ஆங்கிலேயரின் ஆதிக்கம் வேர் ஊன்றிவிட்டது என்பதைப் பின்னுல் தான் நந்தகுமார் உணர்ந்தார். அதுமுதல் மீர் ஜாபரை ஆதரித்து அவனை நவாபாக நிலைநிறுத்தி விட்டால் ஆங்கிலேயரை விரட்டி விடலாம் என்று என்ன என்னவோ செய்து பார்த்திருக்கிறுர். ஆனுல் அவை பலிக்கவில்லை. இந்த நிலையில் நந்தகுமாரை ஒரேயடியாகப் புகழ்ந்து பேசுவதோ அடியோடு இகழ்வதோ சரி என்று தோன்றவில்லை. ஆயினும், நம் நாட்டுச் சரித்திரத்தில் அவர் பெயர் இடம் பெற வேண்டியது அவசியமே.

### யார் அரசியல்வாதி?

இன்றைய தினம் நாளைக்கு ஒன்று நடக்கப் போவதாகச் சொல்லி, அதற்கு மறுநாள், ''நேற்று ஏன் அது நடக்கவில்லை என்றுல்....'' என்று தொடங்கி விளக்கம் கூறுகிற ஆசாமி தான் அரசியல்வாதி.

—ஹெர்ப் ஷ்ரைனர்

# பிரார்த்தனை மறந்தது



**காகா காலேல்கர்**

**மகாத்மா காந்தி வாழ்க்கையில் ஒரு சம்பவம் இது. 'மங்கள் பிரபாத்'தில் காலேல்கர் எழுதிய கட்டுரை ஒன்றிலிருந்து எடுத்த ஒரு பகுதி.**

நாங்கள் தென்னிந்தியாவில் கதர் யாத்திரை சம்பந்தமாகச் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். ஸ்ரீகாகுளம் மிகப் பெரிய கதர் ஸ்தலம். அங்கே மாலை ஏழு மணிக்கு நாங்கள் போக இருந்தோம். ஆனால் போய்ச் சேர்ந்தது பத்து மணிக்கு. காந்திஜிக்கு ராட்டைக் காட்சியைக் காட்டப் பெண்கள் மூன்று மணி நேரமாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆகையால், அந்த ஊரை அடைந்தவுடன் காந்திஜி நேராக அந்தக் கண்காட்சிக்குச் சென்றுவிட்டார். மகாதேவ தேசாயியும் நானும் தங்கவேண்டிய இடத்துக்குச் சென்றோம். மிகக் களைத்திருந்தோம். போய்ச் சேர்ந்தவுடனே தூங்கிவிட்டோம்.

காலை நாலு மணிக்குப் பிரார்த்தனை செலுத்தக் கூடியபோது, பாபுஜி, "மகாதேவ், நேற்றுப் பிரார்த்தனை என்னவாயிற்று?" என்று கேட்டார்.

என் மனம் திடுக்கிட்டது. நான், "வந்தவுடனேயே தூங்கிவிட்டேன். பிரார்த்தனை செய்ய மறந்துவிட்டேன்" என்றேன்.

மகாதேவ், "நானும் மறந்துவிட்டேன். ஒரு தூக்கம் முடிந்து எழுந்திருந்தவுடன் அப்படியே உட்கார்ந்துகொண்டேன். படுக்கையில் இருந்தவாறே மனத்திலே பிரார்த்தனை செய்துவிட்டு மறுபடியும் தூங்கிவிட்டேன். காகாவை நான் எழுப்பவில்லை, பாபுஜி" என்றார்.

பாபுஜி, "ராத்திரி நானும் பிரார்த்தனை செய்ய மறந்துவிட்டேன். களைத்திருந்ததால் நானும் தூங்கிவிட்டேன். மூன்று மணிக்கு விழித்தபோது நினைவு வந்தது. அப்போதிருந்து என் உடல் நடுங்குகிறது; என் உடம்பே சரியில்லை. இது எப்படி நிகழ்ந்தது என்றே நினைத்துக்கொண்டிருக்கிறேன். கடவுளை எப்படி நான் மறந்தேன் என்று சிந்தித்துப் பார்க்கிறேன். என் ஒவ்வொரு மூச்சுக்கும் எஜமானனும் என் வாழ்வெல்லாம் ஆதரவுமான கடவுளைத் தூக்கம் காரணமாக மறந்துவிட்டேனென்றால், நான் என்ன காரியம் செய்வது? நான் அவனுடைய பிரார்த்தனையை எப்படி மறந்தேன்?" என்று வருந்தினர்.

நாங்கள் பிரார்த்தனையை முடித்து அவரவர் காரியத்தில் ஈடு

**மூலம்: ஸர்வோதயம் (தமிழ்: பிப்ரவரி '54), தேவ்ஜி காலனி, திருப்பூர்.**

பட்டோம். மகாத்மாஜிக்கு அவகாசம் கிடைப்பதே அரிது. சாப்பிட உட்கார்ந்தபோது, "நான் ஒரு விஷயம் கூறலாமா?" என்று பாபுஜியைக் கேட்டேன்.

"சொல்லேன்" என்றார் பாபுஜி சிரித்துக்கொண்டே.

நான் சொன்னேன்:

"முகம்மதிய சாது ஒருவர் இருந்தார். பெரிய கடவுள் பக்தர். ஐந்து தடவை நமாஸ் படிப்பது அவர் வழக்கம். ஒரு நாள் அவர் களைப்புற்றிருந்தார்; தூங்கி விட்டார். நமாஸ் படிக்கும் சமயம் வந்ததும் அவரை யாரோ ஒருவன், 'எழுந்திரு, எழுந்திரு; நமாஸ் படிக்கும் நேரமாயிற்றே, என்று எழுப்பினான். அவர் எழுந்திருந்து நன்றி பாராட்டினார். 'சகோதரா, நீ எனக்கு மிகவும் உதவினாய். என் பிரார்த்தனை நின்றிருந்தால் என்ன ஆகும்! உன் பெயர் என்ன?' என்றார்.

"அவன், 'என் பெயர் இப்லீஸ் (சைத்தான்)' என்று பதில் சொன்னான்.

"சாதுவுக்கு மிக்க ஆச்சரியம் உண்டாயிற்று. 'இப்லீஸா! அடே, உன் வேலையே மற்றவர் பிரார்த்தனை செய்வதைத் தடுப்பது தானே! தர்மம் செய்வதைத் தடுப்பவன் நீ! அப்படியிருந்தும் நான் பிரார்த்தனை செய்யவேண்டுமென்று எப்படி எழுப்ப வந்தாய்?'

"சைத்தான், 'இதுவும் என் நன்மையைக் கருதியே. இதற்கு முன் ஒருதடவை இதுமாதிரி நீ தூங்கி விட்டாய். நமாஸ் படிக்கும் நேரம் கழிந்துவிட்டது. நான் மிகச் சந்தோஷம் அடைந்தேன். ஆனால் நீ எழுந்திருந்தவுடன் அழுத அழுகையில், பட்ட வருத்தத்தில், ஏங்கின ஏக்கத்தில், அல்லாவுக்கு மிகப் பிரியமுள்ளவன் ஆகி விட்டாய். பிரார்த்தனை செய்யாத உன் பாவம் உன் பச்சாத்தாபத்திலே தீர்ந்துவிட்டது. எனவே, மறுபடியும் அதே மாதிரி ஏற்பட்டு நீ அல்லாவுக்கு இன்னும் அதிகப் பிரியமுள்ளவனாக ஆகிவிடக் கூடாதே என்று நான் எண்ணினேன். ஆகையால், பிரார்த்தனை நேரத்தில் உன்னை எழுப்பிவிடுவதே நல்லது' என்றான்."

நான் சொன்னதைப் பாபூஜீ புன்சிரிப்போடு கேட்டார். எனக்கும் மிகச் சந்தோஷம் உண்டாயிற்று.

1914 முதல் கடைசிவரை நான் அவருடைய வாழ்க்கையைப் பார்த்திருக்கிறேன். கடவுளைப்பற்றி அவர் செய்த தியானத்தையும், செலுத்திய சிந்தனையையும் பார்த்திருக்கிறேன். ஒருபோதும் இந்த விஷயத்தில் விக்கினம் ஏற்படவில்லை.

உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அவரிடம் கடவுள் பக்தி நிறைந்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். பக்தியே உருவெடுத்து வந்தவராக நான் அவரைக் கண்டேன். அப்படி இருந்தாலும் அவர் பிரார்த்தனைக்காக அதிக காலம் செலவழிப்பதில்லை. குறிப்பிட்ட நேரத்தில் அவர் அனைவருடனும் பிரார்த்தனைக்காக உட்காருவார். அதிலேயே மூழ்கிவிடுவார். பிரார்த்தனை முடிந்தது என்றால், காரியத்தில் முனைந்துவிடுவார். 'வேலை எல்லாம் கடவுளுடையதே; காரியம் செய்யும் நேரத்தை மிச்சப்படுத்தி நாம ஜபம் செய்வதில் செலவழித்தால், கடவுள் கோபப்படுவார்' என்று நினைத்து, எந்நேரமும் செயல் புரிந்துவந்தார்.

# தேயிலைத் தோட்டம்

பிலோ இருதயநாத்

**உலகெங்கும் பரவிவிட்டது தேயிலைப் பானம். தேயிலை தயாராகும் முக்கியமான நாடுகளில் ஒன்று நம் நாடு. தேயிலை பயிராகும் விவரம், அதைப் பதன் செய்யும் முறை இவைகளை விளக்குகிறது இந்தக் கட்டுரை.**

இந்தக் காலத்தில் பரம ஏழைகளும் டீ குடிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்; டீ குடிப்பது நாகரிகமான வாழ்க்கை என்று எண்ணுகிறார்கள். பட்டிக்காட்டிலும் டீ கடைகள்.

'டீ' என்ற இந்தத் தேயிலை எப்போது உண்டாயிற்று என்று சொல்ல இயலாது. இந்தச் செடி கடல் மட்டத்திலிருந்து இரண்டாயிரம் அடி முதல், எட்டாயிரம் அடிவரை உயரமான பிரதேசங்களில் நன்றாக வளரும். செடிக்கு மிதமான உஷ்ணமும், எண்பது முதல் தொண்ணூறு அங்குலம் வரை மழையும் வேண்டும். சரிவான தரையே வேண்டும். மண் ஈரம் காக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

தேயிலைச் செடி சுமார் 150 ஆண்டுகளுக்குமேல் பட்டுப் போகாமல் இருந்து வருவதாகப் புள்ளி விவரம் காட்டுகிறது.

காடுகளை அழித்த புது இடங்களில் இது நன்றாகப் பயிராகிறது. சில மரங்களை மட்டும் நிழலுக்காக விட்டுவிட்டு, மற்றவைகளை வெட்டுவார்கள். தரையைச் சமமாக்கித் தேயிலைக்கு வேண்டிய எரு முதலியவைகளை மண்ணுடன் கலப்பார்கள்.

தேயிலைச் செடி ஓர் ஏக்கருக்குச் சாதாரணமாய் 3,000 முதல் 4,000 வரையில் பயிராகும். நல்ல வளமுள்ள நிலமாக இருந்தால் சாதாரணமாய் வாரத்துக்கு ஒரு முறை இலைகளைப் பறிப்பார்கள். இலைகளைப் பறிப்பதென்றால், 'நம் வீட்டுக் கொல்லையில் கீரைகளைப் பறிப்பது போலத்தான் இருக்கும்' என்று நினைப்பார்கள் சிலர். அப்படி அல்ல.

கண்ணை மூடிக்கொண்டு பறித்தால், அந்தத் தேயிலைகளைத் தொழிற்சாலையில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால், தேயிலை பறிக்கும்போது, 'தாயிலை'யையும் 'மீனிலை'யையும் செடியிலேயே விட்டுவிட்டு மீதியைத்தான் பறிக்க வேண்டும். காம்பைப் பெரியதாக விட்டுக் கிள்ளவும் கூடாது. கொழுந்து இலையாகப் பார்த்துக் கிள்ள வேண்டும். தேயிலைத் தோட்டத்தில் ஆட்கள் வேலை செய்யும்போது நாம் தூரத்திலிருந்து பார்த்தால், பச்சைத் துணியில் வெள்ளைப் பொட்டு வைத்தாற்போல் தோன்றும்.

கிழக்குத் தொடர்ச்சி மலைகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் சில இடங்களில்

**காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 6-2-'54), சென்னை.**



1. செடி சாதாரண உயரத்தில் இருந்தால் கூடை கட்டிக் கொண்டு தேயிலை பறிப்பார்கள். செடிகளில் சிக்கிக்கொண்டு சேலை கிழியாமல் இருப்பதற்காக, இடையில் ஒரு சாக்கைச் சுற்றிக் கொள்ளுகிறார்கள். செங்குத்தான உயரமாயிருந்தால், கூடையுடன் கீழே விழுந்து விடக்கூடும் என்ற பயத்தால், கூடைக்குப் பதில் கோணிப்பை வைத்துக்கொண்டு அதில் இலைகளைப் பறித்துப் போட்டுக்கொள்வார்கள்.

★



2. 'ரோப்-வே'யின் மூலம் பத்தே நிமிஷத்தில் தேயிலையையும் பிற சாமான்களையும் மேலே தூக்கி விடுகிறார்கள். இரண்டு மூன்று பள்ளத்தாக்குகளைத் தாண்டிக்கூட இப்படிச் சில நிமிஷ நேரத்தில் தேயிலை முதலிய பொருள்களை மேலே கொண்டுவந்து விடுகிறார்கள்.

3. 'சந்து' என்ற தட்டுக்களில் தேயிலையைப் போட்டு லேசாகப் பரப்பி விடுகிறார்கள். பின்பு சூட்டு விசிறியின் உதவியால் பதினெட்டு மணி நேரம் அப்படியே வதக்குகிறார்கள்.



★

4. 'ரோலர்' என்ற ஓர் இரும்புத் தட்டில் தேயிலையைப் போட்டு உருட்டுகிறார்கள். இதற்குத் தேயிலை ரோலர் என்றுபெயர். கீழே இருப்பது தேயிலைத் தட்டு.



★

5. கடைசியில் முதல் ரகம், இரண்டாவது ரகம் என்று பல ரகங்களாகப் பிரித்துச் சல்லடை போடுகிறார்கள். இப்படிப் பிரித்த ரகங்களை வெள்ளைப் பெட்டிகளில் போட்டுப் 'பாக்கிங்' செய்கிறார்கள். கறுப்பாக விழுவது இல்லை.



தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. அந்த மலைத் தொடர்கள் சில இடங்களில் சாதாரண உயரமும், சில இடங்களில் தலையை நிமிர்ந்து நோக்க வேண்டிய நிலையிலும் இருக்கின்றன. சாதாரண உயரமாயிருந்தால், கூடை கட்டித் தேயிலை பறிக்கிறார்கள். மிகவும் செங்குத்தான உயரமாயிருந்தால், கூடையுடன் தலை கீழாக விழுந்து விடுவார்கள் என்ற பயத்தால் கூடைக்குப் பதிலாகக் கோணிப் பைகளில் இலைகளைப் பறித்துப் போட்டுக் கொள்ளுகிறார்கள். இவர்களுடைய புடைவை செடிகளில் சிக்கிக்கொண்டு கிழிந்துவிடாமல் இருப்பதற்காகப் புடைவையின் மேல் கோணியை இடுப்பில் சுற்றிக் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

சாதாரணமாய் ஆண்களைவிடப் பெண்கள் தான் இந்த வேலையைச் செய்கிறார்கள். சில சமயம் மிகவும் பள்ளத்தாக்கிலிருந்து தேயிலை, காபி, விறகு மூன்றையும் தொழிற்சாலைக்குக் கொண்டு வர வேண்டியதாயிருந்தால் சாதாரணமாய் மனிதர்களும் சுமை தாங்கிக் கழுதைகளும் கொண்டுவருவது கடினம்; நேரமும் வீணாகும். நான் நேரில் கண்ட சில இடங்களில், மனிதன் நடப்பதே கஷ்டம். தவறி விழுந்தால்...? இந்த அபாயத்தை எண்ணி, கீழிருந்து மூட்டைகளாகக் கட்டி யந்திரங்களின் உதவியால் கம்பிகளின் மூலம் சுமார் இரண்டு மூன்று பள்ளத்தாக்குகளைத் தாண்டிப் பத்தே நிமிஷத்தில் மேலே கொண்டுவந்து விடுகிறார்கள். இப்படிக் கொண்டு வரும் கம்பிக்கு 'ரோப் வே' என்று பெயர். மிகப் பாதாளத்தில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களின் சில பொருள்களுங்கூட 'ரோப் வே' வழியாக மேலே வருவதுண்டு.

தேயிலைத் தோட்டத்தைப் பாதுகாப்பதும், பயிர் செய்யும் விதமும் போற்றத் தக்கவை. தேயிலைச் செடியை முதலில் சிறிய சிறிய கூடைகளில் பயிர் செய்கிறார்கள். அந்தக் கூடைகள் ஆழாக்கு அளவு இருக்கின்றன. செடி நன்றாக வளர்ந்த பின், அதைக் கூடையுடன் எந்த இடத்தில் தரையில் வைக்கவேண்டுமோ, அங்கே அப்படியே கூடையோடு நட்டு விடுகிறார்கள். பயிரை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கிறார்கள். மிருகங்களால் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டால், அந்த மிருகங்களை உடனே 'எஸ்டேட்'டை விட்டு அகற்றி விடுகிறார்கள். தேயிலை 'எஸ்டேட்'டுகளில் அங்கங்கே பூச்சி பிடித்த தேயிலைச் செடிகளை வேருடன் வெட்டி உடனே தீக்கு இரையாக்குகிறார்கள். மற்றச் செடிகளுக்குப் பூச்சி பரவாமலும் மக்களுக்கு வியாதிகள் பரவாமலும் தடுக்கவே இப்படிச் செய்கிறார்கள்.

மாதம் ஒரு முறை நிலத்தைக் கொத்திக் களை பிடுங்குகிறார்கள். வருஷம் ஒரு தடவை ஆழமாகக் கொத்தி விடுகிறார்கள்.

தேயிலைச் செடிக்குப் புதிய காட்டு நிலங்களின் இயற்கை உரமே மிகவும் உகந்தது. களையெடுத்துக் காய்ந்த புல், இலைகள், மிருகங்களின் சாணம், எலும்புத் தூள், பிண்ணாக்கு முதலியவை நல்ல உரங்கள்.

இப்படி வளர்ந்த தேயிலைச் செடியிலிருந்து, கவனித்துக் கொழுந்து இலையாகப் பார்த்துச் சேகரித்து, கடைசியில் தேயிலைத்

தொழிற்சாலைக்குக் கொண்டு போவார்கள். தொழிற்சாலையின் வாசலில் மறுபடியும் அவைகளைக் கொட்டி, அவற்றில் இருக்கும் கழிவுகளைத் தள்ளிப் பொறுக்கி எடுத்த முதல் ரகமான இலைகள் தொழிற்சாலைக்குள் போகும்.

தொழிற்சாலையில் 100 பவுண்டு பச்சையிலையைப் பதன் செய்தால் 25 பவுண்டு தேயிலைதான் தேறு மாம். தேயிலை பதன் செய்யும் வேலையை ஐந்து பாகமாகப் பிரித்துக்கொள்கிறார்கள். சுத்தம் செய்த தேயிலைகளைச் 'சந்து' என்ற ஒருவிதத் தட்டில் போட்டு லேசாகப் பரப்புகிறார்கள். இங்கே சூட்டு விசிறியின் உதவியால் 18 மணி நேரம் வதக்குகிறார்கள். பல தட்டுக்கள் இருக்கின்றன. ஒரே வேளையில் 10,000 பவுண்டு தேயிலையைத் தயார் செய்கிறார்கள். இதற்குப் பிறகு, ஓர் இரும்புத் தட்டில் போட்டு உருட்டுகிறார்கள். பின்னால் 'தட்டு மேல் தட்டு' என்ற இடங்களில் போட்டுப் பதன் செய்தபின், 'அடுப்பு' என்பதில் சிறிது சிறிதாக வெட்டிப் போட்டுப் பதன் செய்த பிறகு, ரகம் பிரித்துச் சல்லடை போடுகிறார்கள். கடைசியில் பெட்டிகளில் போட்டுப் 'பாக்கிங்' செய்கிறார்கள்.

'எஸ்டேட்'டுகளில் வேலை செய்யும் மக்கள் சந்தோஷமாயும், முக மலர்ச்சியோடும் இருக்கிறார்கள். இங்கே வேலை செய்கிறவர்களுக்கு ஜாகை, அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி, காலை பத்து மணிக்குப் பிள்ளைகள் குடிப்பதற்காக நல்ல பால், பகல் பன்னிரண்டு மணிச் சங்கு பிடித்ததும் பிள்ளைகளுக்குச் சாப்பாடு இவைகளை எல்லாம் இலவசமாகக் கொடுக்கிறார்கள்.

தேயிலை சுத்தமாகவும், சுகாதார விதிப்படியும் தயாராகியிருக்கிறதா என்று கவனிக்கவும், மேற்பார்வையிடவும் ஒரு நர்ஸும் ஒரு டாக்டரும் இருக்கிறார்கள்.

காலையில் வியாதிக்காரர்களுக்கு 'எஸ்டேட்' வைத்தியசாலையில் மருந்துகள் கொடுக்கிறார்கள். மொத்தத்தில் தேயிலைத் தோட்டமும், தொழிற்சாலைகளின் நிர்வாகமும் மிக அழகாக நடக்கின்றன.

## டென்மார்க் அரச பீடம்

சமீபத்தில் டென்மார்க் நாட்டில் பெண்களும் பட்டத்துக்கு வரலாமா, கூடாதா என்று பொது ஜனங்களைக் கேட்டு ஓட்டு எடுத்தார்கள். பெண்கள் பட்டத்துக்கு வரலாம் என்றே அதிலிருந்து முடிவாயிற்று. இதனால் 13-வயதுள்ள இன்கால்ஃப் என்ற இளவரசனுக்குப் பட்டம் கிடைக்காது. அவனுடைய அக்காள் மார்க்ரெத் என்ற இளவரசிக்கே பட்டம் கிடைக்கும். இதுபற்றி இளவரசனைப் பள்ளிக் கூடத் தோழர்களெல்லாம் ஒரு நாள் கேலி செய்தார்கள். அப்போது அவன், "ராஜா பட்டம் யாருக்கு வேண்டும்? அதைவிடக் குழாய் ரிபேர் செய்யும் ஒரு தொழிலாளியாக இருக்கவே நான் விரும்புவேன்" என்றான்.

—'ஆன்ஸெர்ஸ்'

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

மீனா, சென்னை.

கேள்வி 1: ஒரு பெண்ணுக்குக் கீல் வாதத்தினால் இருதயம் பாதிக்கப்பெற்றுப் பலவீனமாக இருக்கும் சமயத்தில் கர்ப்பம் தரித்தால், பிறக்கும் குழந்தைக்கும் இருதயம் பலவீனமாகி விடும் என்கிறார்களே; உண்மைதானா?

விடை 1: 'கீல்வாயுவினால் பாதிக்கப்பெற்ற பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் கீல்வாயு ஏற்படுமா?' என்று கேட்டால், கேள்வி அதிகப் பொருத்தமாக இருக்கும். கீல்வாயு ஒரு குடும்பத்தில் வம்ச பரம்பரையாகத் தோன்றுவதுண்டு என்று வைத்தியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அப்படிக் கீல்வாயு தோன்றலாம் என்றால், இருதய நோயும் அதன் சிக்கலாகத் தோன்றக் கூடும். பிறந்தது முதலே இருதய நோய் நேரடியாகத் தோன்றுவதில்லை. மேலும், குழந்தையை நல்ல சூழ்நிலையில் வைத்திருந்தால், கீல்வாயு தோன்றாமலே இருந்துவிடலாம்; அதனால் இருதயநோயும் தோன்றாமல் இருந்துவிடலாம்.

கே. 2: அதிகமாகப் பெனிசிலினை 'இஞ்செக்ஷன்' செய்துகொண்டால், பிற்காலத்தில் 'அல்லர்ஜி' என்னும் வியாதியால் கஷ்டப்பட நேரிடும் என்பது நிஜந்தானா?

வி. 2: 'அல்லர்ஜி' என்பது ஒரு பொது வியாதி. எத்தனையோ பொருள்கள் 'அல்லர்ஜி' என்ற




நோய்க்கூறுகளை எழுப்பக்கூடும். முதல் முதல் உபயோகிக்கும் போதே ஒரு பொருள் 'அல்லர்ஜி'யை எழுப்பலாம். இதைத்தான் சாதாரணமாய் 'அல்லர்ஜி' என்று சொல்லுவது. முதல்

தடவை உபயோகிக்கும்போது 'அல்லர்ஜி'யை எழுப்பாதிருந்து விட்டுச் சில தினங்களுக்குப் பிறகு இரண்டாவது தடவை அந்தப் பொருளை உபயோகிக்கும்போது 'அல்லர்ஜி'யை அது எழுப்பக்கூடும்.

பெனிசிலினுக்கு 'அல்லர்ஜி' ஏற்படுவது மிக மிகக் குறைவே. முதல் முதல் பெனிசிலினை உற்பத்தி செய்தபோது, அது நோயாளிக்குச் சில வேளை 'அல்லர்ஜி'யை எழுப்பியது. இன்று பெனிசிலினை எவ்வளவோ தூய்மையாகச் செய்வதால் அதனால் விளையும் 'அல்லர்ஜி' மிக மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கிறது; அநேகமாய்த் தோன்றுவதேயில்லை.

கே. 3: என் காதில் சில சமயம் ஓயாத இரைச்சல் இருக்கிறது. அதிலும், ஜன நெருக்கம் உள்ள இடங்களுக்குப் போய்விட்டு வந்தால், காதில் 'டப், டப்' என்ற ஓசை கேட்கிறது. அது எதனாலே?

வி. 3: உடம்பில் பலவீனம் இருந்தால், காதடைப்பு உண்டாகலாம். இரைச்சல் ஏற்படுவது சிலவேளை செவிடாவதற்கு ஆரம்பக் குறி



யாகலாம். ஆனால், வீட்டில் தோட்டம் இருந்தால், அதில் குடியாக இருக்கும் பிராணிகள் சில, ஓசையை இடைவிடாது இரைச்சல்போல் எழுப்பலாம். வெளியில் ஏற்பட்ட சத்தம் காதிலே வெகு நேரம் விழுந்து அந்த ஓசையின் ஞாபகம் ஓசை நின்ற பிறகும் சற்று நேரம் தோன்றிக்கொண்டேயிருக்கலாம். கேள்வி கேட்ட அம்மாள் காது செவிடாகிவிடுமோ என்று அச்சப்படக் காரணமில்லை என்று நம்புகிறேன்.

**சசிகலா, மயிலாப்பூர்.**

கே. 1: வயதானாலும் சிலபேர் உயரமல் குள்ளமாகவே இருக்



கிறார்கள்; அவர்களுடைய முதுகு வளைந்திருக்கிறது; இதற்குக் காரணம் என்ன?

வி. 1: கேள்வியில் 'வயதானாலும்' என்பதன் கருத்து 'முதியோரான பிறகும்' என்பதுதான் என்று நினைக்கிறேன். குள்ளமாயிருப்பது வம்ச குணமாக இருக்கலாம்; அல்லது 'பிட்யூட்டரி' கிரந்திக் கோளாறு காரணமாக ஏற்பட்டதாக இருக்கலாம். குள்ளம் வம்சகுணமாக இருந்தால்,

அப்படிப்பட்டவனை உயரமாக்குவது சாத்தியமில்லை. ஆனால், 'பிட்யூட்டரி' கோளாற்றைத் திருத்தி இரண்டாவது குள்ளனை இயற்கையான உயரம் அடையச் செய்யச் சில வேளை இயலும்.

முதுகு வளைந்திருப்பதால் குள்ளம் ஏற்படுவது நோயாக இருக்கலாம். முக்கியமாக, முதுகெலும்பில் க்ஷயரோகம் பற்றிக்கொள்வதால் குள்ளம் ஏற்படலாம்.

**கே. வரதராஜன், காரத்தோழுவு.**

**கே:** என் குழந்தைக்குச் சுமார் 3 வயது ஆகிறது. சாதாரணமாகப் புஷ்டியாகவே இருக்கிறான். ஆனால் வளராமல் குள்ளமாகவே இருக்கிறான். எங்கள் வம்சத்தில் நாங்கள் எல்லாரும் உயரமானவர்கள். இதற்கு என்ன செய்யவேண்டும்? விவரமாகத் தெரிவிக்க வேண்டும்.

தவிர, குறிப்பிட்ட ஓர் இடத்தில் அடிக்கடி சிலந்தி வருகிறது. ரத்தமும் சீழும் கலந்து வருகின்றன. இதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

**வி:** குழந்தை நன்றாய் விளையாடுகிறானா? நன்றாய்ச் சாப்பிடுகிறானா? தூங்குகிறானா? அவன் நிறை சாதாரணமாக 3 வயதுக் குழந்தைக்கு வேண்டிய நிறைதானா? இந்த விஷயங்களில் குற்றங் குறை இல்லாது போனால், அவன் குள்ளமாக இருப்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். வம்சத்தில் எல்லாரும் உயரமாயிருப்பது நிச்சயந்தானா? பிள்ளையின் தாய் வம்சம் எப்படி என்று எழுதவில்லை. அந்த வம்சத்தில் யாராவது குள்ளமாக இருந்தால், அது பிள்ளைக்குத் தோன்றலாம். மேலும், குழந்தைப் பருவத்தில் குள்ளமாய்த் தோன்றினாலும் பருவகாலம் வரும்போது உயர்ந்துவிடலாம்.

குறிப்பிட்ட இடத்திலேயே சிலந்தி தோன்றுவதற்குக் காரணம், அந்த இடத்தில் எலும்பில் கேடு நேர்ந்திருக்கலாம். நல்ல டாக்டரைக் கொண்டு பரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

**க. ரா. ரகுபதி, புகலூர்.**

**கே:** மூன்று வயதில் இளம்பிள்ளை வாதம் வந்ததால், அதன் விளைவாக இப்போது, எழுந்து நிற்க, நடக்க, படுத்தால் எழுந்திருக்க, உட்கார்ந்தபடியே சிறிது நேரம் நகர இப்படி ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது. உட்கார்ந்து உட்கார்ந்து முதுகில் கூனல் மாதிரி இடது பக்கம் வளைந்திருக்கிறது. உட்காரும் போதும் இடது பக்கம் உடல் பாரம் அழுந்தும்படியே உட்கார வேண்டியிருக்கிறது.

முழங்கால்களை நன்றாக நீட்டும்படி இருக்கவேண்டும். அதற்குப் பரிகாரம் உண்டா? இது சம்பந்தமாய் வைத்தியம் செய்யக்கூடியவர்கள் இருந்தால் அவர்களின் விலாசத்தைத் தெரிவிக்க முடியுமா?

**வி:** இளம்பிள்ளை வாதம் செய்யும் கொடுமைகள் இப்படிப்பட்டவை. இந்த நோயின் விளைவாக அநேக மக்கள் தீராத்துயரம் அடைகிறார்கள். இந்த நோயாளிக்கு இத்தனை ஆண்டுகளாய்த் தசைகள் குன்றிப் பெரும்பாலும் அழிந்தே போயின என்று தோன்றுகிறது. இந்த நிலையில் பரிகாரம் தேடுவது மிகவும் கஷ்டம். இப்போது செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்றே தோன்றுகிறது.

# சிறுகதைப் பஞ்சம்

★

**எத்தனை எத்தனையோ பேர் சிறுகதை எழுதுகிறார்கள். அப்படியிருந்தும், 'சிறுகதைக்குப் பெரும் பஞ்சமாயிருக்கிறதே' என்று பத்திரிகாசிரியர்களெல்லாம் தவிக்கிறார்கள். இங்கு மட்டுமல்ல; உலகெங்குமேதான். பிரிட்டனில் சிறுகதை எழுத்தாளரில் பிரபலமான ஒருவரும் பத்திரிகை அநுபவம் உள்ளவருமான ஜாக் ட்ரேவர் ஸ்டோரி என்பவர் 'ஜான் அவ் லண்டன் வீக்லி'யில் எழுதியிருக்கும் இந்தக் கட்டுரை அந்த விநோதத்தின் காரணத்தை விளக்குகிறது.**

சிறுகதை இலக்கியத்தில் விசித்திரமான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வர வர அதிகமான பேர் சிறுகதைகள் எழுதி அனுப்புகிறார்கள்; ஆனால், அவைகளில் தாங்கள் பிரசுரிக்கத் தக்க ஒன்றைப் பொறுக்கி எடுப்பது பத்திரிகாசிரியர்களுக்கு வர வரக் கஷ்டமாயிருக்கிறது. கதைகள் பிரசுரிக்கும் அநேகம் பத்திரிகைகளுக்கு வாரம் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான சிறுகதைகளின் கையெழுத்துப் பிரதிகள் வருகின்றன. அவைகளில் நூற்றுக்கு ஒன்றுதான் பிரசுரிக்கத் தக்கதாயிருக்கிறது.

ஒரு விஷயந்தான் ஆசிரியருக்கும் சரி, எழுத்தாளருக்கும் சரி - மிக்க வேதனை அளிக்கக் கூடியது. பல பேர் தங்கள் கதைகளை நன்றாகவே எழுதியிருக்கிறார்கள். ஆனால், அப்படியிருந்தும் அவைகளின் முதல் வரியைப் படித்து முடிக்கு முன்பே அவைகளை ஆசிரியர் தள்ளிவிட வேண்டியதாயிருக்கிறது. சென்ற பத்து அல்லது இருபது வருஷகாலத்தில் சிறுகதை அமைப்பில் ஏற்பட்டிருக்கும் மகத்தான மாறுதல்களைக் கதாசிரியர்கள் தெரிந்துகொள்ளாததே இதன் காரணம்.

பேசும் படம் வந்துள்ள இந்தக் காலத்தில் மௌனப் படம் எப்படி மறைந்துவிட்டதோ அதே போலத்தான், 1933-ஆம் வருஷத்துச் சிறுகதை அமைப்பு இன்று பழம் பசலிச் சங்கதி ஆகிவிட்டது. அந்தக் காலத்துச் சிறுகதை உருவம் இன்று இல்லை. மக்களுக்குப் பொழுது போக்கான ஸினிமா, டெலிவிஷன், கார்ட்டூன் சுருள் இவைகளோடு கதைகளும் போட்டி போடவேண்டியிருக்கிறது. இந்தக் கதை எழுதும் கலை இப்போது வெகு தூரம் முன்னேறியிருக்கிறது. இன்று தம் கதையில் சிறிதும் வெளிப்படாமல் கதாசிரியர் பின்னே மறைந்திருப்பார். கதை வாசகரின் மனக் கண்முன் தத்ரூபமாய் நிகழும். நேரே ஏற்படும் ஓர் அநுபவமாகவே கதையை வாசகருக்குக் கதாசிரியர் அளிக்கிறார்.

தம் கதையின் இடையிடையே கதாசிரியரே தோன்றிப் பேசுவதும், பின் பகுதியைப் படிக்கும்போது திரும்பத் திரும்ப முன் பகுதிக்குச் செல்லும்படி செய்யும் தந்திரங்களும் வாசகர்களுக்கு இப்போது சகிப்பதில்லை. ஆனால், கண்ட கண்ட அபிப்பிராயங்களையெல்லாம் திருப்தி செய்வதற்காக, கதாசிரியர் தமக்கு இருக்க வேண்டிய அந்தரங்க சுத்தியைக் கைவிட மாட்டார். கதை இப்படி இருக்கவேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒவ்வொரு பத்திரிகையும் வெவ்வேறு லட்சணங்களை வகுத்து வைத்துக் கொண்டிருக்கலாம். அவை எப்படியிருந்தாலும் சரி, யந்திரத்தில் உற்பத்தியானதுபோல் கதை இருக்கக் கூடாது. அதில் ஜீவன் இருக்க வேண்டும்; சிருஷ்டிச் சுடர் இருக்கவேண்டும். சொல்லும் முறை, கருத்துக்களைப் பயன்படுத்தும் லாகவம் இவைகளிலேதான் நவீன காலத்துத் தேவைகளை ஒரு கதாசிரியன் திருப்தி செய்ய முயலலாம்.

பல கதாசிரியர்கள் இப்படித் திருப்தி செய்யத்தான் முயல்வதில்லை என்று தோன்றுகிறது. பிரபல பத்திரிகை ஒன்றுக்கு வரும் கதைகளைப் படித்து அபிப்பிராயம் சொல்லும் வேலையை நான் ஏற்றிருக்கிறேன். அந்தக் கதைகள் குறைந்த பட்சம் சரிபாதி நலிந்துபோன பழைய முறைகளில் அமைந்திருக்கின்றன; அல்லது புளித்துப் போன பழைய பொருள்களைப்பற்றியே இருக்கின்றன.

உதாரணமாக, இது முதல் வகை: மதுக்கடை, விளையாட்டுச் சங்கம், ரெயில் வண்டி இவை போன்ற ஏதாவது ஓரிடத்தில் இருந்துகொண்டு, ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு கதையைச் சொல்லுவான். இப்படிப்பட்ட கதைகளில் பெரும்பாலானவைகளின் ஆசிரியர்கள் நன்றாக எழுதியிருப்பதேயில்லை. சில கதைகளின் ஆசிரியர்கள் என்னவோ நன்றாய் எழுதக் கூடியவர்கள் என்று புலப்படுகிறது. ஆனால், நைந்து நலிந்த முறையைக் கைவிடாத வரையில், அவர்களுடைய திறமை பலன் தராது.

கேள்விப்பட்ட வீரதீரச் செயல்களைப்பற்றியும் சில்லறை விஷயங்களைப்பற்றியும் ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லுவதுபோல இன்னுங்கூடக் கதை எழுதி வருகிறார்கள். தம் கதை அங்கீகாரம் ஆக வேண்டாம் என்று ஒரு கதாசிரியர் நினைத்தால், அதற்குச் சரியான வழி இப்படி எழுதுவதுதான். இன்றைய வாசகர்கள், தாங்கள் படிக்கும் கதையோடு அப்படியே ஒன்றிக் கலந்துவிட விரும்புகிறார்கள். யாரோ ஒருவர் மற்றொருவருக்குச் சொல்வதுபோல் கதை அமைந்திருந்தால், வாசகர் எவ்விதம் இப்படிக் கதையுடன் ஒன்ற முடியும்? கதைப் பின்னல் எவ்வளவு நன்றாயிருந்தாலும் சரிதான், முடிவு எவ்வளவு புதுமையாயிருந்தாலும் சரிதான், அதனால் வாசகருக்கு உணர்ச்சி ஏற்படாது. ஏதோ இரண்டு பேர் உட்கார்ந்து பேசும் பேச்சு என்று வாசகருக்குத் தோன்றுமே ஒழிய, வேறு சம்பவம் எதுவுமே கதையில் நிகழாதது போல்தான் அவருக்கு உணர்ச்சி உண்டாகும்.

அடுத்தபடி, இரண்டாவது வகை: ஒரே ஒரு சிறு பிசகினால் நேர்ந்த கொலையைப்பற்றிய கதைகள் வெள்ளம்போல் வந்து பத்தி

ரிகாசிரியர்களை முழுகடித்து விடு கின்றன. அவைகளைத் திருப்பி அனுப்பி மாளவில்லை. கதையில் வாசகர் முற்றும் ஆழ்ந்துவிடும்படி செய்யவேண்டும். அப்போதுதான், முடிவிலே வரும் ஆசிரியரின் தந்திரம் வாசகருக்கு எதிர்பாராத வியப்பளிக்கும். ஆனால், கொலையாளி ஒருபோதும் இப்படிப் பிழை செய்வதேயில்லை. ஆசிரியரின் கடைசித் தந்திரத்துக்காகவே, யந்திரம்போல் ஓடுகிறது கதை. இதில் சுவாரஸ்யம் இருப்பதில்லை.

பிங்-பாங் பந்து மாதிரி ஆசிரியரிடம் வருவதும் அவர் திருப்பிவிடுவதுமா யிருக்கும் மற்றக் கதைகளும் உண்டு. வைத்திருப்பவனைச் சாகடிக்கும் துரதிருஷ்ட நகைகள், மந்திரவாதக் கறுப்பர்களைப் பிரமித்துக் குழம்பச் செய்யும் வெள்ளைக்காரர் ஜாலவேடிக்கை, சூழ்ச்சி செய்பவர்களே சூழ்ச்சியில் சிக்கும் விநோதம், பெரிய பரிசுப் போட்டிகளில் தங்களுக்குப் பரிசு விழுந்ததாகக் கேட்பவர் பிறகு அடையும் ஏமாற்றம், நல்ல பிசாசுகள், கெட்ட பிசாசுகள் இவைபற்றியெல்லாம் எழுதிவிடுகிறார்கள்.

ஒரு காலத்தில் ஆச்சரியம், பயங்கரம், உணர்ச்சிப் பரபரப்பு இவையெல்லாம் மூட்டிய கதைகள் இன்று அப்படி இல்லை. சிறுவர்களுக்கு வேண்டுமானால் அவை பிடிக்கலாம். இதைக் கதாசிரியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். பத்திரிகை வாசகர்கள், அந்த நிலையிலிருந்து இன்று வளர்ந்துவிட்டார்கள். அவர்களை ஏமாற்ற முடியாது. நேற்று உணர்ச்சி மூட்டும் கதையாக இருந்தது இன்று கேலிக்கூத்தாகி விட்டது.

ஆசிரியர் திடீர் திடீரென்று முன்னே வந்து நிற்பது இன்னொரு குறை. இன்று அது பழம் பசலி முறை யாகிவிட்டது. எந்தப் பத்திரிகாசிரியரும் அப்படிப்பட்ட கதையைப் பிரசுரிக்க மாட்டார். கதையின் ஒரு கட்டத்தை நிலை நாட்டுவதற்காக ஆசிரியரே பேசுவது, ஏதோ கதைச் சுருக்கம் போல்தான் ஆகிவிடுகிறது. இதற்கு நேர்மாறாக உள்ள மற்றொரு முறையும் மோசந்தான். சம்பாஷணை மூலமோ, சிந்தனை அருவிமூலமோ தகவல்களை வெளியிடும் முறையையே சொல்கிறேன். மிகவும் புத்திசாலியான தன் மனைவிக்குக் கணவன், "நமக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றன" என்று நினைப்பூட்டுவான். எதற்காக என்றால், வாசகருக்கு அந்தத் தகவல் தெரியவேண்டுமாம்; அதற்காகவே!

திருப்பியனுப்பும் கதைகளைப் பற்றி இவ்வளவு தூரம் சொல்லியாயிற்று. இனி எந்தக் கதைகளைக் கண்டதுமே பத்திரிகாசிரியர் ஆனந்தக் கூத்தாடுகிறார் என்று பார்ப்போம். (உண்மையிலேயே ஒருவர் இப்படிக் கூத்தாடியதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.) பிரசுரிக்கக்கூடிய கதையைக் காண்பதுதான் அவருக்குப் பேரானந்தம் அளிக்கும். ஆயினும், தாம் பிரசுரிக்கக்கூடியதோ இல்லையோ, எதுவாயிருந்தாலும் சரிதான்; நல்ல கதை என்றாலே அவருக்கு முகமலர்ச்சி நிச்சயமாய் ஏற்படும். ஏனென்றால், நல்ல கதை அவ்வளவு அரிதாயிருக்கிறது. உண்மையான பாத்திரங்கள், பிரத்தியட்சமான பிரச்னைகள், உடல் - மனப் போராட்டம், இருதயத்தைப்பற்றிய விவகாரங்கள் இவையெல்லாந்தான் நவீனச் சிறுகதை சமைவதற்குரிய அம்சங்கள்.

கதை ஜோடனையில் பெரிய சிக்கல் எல்லாம் இருக்கக் கூடாது. அகஸ்மாத் சம்பவம் உண்மை வாழ்க்கையில் நேரிடலாம்; ஆனால், கதையில் அற்ப அகஸ்மாத் சம்பவங் கூட நேரக்கூடாது.

உடலின் செயலோடு மன நிகழ்ச்சியும் சேரவேண்டும். கடலிலோ, காட்டிலோ ஓர் ஆபத்தை ஒருவன் கடக்கலாம். அதே சமயத்தில், அவனுடைய குணத்திலும் ஒரு மாறுதல் ஏற்பட வேண்டும். மனச்சிக்கல் ஒன்றை அவன் தீர்த்துக்கொள்ள வேண்டும்; தன்னைச் சூழ்ந்து கவிந்த இருள் விலகப் பெறவேண்டும். கதையில் நிகழும் செயலால், திருப்தியான, நிரந்தரமான ஒரு பலன் ஏற்பட வேண்டும்.

இப்படிப்பட்ட கதையே என்றாலும், நம்ப முடியாத அமானுஷ்ய முறையில் அமையக் கூடாது. பிரத்தியட்ச சாத்தியமான பாத்திரங்களாயிருந்தால்தான் வாசகர் நம்ப முடியும். அத்தகைய பாத்திரங்களைக் கொண்ட கதையே நம்பக்கூடியதாயிருக்கும். முக்கியமாகக் கதையின் பிரதான பாத்திரம், வாசகரின் அநுதாபத்தைப் பெறவேண்டும். லாப்லாண்டு வாசியோ, சித்திரக்குள்ளனோ வாசகரின் அநுதாபத்தைப் பெறமாட்டான். பிரதான பாத்திரத்தை நடுநாயகமாக வைத்துக் கொண்டே முழுக் கதையையும் புனையவேண்டும். ஒரு பாத்திரத்தை வாசகர் நம்பிவிட்டால், அப்புறம் அந்தப் பாத்திரத்துக்கு நேரிடும் எந்த நிகழ்ச்சியையும் நம்பத் தயாராகிவிடுவார்.

ஆனால், கதையை எழுதத் திட்டமான விதிகள் எவையும் இல்லை. எந்தமாதிரி வாசகர்களுக்காகக் கதையை எழுதி விற்கப் போகிறோம் என்பதை மட்டும் கதாசிரியர் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். பெண்கள் பத்திரிகையின் வாசகர்களுக்கு உணர்ச்சிக் குழப்பத்திலிருந்து மனச் சாந்தி பெறும் ஒரு பெண்ணின் கதை வேண்டும். அவர்களுக்குப் பிரமாதமான கதைப் பின்னல் எல்லாம் தேவையில்லை. ஆனால், பாத்திரங்கள் அநுதாபமுள்ளவர்களாயிருக்கவேண்டும்; கதையைத் திறமையோடும் உணர்ச்சியோடும் எழுதியிருக்க வேண்டும். பகட்டான குடும்பப் பத்திரிகைகளுக்கு விறுவிறுப்பான கதை வேண்டும். கொலை, களவு, தீரம், ஆபத்து, (யுரேனியம் போல் அபூர்வமாயிருக்கும்) ஹாஸ்யம் இவைகள் அதில் இருக்கவேண்டும்.

வேடிக்கை விளையாட்டுக்களைப் பின்புலமாய்க் கொண்ட கதைகள் இப்போது ஆதரவு பெற்று வருகின்றன. சூதாட்டத்தைப் பொருளாகக் கொண்ட கதை நிச்சயம் வெற்றி பெறும். ஏனென்றால், எப்படி முடியுமோ என்ற ஆவலை அது எழுப்புகிறது. தொழிற்சாலை, கடை, காரியாலயம் இவை பற்றிய கதைகளுக்கும் இப்போது 'மவுசு' ஏற்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் கதையின் பின்புலம் இருந்தாலும், மனித சுபாவத்தைச் சித்திரிப்பதையே முக்கியமாகக் கொள்ளவேண்டும். கதையில் நிகழும் செயல்கள் என்னவாயிருந்தாலும், பாத்திரங்களின் மனத்தில் ஏற்படும் விளைவுதான் மிகவும் முக்கியம்.

ஆனால், இந்தக் குறிப்புக்களே சிறுகதை எழுதுவதற்குரிய யுக்திகளின் முதலும் முடிவும் என்று கொண்டுவிடக் கூடாது. சில சிறு

கதைகள் இருக்கின்றன. அவை ஏதுமே சொல்வதில்லை; எந்தப் போராட்டத்தையும் சித்திரிப்பதில்லை. ஆனால், அவற்றின் எழுத்து இனிமையே வாசகரின் உள்ளத்தைக் கவர்ந்து விடுகிறது. பாத்திர வர்ணனை, தற்செயலாய் நேர்ந்த ஒரு வாக்குவாதம், செயலே இல்லாத ஒரு சொல் சித்திரம் இப்படிப்பட்ட ஒன்று, என்றும் மறக்க முடியாத ஒரு கதையாக அமைந்துவிடலாம். ஆனால், எழுத்துப் பலத்தாலேயே இப்படி அமையவேண்டும். இந்த மாதிரி ஒரு கதையை எழுதுவதும் சரி, பிரசுரிப்பதும் சரி பெரிய சாதனைதான். ஆனால் அது விற்பனையாகக்கூடிய மார்க்கெட் சொற்பம். இலக்கியப் பத்திரிகைகள்தான் அதை வெளியிடும். என்றாலும், கதாசிரியரின் எழுத்துத் திறமை நிலைப்படும்.

இந்த எல்லாத் துறைகளிலுமே பிரசுரிக்கத் தக்க கதைகளுக்குப் பஞ்சந்தான் ஏற்பட்டிருக்கிறது. அதிலும், 800 முதல் 1500 வார்த்தைகளுக்குள் அடங்கும் நல்ல சிறுகதை மிக அரிதாயிருக்கிறது. இந்த நீளத்தில் அமைந்த கதைக்குப் பிரமாதமான கிராக்கி இருக்கிறது. இப்படிப்பட்ட கதை அகப்படாததால், பத்திரிகாசிரியர்கள் சில சமயம் தங்கள் பத்திரிகையைக் கதையே இல்லாமல் வெளியிட நேர்கிறது. மிகமிகச் சிறுத்த சிறுகதைக்கென்றே அலாதி உருவம் உண்டு. நீண்ட சிறுகதையை எவ்வளவுதான் வெட்டிக் குறுக்கினாலும், குறுகிய சிறுகதை ஆகிவிடாது. ஆனால், சிலபேர் 3,000 வார்த்தைகளில் எழுதியனுப்பும் சிறுகதையையே 1,500 வார்த்தைகளில் எழுதியிருந்தால் நன்றாயிருக்கக்கூடும். ஆகவே, ஒரு கதையை எழுதும்போது, இந்தக் கதைக்கு இவ்வளவு நீளம் தாங்குமா என்பதை யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

தாங்கள் எழுதியனுப்பும் கதையெல்லாம் சில கதாசிரியர்களுக்குத் திரும்பித் திரும்பி வந்து கொண்டேயிருக்கின்றன. சிறுகதைக்குப் பஞ்சமாயிருக்கிறதென்று சொன்னால் அவர்கள் நம்ப மாட்டார்கள். சிறுகதை எழுதுகிறவர் கோஷ்டி ஒன்று சமீபத்தில் கூடியிருந்தது. "பத்திரிகாலயங்களுக்கு வரும் ஒவ்வொரு சிறுகதையின் கையெழுத்துப் பிரதியையும் படித்துப் பார்க்கிறார்களோ? படிக்காமலே தள்ளிவிடுகிறார்களோ?" என்று அதில் ஒருவர் கேட்டார். உண்மையில் அத்தனையையும் - பள்ளிக்கூட நோட்டுப் புத்தகத் தாளில் சின்னப் பையன் கிறுக்கி அனுப்புவதைக்கூடத் தான் - பத்திரிகாலயங்களில் படித்துவிடுகிறார்கள்.

கதை எழுதுவதில் சிலபேர் தான் எழுதலாம், மற்றவர் எழுதக்கூடாது என்பதில்லை. எல்லாருமே கதை எழுதலாம். கீர்த்தி பெற்றவரோ, மற்றவரோ யாராயிருந்தாலும் கவலையில்லை. கதைதான் முக்கியம். கதை எழுதுவோர் - கதை எழுதுவதையே தொழிலாகக்கொண்டவர்கள்கூட - இதை நம்பமாட்டோம் என்கிறார்கள்.

இங்கே தந்திருக்கும் தகவல்களை யெல்லாம் தெரிந்துகொள்வதன் மூலம் ஒருவர் கதை எழுதிவிட முடியாது. கதை எழுதியனுப்பியும் பிரசுரமாகாமல் தவிக்கும் சில கதாசிரியர்கள், சில புதிய முயற்சிகள் புரிய இவை

உதவியாயிருக்கும். கதைகள் திரும்பி வந்துவிட்டால், பத்திரிகாலயங்களில் இரும்புத் திரை போட்டிருப்பதாக அவர்கள் நினைத்துவிட வேண்டியதில்லை. கண்ட கண்ட எழுத்தாளர்களுக்கெல்லாம் பத்திரிகாசிரியர்கள் உற்சாக மூட்டுவதென்றால், கடித மூலம் கதை எழுதப் போதிக்கும் கலாசாலைகள்தான் நடத்தவேண்டும். எந்தப் பத்திரிகாசிரியருக்கும் அந்த வேலை புரிய அவகாசம் கிடையாது. அவருக்கு எத்தனையோ வேலை; அதில் இந்தச் சிறுகதைகளை அங்கீகரிப்பது ஒரு சிறு அம்சம்.

கதாசிரியர்கள் ஒன்று தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களிடமிருந்து கதைகளை வாங்கப் பத்திரிகாசிரியர் எந்நேரமும் காத்திருக்கிறார். கதாசிரியர்களுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

## மூதேவி பூஜை!

புது வருஷத்துக்கு முதல் நாள் மாலையில் ஜப்பானியர், 'தரித்திர தெய்வ'த்துக்கு ஒரு பூஜை நடத்துகிறார்கள். வில்லோ மரத்தால் ஒரு சிறு கப்பல் தயாரிக்கிறார்கள். பேராசை, பசி, தரித்திரம் இவைகளின் அதி தேவதைகளுடைய பெயர்களைச் சிறு காகிதத் துண்டுகளில் எழுதி அந்தக் கப்பலில் போடுவார்கள். தவிர, கொஞ்சம் அரிசி, ஸேக் என்ற மதுக் குப்பி ஒன்று, ஏற்றிய ஒரு மெழுகுவர்த்தி இவைகளையும் அதில் வைப்பார்கள். கப்பலைச் சமையல் அறையில் வைத்துப் பூஜையெல்லாம் நடக்கும். பிறகு அப்படியே கப்பலைக் கொண்டுபோய் ஓர் ஆற்றில் விட்டுவிடுவார்கள். தரித்திர தேவதை இதனால் திருப்தியுற்றுத் தங்கள் வீட்டுக்கு விஜயம் செய்யாமல் ஒதுங்கியிருப்பாள் என்று ஜப்பானியர் நம்புகிறார்கள்.

—'திங்ஸ் ஜப்பானீஸ்'

## மிகச் சிறு பிரசங்கம்

தாம் செய்த மிகச் சிறு பிரசங்கம் ஒன்றைப்பற்றிச் சொல்வதென்றால், ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்கு மிகவும் உற்சாகம். அந்தக் கூட்டம் வெகு நேரம் நீண்டுவிட்டது. ஐந்து பேர் பேசியாயிற்று. நடு ராத்திரி ஆகிவிட்டது. அப்போதுதான் கூட்டத் தலைவர், கூட்டத்துக்கு ஐஸன்ஹோவரை அறிமுகப்படுத்தினார். அவர் எழுந்தார்.

"இங்கிலீஷிலே எதைச் சொன்னாலும் முற்றுப் புள்ளிகள் உண்டு. இந்தச் சந்தர்ப்பத்தில் நானே முற்றுப் புள்ளி" என்றார்.

உட்கார்ந்து விட்டார். அன்று அவர் கையைக் குலுக்கிப் பாராட்டாதவர் கிடையாது.

—'நியூயார்க் ஸண்டே மிர்ரர்'



# சாவின் நினைப்பு

ஆசார்ய
விநோபா பாவே

**பெரியோர் பலர் 'பகவத் கீதை'க்கு வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஆசார்யரும் அதை விளக்கிப் பல அரிய பிரசங்கங்கள் புரிந்திருக்கிறார். 1931-இல் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த தூலியா சிறையில் அரசியல் கைதிகளுக்குச் செய்தவை இந்தப் பிரசங்கங்கள். மராட்டி மொழியில் இந்தப் பிரசங்கங்கள் புஸ்தக உருவில் வெளி வந்து பல்லாயிர மக்கள் படித்துப் பாராட்டியவை. அந்தப் புஸ்தகத்தை ஸர்வோதயப் பிரசுராலயத்தார் மிக நேர்த்தியாக மொழி பெயர்த்து, நல்ல தாளில் அழகாக அச்சிட்டு, மிக மலிவான விலையில் வெளியிட்டிருக்கிறார்கள்.**

'எந்த எண்ணம் இறக்கும் தறுவாயில் மேலெழுந்து நிற்கிறதோ அதுவே அடுத்த ஜன்மத்தில் வலுவுள்ளதாகிறது' என்ற தத்துவத்தைக் கீதை போதிக்கிறது. இந்தச் சோற்று மூட்டையை எடுத்துக்கொண்டு ஜீவன் மேலே யாத்திரைக்குப் புறப்படுகிறான். வாழ்க்கையில் ஒரு நாள் பகலில் சம்பாதித்ததை எடுத்துக்கொண்டு உறக்கத்துக்குப் பிறகு மறு நாளைத் தொடங்குகிறோம். அப்படியே இந்த ஜன்மத்தில் சேர்த்த சொத்துடன் மரணம் என்ற உறக்கத்துக்குப் பின்பு, நம் யாத்திரை மீண்டும் தொடங்குகிறது. ஆகவே, எப்போதும் நாம் மரணத்தை நினைவில் வைத்துக்கொண்டே நடக்க வேண்டும்.

ஏகநாத ஸ்வாமிகளைப்பற்றி ஒரு செய்தி உண்டு. ஒருவன் அவரிடம் வந்து, "ஸ்வாமி, தங்கள் வாழ்க்கை எவ்வளவு சிக்கலற்றதாகவும் பாவமற்றதாகவும் இருக்-

**மூலம்: கீதைப் பேருரைகள் (தமிழ்ப் புஸ்தகம்); பக்கங்கள் 372: விலை ரூ. 2-4-0. வெளியிட்டோர்: ஸர்வோதயப் பிரசுராலயம், திருப்பூர்.**

கிறது! எங்கள் வாழ்க்கை ஏன் அப்படி இல்லை? தாங்கள் எவரையும் கோபிப்பதில்லை; தங்களுக்கு எவரிடமும் சண்டை சச்சரவோ, விரோதமோ, வழக்கோ இல்லை. தங்கள் சுபாவம் எவ்வளவு அமைதியும் அன்பும் பொருந்தியதாக, எவ்வளவு புனிதமாக இருக்கிறது!'' என்றான்.

அதற்கு ஏகநாதர், ''என் விஷயம் இருக்கட்டும். உன்னைப்பற்றி ஒரு விஷயம் எனக்குத் தெரியும். இன்றிருந்து ஏழாவது நாள் நீ இறந்து போவாய்'' என்றார். ஏகநாதர் வாயிலிருந்து வந்த வார்த்தையை யார்தான் பொய் என்று மதிப்பார்கள்? ஏழு நாளில் சாவு! கேள்வி கேட்டவன் ஆயுளில் நூற்று அறுபத்து எட்டு மணி நேரந்தான் பாக்கியிருக்கிறது! ஏ கடவுளே! இது என்ன ஆபத்து!-அந்த மனிதன் அவசரம் அவசரமாய் வீட்டுக்கு ஓடோடியும் சென்றான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இறுதிக்காலத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடிப்பதாய்ப் பேசத் தொடங்கினான். இப்போது அவனுக்கு நோய் உண்டாகிவிட்டது. படுக்கையில் நீட்டிப் படுத்துவிட்டான். ஆறு நாள் கழிந்தது. ஏழாவது நாள் ஏகநாதர் வந்து, ''என்ன அப்பா, விசேஷம்?'' என்றுகேட்டார். அவன், ''எல்லாம் ஆயிற்று; இனிப் போகவேண்டியதுதான் பாக்கி!'' என்றான். ஏகநாதர், ''இந்த ஆறு நாளில் எவ்வளவு பாவம் செய்தாய்? எத்தனை பாவ எண்ணங்கள் உன் மனத்தில் உதித்தன?'' என்று வினவினார். மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவன், ''நாதரே, தீய விஷயங்களைக் குறித்து எண்ணுவதற்கு நேரமே கிடைக்கவில்லையே! மரணந்தான் சதா என் கண்முன் நின்றுகொண்டிருக்கிறதே!'' என்றான். ஏகநாதர், ''என் வாழ்க்கை பாவமற்றதாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று இப்போது உனக்குப் புலனாயிற்றா? மரணம் என்ற சிங்கம் எந்த நேரமும் எதிரே நின்றுகொண்டிருக்கும்போது, எவனுக்குத்தான் தீய எண்ணங்கள் தோன்றும்? பாவம் செய்வதற்குக் கவலையற்ற மன நிலை வேண்டும். ஆகவே, சாவைப்பற்றி எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பது, பாவத்திலிருந்து தப்புவதற்குள்ள ஓர் உபாயம். மரணம் எந்தக் கணமும் கண் எதிரில் நின்றுகொண்டிருந்தால், மனிதன் எந்தத் தெம்பைக் கொண்டு பாவம் புரிவான்?'' என்றார்.

ஆனால் மனிதன் தனக்கு மரணத்தின் நினைவு தோன்றாதிருக்க முயற்சி செய்துகொண்டே இருக்கிறான். பாஸ்கல் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி ஒருவர் இருந்தார். அவர் 'பாஸே' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். 'பாஸே' என்பதற்குச் 'சிந்தனைகள்' என்பது பொருள். அவர் அந்தப் புத்தகத்தில் பற்பல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் ஓர் இடத்தில், ''மரணம் எப்போதும் நமக்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கிறது. ஆனால் அதை மறப்பதற்காக மனிதன் எந்த நேரமும் முயற்சி செய்தவண்ணம் இருக்கிறான்; மரணத்தை நினைத்துக்கொண்டே நடப்பது எப்படி என்பதை அவன் எண்ணுவதே இல்லை'' என்கிறார். மனிதனுக்கு மரணம் என்ற சொல்லைக் கேட்கவே பிடிப்பதில்லை. உணவு அருந்தும்போது

எவராவது, "சாவு" என்று சொல்லிவிட்டால் போதும்; "என்ன அச்சானியமான வார்த்தை சொல்லுகிறாயே!" என்கிறான். இப்படி இருந்தும் நாம் வைக்கும் ஒவ்வோர் அடியும் மரணத்தை நோக்கியே நம்மை இட்டுச் சென்றுகொண்டிருக்கிறது.

பம்பாய்க்கு டிக்கட் வாங்கிக் கொண்டு நாம் ரெயிலில்போய் உட்கார்ந்துவிட்டோமானால், நாம் இருந்த இடத்திலிருந்து நகருவதில்லை. என்றாலும், வண்டி நம்மைப் பம்பாயில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். பிறவி எடுத்ததுமே நாம் சாவுக்கு டிக்கட் வாங்கிவிட்டோம். இப்போது நீங்கள் உட்கார்ந்துகொண்டிருங்கள்; அல்லது ஓடிக்கொண்டே இருங்கள்; உட்கார்ந்துகொண்டே இருந்தாலும், மரணம் வரும்; ஓடிக்கொண்டிருந்தாலும் வரும். நீங்கள் மரணத்தைப்பற்றி எண்ணினாலும் சரி, எண்ணாதிருந்தாலும் சரி, அது வராமல் போகாது. மற்ற விஷயங்கள் உறுதியில்லாமல் போனாலும் மரணம் என்பது மட்டும் உறுதி. சூரியன் மேற்கே அடிவானத்தில் மறையும்போது, நம் ஆயுளின் ஒரு பகுதியை அது உண்டுவிட்டது என்று மதியுங்கள். வாழ்க்கை இப்படிக் குறைந்துகொண்டே போகிறது; தேய்ந்துகொண்டே போகிறது; ஒவ்வொரு துளியாக வாழ்க்கைக் குடத்தின் நீர் குறைந்து கொண்டே வருகிறது. ஆயினும் மனிதனுக்கு அதைப்பற்றிச் சிறிதும் கவலை இல்லை. ஞானேசுவரர், "என்ன விந்தை இது?" என்கிறார். ஞானதேவருக்கு மனிதர் இப்படிக் கவலையற்றிருப்பது குறித்து வியப்பு உண்டாகிறது. மனிதனுக்கு மரணம் என்ற எண்ணமே பொறுக்க முடியாமல் போகும் அளவுக்கு அதனிடம் பயம் ஏற்படுகிறது. இதனாலேயே அவன் எப்போதும் அந்த எண்ணமே உண்டாகாதிருக்கும்படி செய்துகொள்ளப் பார்க்கிறான். கண்ணைத் துணியால் கட்டிக் கொண்டு விடுகிறான். போருக்குப் போகும் சிப்பாய், மரணத்தின் எண்ணம் தோன்றாதிருக்கும் பொருட்டு விளையாடுகிறான். பாஸ்கல், "எங்கும் மரணம் நேருக்கு நேராக இருந்தபோதிலும் இந்த டாமி (சிப்பாய்) அதை மறப்பதற்காக உணவிலும் குடியிலும் பாட்டிலும் கூத்திலும் ஆழ்ந்துபோய் இருக்கிறான்" என்கிறார்.

நாம் எல்லாரும் அந்த 'டாமி'யைப்போலவே இருக்கிறோம். மகிழ்ச்சி கொண்டதுபோல் முகத்தை மலர்ச்சியாக வைத்துக்கொள்வதும், உலர்ந்து போயிருந்தால் எண்ணெய் தேய்த்துப் 'பவுடர்' பூசிக்கொள்வதும், தலை நரைத்துப் போனால் கறுப்பு வர்ணத் தைலம் பூசிக்கொள்வதுமாக இருக்கிறான் மனிதன். நம் மார்பின்மேல் மரணம் நர்த்தனம் செய்துகொண்டிருக்கிறது; ஆயினும் நாம் 'டாமி'யைப்போல அதை மறப்பதற்கு ஓயாத முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நாம் வேறு எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசிக்கொண்டிருப்போம். மெட்ரிக் பரீட்சை தேறிய பையனிடம், "மேலே என்ன உத்தேசம்?" என்று கேட்டால் அவன், "இப்போது கேட்காதீர்கள். முதல் வருஷந்தானே நடக்கிறது!" என்பான். இரண்டாவது வருஷம் மீண்டும்

விசாரித்தீர்களானல், "முதலில் இண்டர் பூர்த்தியாகட்டும். பிறகு பார்த்துக்கொள்வோம்" என்பான். இதேபோல எல்லாம் நடந்து கொண்டே போகிறது. இனிமேல் நடக்க இருப்பதைக் குறித்து முன்னதாகவே சிந்திக்க வேண்டாமா? எடுத்து வைக்கப்போகும் அடுத்த அடியைப்பற்றி முன்பே யோசிக்க வேண்டாமா? இல்லாவிட்டால் அது நம்மைப் படுகுழியில் கொண்டுபோய் இறக்கி விடக்கூடுமே! ஆனல் மாணவன் இதைத் தட்டிக் கழிக்கிருன். பாவம், அவன் படிக்கும் படிப்பே அக்கரையில் என்ன இருக்கிறதென்று புலனுகாதபடி இருள் அடர்ந்ததாக இருக்கிறது. எனவே, மேலே செய்ய வேண்டியது என்ன என்ற கேள்வி எழாமல் அவன் பார்த்துக்கொள்கிருன். ஏனென்ருல், அவனுக்கு நாலு புறமும் தென்படுவது இருளே. உண்மையில் வரப்போவதைத் தட்டிக் கழிக்க முடியாது. அது வந்தே தீரும்.

கல்லூரியில் பேராசிரியர் தர்க்க சாஸ்திரம் போதிக்கிருர். "மனிதன் இறக்கக்கூடியவன். ஸாக்ரடீஸ் மனிதன். ஆகையால் ஸாக்ரடீஸ் இறப்பான்" என்று அநுமான தத்துவத்தை விளக்குகிருர். ஸாக்ரடீஸை உதாரணமாகச் சொல்லுகிருரே; தம்மையே உதாரணமாக ஏன் சொல்லக் கூடாது? பேராசிரியரும் மரணம் அடையப் போகிறவரே. "எல்லா மனிதர்களும் இறக்கக் கூடியவர்கள். ஆகையால் நானும் இறக்கக்கூடியவன்; மாணவர்களாகிய நீங்களும் இறக்கக் கூடியவர்கள்" என்று அவர் போதிக்க மாட்டார். ஸாக்ரடீஸிடம் மரணத்தைத் தள்ளி விடுவார். ஏனென்ருல், ஸாக்ரடீஸ்தான் இறந்து போய்விட்டாரே; பேராசிரியரை ஆட்சேபிப்பதற்கு எதிரில் இல்லையே என்ற தைரியம்! மாணுக்கரும் ஆசிரியரும் மரணத்தை ஸாக்ரடீஸிடம் ஒப்புவித்துவிட்டு, 'நானும் நீங்களும் மிச்சம்' என்று ஒத்துப் பேசிக்கொண்டு இருந்துவிடுகிருர்கள். அப்படி இருந்துவிட்டால் தங்களுக்கு ஆபத்து இல்லை என்பது அவர்கள் எண்ணம்போல் இருக்கிறது!

இப்படி மரணத்தை மறப்பதற்கான முயற்சி எல்லா இடங்களிலும் யதோக்தமாய் நடந்துகொண்டிருக்கிறது. ஆனல், இதனல் எல்லாம் மரணத்தைத் தவிர்க்க முடியுமா? தாய் நேற்று இறந்தபோது மரணம் எதிரில் வந்து நின்றது. அஞ்சாமல் மரணத்தைக் குறித்துச் சிந்தித்து அதைக் கடப்பதற்கான வழியை மனிதன் கண்டு பிடிக்கத் துணிவதில்லை. மானைச் சிங்கம் துரத்திக்கொண்டே போகிறது. சபலம் உள்ள மான் நாலு கால் பாய்ச்சலில் ஓடுகிறது. ஆனல் ஓட ஓட அதன் சக்தி குறைந்துகொண்டே போய் இறுதியில் மான் களைத்துப் போகிறது. பின்னலே சிங்கம் என்ற யமன் ஓடிவந்துகொண்டே இருக்கிருன். அந்தச் சமயத்தில் மானின் நிலை எப்படி இருக்கும்? சிங்கத்தின் பக்கம் பார்க்கவும் அதற்குத் துணிவு இராது. அது தரையில் தன் கொம்புகளையும் முகத்தையும் நுழைத்துக்கொண்டு நிர்க்கதியாய் நின்றுவிடுகிறது. "இப்போது நீ வந்து என்னைச் சாப்பிடலாம்" என்று அழைப்பதுபோல் இருக்கிறது அந்தக் காட்சி. நாம்

மரணத்தை எதிரில் பார்க்க விரும்புவதில்லை. நாம் அதன் கையிலிருந்து தப்புவதற்காக ஆயிரம் உபாயங்களையும் யுக்திகளையும் செய்தபோதிலும், அது தன் பேராற்றலினால் இறுதியில் நம் கழுத்தைப் பிடித்து நெரித்தே விடுகிறது.

மரணம் வரும்போது மனிதன் தன் வாழ்க்கையின் வரவு-செலவுக் கணக்கைப் புரட்டி மிச்சம் என்ன என்று பார்க்கிறான். பரீட்சை எழுத உட்கார்ந்திருக்கும் சோம்பேறிப் பையன் மைக் கூட்டில் பேனாவை இடுவதும் எடுப்பதுமாக இருக்கிறானே தவிர, வெள்ளைக் காகிதத்தைக் கறுப்பாக்குவதற்கு அவனுக்குத் துணிவு ஏற்படுவதில்லை. தம்பி, நீ ஏதாவது எழுதப் போகிறாயா, இல்லையா? சரஸ்வதி தேவி வந்து உன் பேனாவைப் பிடித்து உனக்காக எழுதப் போவதில்லையே! - மூன்று மணி நேரமும் முடிந்துபோகிறது. அவன் காகிதத்தை அப்படியே மடித்துக் கொடுத்து விடுகிறான்; அல்லது ஏதோ நான்கு வரி கிறுக்கிக் கொடுத்துவிட்டுப் போகிறான். கேள்விக்குப் பதில் எழுத வேண்டும், கணக்குக்கு விடை கண்டு பிடிக்க வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றுவதில்லை. இங்கே பார்ப்பதும் அங்கே பார்ப்பதுமாக இருந்துவிடுகிறான். நம் நிலைமையும் அப்படியேதான் இருக்கிறது. ஆகவே, வாழ்க்கையின் மறு முனை மரணத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நினைவில் இருத்திக்கொண்டு, இறுதிக் கணத்தைப் புண்ணியமயமாக, புனிதமானதாக, இனியதாகச் செய்வதற்கு ஆயுள் முழுவதும் நாம் பயின்று கொண்டே இருக்க வேண்டும். இன்றுமுதலே மனத்தில் மிகவும் உயர்ந்த, மிக மிக அழகிய ஸம்ஸ்காரங்கள் பதிவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன என்பதைக் குறித்துச் சிந்தித்தவண்ணம் இருக்கவேண்டும். ஆனால், நல்ல ஸம்ஸ்காரங்களின் பயிற்சியைப் பற்றி யாருக்குக் கவலை? இதற்கு மாறாக, அல்லும் பகலும் தீய விஷயங்களின் பயிற்சி நடந்து கொண்டே இருக்கிறது. நாவுக்கும் கண்ணுக்கும் காதுக்கும் சபலத்தில் பயிற்சி நடந்து கொண்டே இருக்கிறது. சித்தத்துக்கு வேறு வகைப் பயிற்சி அளிக்க வேண்டும். நல்ல விஷயங்களில் சித்தத்தை ஈடுபடுத்த வேண்டும். அதிலேயே சித்தம் தோய்ந்து போக வேண்டும். எந்தக் கணத்தில் நமக்கு நம் பிழை புலனாகிறதோ அந்தக் கணத்திலிருந்தே அதைத் திருத்திக் கொள்ள முனைந்துவிட வேண்டும். பிழை என்று தெரிந்த பிறகும் அதை அப்படியே செய்துகொண்டிருப்போமா? எப்போது நமக்கு நம் பிழை புலனாயிற்றோ அப்போதே நாம் மறு பிறப்பு எடுத்துவிடுகிறோம். அதை நம் புதிய பிள்ளைப் பருவம்-வாழ்க்கையின் புதிய காலை-என்று எண்ணிக் கொள்ளலாம். இப்போது நீங்கள் உண்மையிலேயே விழித்துவிட்டீர்கள். இனி அல்லும் பகலும் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்துக் கொண்டே எச்சரிக்கையாய் இருந்து வாருங்கள். இப்படிச் செய்யாவிட்டால் மீண்டும் வழுக்கி விழுவீர்கள்; தீய பழக்கங்கள் ஆரம்பமாகிவிடும்.

# பாபுராவ் பதில் சொல்லுகிறார்

**கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபில்மிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபில்மிண்டியா' மார்ச்சு '54 இதழில் வந்தவை.**

கேள்வி: மகாத்மா காந்தி தேச பிதா ஆனால் தேசத்தின் மாதா யார்?

பதில்: விஜயலட்சுமி பண்டித் முதல் மிருதுளா ஸாராபாய் வரை



யில் வெவ்வேறு வயசும் நிறமும் உள்ள முப்பது பேர்வரையில் இந்தக் குழந்தையை நாடிப் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறார்கள். ஆனால் கிலிபிடித்த குழந்தையோ எல்லோரையும்விட வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

* * *

கே: மகாத்மா காந்தி சொர்க்கத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார்? கடவுளோடு சந்தோஷமாக இருக்கிறாரா?

ப: கடவுள் காந்திஜியோடு சொர்க்கத்தில் சந்தோஷமாக இருக்கிறாரா என்பதுதான் பிரச்னை. அந்த மனுஷர் கடுமையான புரட்சிக்காரர். நன்றாக ஸ்தாபிதமான பழைய சொர்க்கத்தில்கூட அவர் அபூர்வமான கொள்கைகளைப் புகுத்தக்கூடியவர்.

கே: தாய்லாந்தில் ஜனங்கள் அடிக்கடி தூக்கத்திலே நடக்கிற மாதிரி மன நிலை யுடையவர்கள்; தூக்க மயக்கம் உடையவர்களாயிருக்கிறார்கள். இந்தியாவில் உள்ளவர்கள் எப்படி?

ப: இந்த அரை குறைச் சமாசாரமெல்லாம் இந்தியாவில் கிடையாது; எங்கள் ஜனங்கள் பரம யோக்கியர்கள். தூங்கினால் ஒரே தூக்கந்தான். நூற்றாண்டுக் கணக்காகத் தூங்குவார்கள். அவர்களுக்குமேலே யாராவது நடந்தால் கூட அவர்கள் எழமாட்டார்கள்; திரும்பிக்கூடப் படுக்கமாட்டார்கள்.

* * *

கே: இந்தச் சமயத்துக்கு மிகவும் அவசியமான தேவை எது?

ப: ஆயுதமும் இருதயமும்.

* * *

கே: உங்களுக்கு இறக்கை இருந்தால்...?

ப: பாகிஸ்தானுக்கு வரும் அமெரிக்கப் போர்க்கருவிகளைத் தணிக்கை செய்வேன்.



கே: தம் கவலைகளை மறக்க நேரு என்ன செய்கிறார்?

ப: புதிய கவலைகளை உண்டாக்கிக்கொள்கிறார். புதிய கவலை அவர் மனசிலிருந்து பழைய கவலையைத் துரத்திவிடுகிறது.

* * *

கே: தெருக்குழாயின் சோகம், ஹாஸ்யம் இரண்டையும் அறிவீர்களா?

ப: தெருக்குழாய் என்பது நகரசபை நடத்தும் டெலிவிஷன்



காட்சி. அங்கே நீர்க்குடத்தைச் சில சமயம் செந்நீரே நிரப்பிவிடுகிறது.

* * *

கே: அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசியலில் கலந்துகொள்ள வேண்டுமா?

ப: கூடாது. நம்முடைய அரசியல் சண்டைகளில் 'தாச்சி' ஸ்தானம் வகிக்கச் சில நடுநிலைமையாளர்கள் வேண்டும்.

* * *

கே: அசோகமகாராஜா காலத்தில் ஆண்களும் பெண்களும் முறையே பதினாறு வயசிலும் பன்னிரண்டு வயசிலும் 'மேஜர்' ஆனார்கள். ஏன் இப்போது இந்தக் கணக்கு உயர்ந்துவிட்டது?

ப: அரிசி, கோதுமை முதலிய உணவுப் பொருள் பஞ்சந்தான் காரணம். மனித உடம்பு அதற்குரிய உரம் இல்லாமல் வளருமா?



கே: ரேஷன் கடை அரிசியில் கிடக்கும் கற்களை என்ன செய்வது என்று என் அம்மாவுக்குத் தெரியவில்லை. அவளுக்கு நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?

ப: நகரத்து ரொட்டி சுடும் வியாபாரிகளிடம் அந்தக் கற்களைச் சமர்ப்பிக்கலாம். நேரு என்ற மதிப்பரிய ரத்தினத்தோடு சேர்ந்ததால், காங்கிரஸ்காரருக்கு மதிப்பு ஏற்பட்டிருக்கிறதில்லையா? அரிசியோடு சேர்ந்ததால் கற்களுக்கும் ஆகாரசத்து ஏறியிருக்கலாம். தவிர, ரொட்டி சுடுவோர், கல் முதல் வேர்வை வரைக்கும் எந்தப் பொருளையும் உபயோகித்துவிடுவார்கள்.

* * *

கே: நீங்கள் இந்தியாவின் முதல் மந்திரியாக இருந்தால்...?

ப: ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு துப்பாக்கிப் பயிற்சிக்கூடம் இருக்கும்; ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வீரன் இருப்பான். நடக்காத கனவெல்லாம் எதற்கு?

* * *

கே: நேர்மையான வறுமையைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: அதுதான் இல்லையே! நேர்மையாக உள்ள வறுமை இருந்தால் அதுவே உலகத்தின் செல்வம் ஆயிற்றே!

கே: குதுப் மினார் எவ்வளவு உயரம்?

ப: தற்கொலை பண்ணிக்கொள்வதாக இருந்தால் சொர்க்கத்தின் வாசலைத் திறக்கப் போதுமான உயரம் உடையது.

* * *

கே: சினிமா ராணி புகழேணியின் உச்சியில் இருக்கும்போது எதைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்? சௌக்கியத்தையா? செல்வத்தையா?

ப: தன் தலையை!

* * *

கே: ரேஸ் குதிரையை ஓடச் செய்வது எது?

ப: ஜாக்கியின் பந்தயப் பணம்! குதிரை விசுவாசமுள்ள பிராணி. தன்னை ஓட்டுகிறவனுக்காக அது ஓடுகிறது.

* * *

கே: கடவுள் எப்போது கொட்டாவி விடுகிறார்?

ப: அரசியல்காரர்கள் பிரார்த்தனைக் கூட்டம் போடும்போது.

* * *

கே: அரிசிச் சோறு சாப்பிடும் வங்காளிகள் வரவரக் கோதுமை உணவு சாப்பிடுகிறவர்கள் ஆகி வருகிறார்களே? இது நல்ல அறிகுறியா?

ப: இல்லை! அவர்கள் தங்கள் ஊரில் விளையாத தானியத்துக்கு ஆசைப்படுகிறார்கள். அதனால் மற்றவர்களுடைய தயவை எதிர்பார்க்கவேண்டி யிருக்கும். அது அடிமை வாழ்வு அல்லவா?

## சகுனம் - ஜப்பானிய மோஸ்தர்

டீ காம்பு டீ கோப்பையில் செங்குத்தாய் மிதப்பது நல்ல சகுனம்.

காலை நேரத்தில் வீட்டிலே சிலந்திப் பூச்சி தரிசனம் அளிப்பது நல்ல சகுனம்.

வெள்ளெலி குறுக்கே போவது நல்ல சகுனம்.

வீட்டுக்கு வெளியே நாய் ஊளையிடுவது கெட்ட சகுனம்.

ஒற்றைக் காக்கை கரைவது கெட்ட சகுனம்.

—'ஜப்பான் இன் எ நட்ஷெல்'

## மரியாதை!

டாலுல்லா என்ற பிரபல பாடகி, ஒரு நாள் நியூயார்க் ரெயில் வண்டியில் முதல் முதலாகப் பிரயாணம் செய்தபோது தாங்காத கூட்டம் நெருக்கியது. அப்போது தனக்கு முன் இருந்து தன்னை இடித்துக்கொண் டிருந்த மனிதனை அழைத்து, பாடகி மிக்க மரியாதையாக, "ஐயா, தங்கள் முழங்கையை என் கண் வந்து மோதுகிறதோ?" என்று கேட்டாள்!

— பால் டெனிஸ்




**'பொம்மலாட்டம்' என்பது ஒரு காலத்தில் பிரபலமாயிருந்தது. இங்கிருந்து இலங்கைக்குச் சென்ற அது அங்கே பெரிதும் வளர்ந்திருக்கிறது. இதை விவரிக்கும் இந்தக் கட்டுரை கலாநிதி ஜே. திலகிரி என்பவர் எழுதியதன் சுருக்கம்.**

வெகு காலமாகப் பாவைக் கூத்து இலங்கையில் பரவியிருந்திருக்கிறது. ஆங்கிலத்தில் பாவைக்கூத்தைப் 'பப்பெட்ரி' என்கிறார்கள். 'பூபா' என்ற இத்தாலியச் சொல்லிலிருந்துதான் 'பப்பெட்' என்ற சொல் ஆங்கிலத்தில் வந்திருக்கிறது. 'பூபா' என்பதற்குப் 'பாவை' என்று பொருள். சம்ஸ்கிருத இலக்கியங்களில் 'புத்ரகா', 'புத்திரிகா', 'புத்தலிகா' என்ற சொற்களால் பாவையைக் குறிப்பிடுகிறார்கள்.

மரம் அல்லது களிமண்ணால் அமைத்த பாவையைக் கொண்டு மனிதர்களின் செய்கைகளை நடித்துக் காட்டலாம் என்ற கருத்து, கீழ்நாடு, மேல்நாடு இரண்டிலும் பரவியிருந்திருக்கிறது. புராதன இந்தியாவில் பாவைக் கூத்து மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. இது சம்ஸ்கிருத இலக்கியங்களிலிருந்தும் பிற இலக்கியங்களிலிருந்தும் புலனாகிறது. நாடகத்துக்கும் பாவைக் கூத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. இதை இன்றும் நடைமுறையில் இருக்கும் நாடக சம்பிரதாயங்களும் பரம்பரை வழக்கங்களும் புலப்படுத்துகின்றன.

'கதா-சரித்-சாகரம்' என்ற சம்ஸ்கிருதக் கதைக்கடல், நடமாடும் பாவைகளைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறது. ஒரு தொழிலாளியின் மகள் ஒருத்தி, மிகவும் திறமையாகப் பாவைகளை அமைக்கிறாள். பிறகு அவைகளைச் சிரிக்கவும் குதிக்கவும் பேசவும் செய்து, தன் தோழனைச் சந்தோஷப்படுத்துகிறாள். இது அந்தப் புத்தகத்தில் வருகிறது. மனித உருவங்களைமாத்திரம் அல்ல; பறவைகள்,

மூலம்: ஸ்ரீலங்கா (தமிழ்: ஜனவரி '54), தபால் பெட்டி நெ. 500, கொழும்பு-1.

மிருகங்கள் ஆகியவற்றின் உருவங்களையும் மரம் அல்லது களிமண்ணால் அமைத்து, நூல்களில் இணைத்துப் புராதன இந்தியாவில் ஆட்டிவைத்து வேடிக்கை காட்டியிருக்கிறார்கள். மந்திர சக்தியாலேயே பாவைகள் இப்படி ஆடுகின்றன என்றுகூடச் சில சமயம் ஜனங்கள் நம்பிவிட்டார்கள். பாவைக் கூத்து இந்தியாவிலிருந்து இலங்கையை அடைந்து பரவி வேரூன்றியிருக்கிறது. நூல் கட்டி ஆட்டுவிக்கும் முறையே இலங்கையில் இருக்கிறது. இதனால் அது இந்தியாவிலிருந்துதான் இலங்கை சேர்ந்திருக்கிறது என்று புலனாகிறது.

மரத்திலிருந்தே பாவைகளை இலங்கையில் செதுக்குகிறார்கள். சின்னஞ் சிறு அளவு முதல் மனித உயரம் வரைக்கும் பல அளவுப் பொம்மை உண்டு. இந்தப் பொம்மைச் சிற்பிகளோ இவர்களின் தோழர்களோ, சிறு சிறு கூட்டமாக நகரம் அல்லது கிராமத்துத் தெரு மூலை, மர நிழல் இங்கெல்லாம் போய் நின்று பாவைக் கூத்து நடத்தி வேடிக்கை காட்டினார்கள். மேல்நாடுகளில் நாடோடிப் பிரெஞ்சு சங்கீதக்காரர்கள் இதேபோலப் பொம்மலாட்டம் ஆடுவதுண்டு.

இலங்கையில் பாவைக் கூத்து நாடகக் கலையாகப் பரிணமித்தது சமீப காலத்தில்தான். முன்காலத்தில் கிராமக் கூத்திலே உபயோகித்து வந்த ஹார்மோனியம், பறை முதலிய இசைக் கருவிகளையே இப்போது பாவைக் கூத்தில் உபயோகிக்கிறார்கள். பாத்திரங்களின் சம்பாஷணை, பாட்டு ஆகியவையும் பழைய தெருக்கூத்தில் வழங்கியவையே.

தென்னிலங்கை அம்பலாங்கொடை என்ற இடத்தின் பாவைக் கூத்துக்காரர்கள்தான் இந்தக் கலையில் விசேஷ அபிவிருத்தி அடைந்திருக்கிறார்கள். சமீபத்தில் இவர்களுடைய கூத்துக்கு நல்ல வெற்றி கிடைத்தது. அதனால் நாட்டின் பல பாகங்களில் பிரதான நகரங்களிலெல்லாம் கூத்து நடத்த இவர்கள் எண்ணியிருக்கிறார்கள்.

பாவைக் கூத்துக்காரர்கள் பரம்பரையாக இதை நடத்தி வருகிறார்கள். பல கூட்டத்தினர்களும் ஒருவருக்கொருவர் அநேகமாக உறவினர்கள். இவர்களில் பெரும்பாலோர் நூல் பிடிக்கும் வித்தையில் ஈடுபடுகிறார்கள். நாடக நடிகர்களைப் போல் பாவைகள் தத்ரூபமாய் நடிக்கவேண்டுமானால், நூல் பிடிப்பவர் மிகுந்த அநுபவம் பெற்றிருக்க வேண்டும். திரையிடும் பொறுப்பை மற்றொருவர் ஏற்பார். இரண்டு பேர் சங்கீத வாத்தியங்களை வாசிப்பதோடு பாட்டும் பாடு



பாவைகளை உருவாக்குகிறார்கள்

வார்கள். பாத்திரங்களின் பாட்டுக்களையும் சம்பாஷணைகளையும் சில பேர் மாறி மாறி நடத்துவார்கள். கிராமக் கூத்துக்களைத் தழுவியே நடப்பதால், பாட்டு, சம்பாஷணைகளில் சிறு சிறு மாறுதல் செய்கிறார்கள்.

புத்தரின் முற்பிறப்புத் திருவிளையாடல்கள், புராதன சமீப கால அரசர்களின் வீரச் செயல்கள் இவைகளையெல்லாம் சித்திரிக்கும் பாவைக் கூத்துக்களை நடத்துகிறார்கள். 'ஸ்ரீ விக்கிரம' என்ற பாவைக் கூத்துத்தான் மிகவும் பிரக்கியாதி பெற்றது. இலங்கையின் கடைசி அரசனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் துக்கமயமான வாழ்க்கையைச் சித்திரிப்பது அது.



ஏகேலபலே நாடகத்தில் கொலையாளி வாளைக் கையிலேந்தி நிற்கிறான்

கூத்தை மூன்று மணி நேரத்துக்கு மேல் நீட்டவும் நீட்டுவார்கள்; அதைவிடக் குறைக்கவும் குறைப்பார்கள். நீட்டும்போது மிகவும் ரசமான சில விகடக் காட்சிகள் இடம் பெறும்.

கூத்து நடக்கும் மேடையை மூன்று பிரிவாகப் பிரிப்பார்கள். திரைக்குப் பின்னுள்ள பிரிவை நாடகத்தின் பிரதானக் காட்சிகளுக்கும், மற்ற இரண்டு பிரிவுகளையும் சிறு சிறு காட்சிகளுக்கும் உபயோகிக்கிறார்கள். பாவைகளின் உயரம் சுமார் $3\frac{1}{2}$ அடி. பிரதானமான சில பாத்திரங்கள் மட்டும் மனித உயரம் இருக்கும். கூத்து நடத்துவோர், நூல்களை அங்கும் இங்கும் இயக்குவதற்கு வசதியாக, சற்று உயரமான இடத்தில் அமர்ந்திருப்பார்கள்.

உள்நாட்டு மரங்களில் பாவைகளைச் செதுக்குகிறார்கள். முதலில் செதுக்குவது முகத்தையே. எல்லாப் பாவைகளின் முகங்களும் இப்படித் தயாரான பின், பாத்திரத்தை உருவாக்குவார்கள். மரத்துண்டுக்கு அடிக்கடி சூடேற்றித் தெளிவான அம்சங்களைச் செதுக்குவார்கள். கை கால்களை வெவ்வேறாகச் செதுக்கி உடம்பில் பொருத்துவார்கள். அரசர், மந்திரி, விதூஷகன், வேளாளர், காவலர் இப்படிச் சுமார் இருநூறு விதப் பாவைகளைப் பாவைக்கூத்துச் சிற்பிகள் செதுக்கியிருக்கிறார்கள். பாவைகளுக்கு ஆடையாபரணங்களைச் சரியான முறையில் தயாரிக்கிறார்கள். விகடன், நாட்டியப் பெண் முதலியவர்களின் உடையலங்காரமே மக்களின் மனத்தில் ஆழ்ந்து பதிந்துவிடுகிறது.

உலகின் மற்ற நாடுகளில் பாவைக் கூத்துக்கள் பொழுது போக்கு ரீதியில் மட்டும் அல்ல; கல்வி, சமுதாயத் துறைகளிலும் வெகு தூரம் முன்னேறியிருக்கின்றன. செக்கோஸ்லாவாக்கியா, ருஷியா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் கல்வித் துறையிலும் பொழுது போக்கிலும் பாவைக் கூத்துக்கள் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கின்றன. மாஸ்கோ நகரில் உள்ள பாவைக் கூத்துக் கழகமே உலகத்திலே மிகப் பெரியது. இந்தக் கழகத்தினர் நடத்தும் பாவைக் கூத்துக்களை இளைஞர், முதியோர் எல்லாரும் கண்டு களிக்கிறார்கள். அவை கலை, தொழில் நுட்பங்களில் சிறந்து விளங்குகின்றன.

பாரிஸ் நகரில் லக்ஸம்பூர் நந்தவனத்தில் குழந்தைகளுக்கென்று பாவைக் கூத்துக் கூடம் ஒன்று திறந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் 'பஞ்ச் அண்ட் ஜூடி' என்ற பாவைக்கூத்து மிகவும் பிரசித்தம். 17-ஆம் நூற்றாண்டில் அதை ஆரம்பித்து வைத்தார்கள். அந்தக் கூத்து, மிக்க நகைச்சுவை ஊட்டுவது. இங்கிலாந்திலும் பிற ஐரோப்பிய நாடுகளைப் போலவே, மதபக்தியைப் பரப்புவதற்காகப் பைபிள் கதைகளையும் பாவைக் கூத்தாக நடித்துக் காண்பிப்பதுண்டு. கல்வி போதனைக்கும் பாவைக் கூத்தைப் பயன்படுத்தலாம் என்று சமீபத்தில் பிரிட்டிஷ் கல்வி அதிகாரிகள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். கல்விப் பாடமாகவே இதைச் சேர்த்துவிடலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். இங்கிலாந்தின் கல்விப் பாவைக் கூத்துக் கழகத்தினர், பல திறப்பட்ட குழந்தைகளுக்கு அவரவர் திறமைக்கேற்றபடி பாவைக்கூத்தைக் கல்வியாகப் போதிக்கிறார்கள். தவிர, வயது வந்தோருக்கும் பொழுது போக்குச் சாதனமாக இந்தக் கூத்தைப் பிரசாரம் செய்கிறார்கள். லண்டன் நகரில் கொஞ்ச நாளைக்கு ஒரு தடவை பாவைக் கூத்துக் கண்காட்சியை இந்தக் கழகத்தினர் நடத்துகிறார்கள். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வரும் மாணவர்களுக்குக் கூத்தின் பல அம்சங்களை விளக்கிப் பிரசங்கங்கள் புரிகிறார்கள். சிறுவர்களே நடத்தும் பாவைக் கூத்துக் காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்கிறார்கள். 'குலோவ் பப்பட்ரி' என்ற பாவைக் கூத்து மிகவும் லகுவாகச் சிறுவர் கற்றுக்கொள்ளக் கூடியது. 'குலோவ் பப்பெட்' என்ற வகைப் பாவைகளைச் சிறுவர்களே செய்து நிறம் பூசி அலங்கரிக்கும்போது, சிறுவர்களின் ஆக்கத்திறனும் கலைச்சுவையும் வளர்கின்றன. கண்காட்சியின்போது பாவைக்கூத்துக் கலை சம்பந்தமான ஸினிமா படங்களையும் திரையிட்டுக் காட்டுகிறார்கள்.

கூத்துப் பதினொன்றில், அவுணர் மோகித்து விழும்படி கொல்லிப் பாவை வடிவுகொண்டு திருமகள் ஆடிய ஆடல் பாவைக் கூத்தாகும் என்று சிலப்பதிகார உரை விளக்குகிறது. பிற்காலத்தில் பொம்மலாட்டத்தையும் பாவைக் கூத்தென்றே வழங்கத் தொடங்கி விட்டார்கள்.

யாழ்ப்பாணப் பகுதிகளில் வழங்கும் பாவைக்கூத்தைப் பற்றி 'இந்து சாதனம்' பத்திரிகையின் ஆசிரியரான பண்டிதர் ம. வே.



பாவைப் போர்வீரர்கள்

திருஞானசம்பந்தர் எழுதியிருப்பதன் சாரம் இது:

“வட இந்தியப் பாவைக் கூத்துக்கும் தென்னிந்தியப் பாவைக் கூத்துக்கும் பேதம் உண்டு. வட இந்தியாவில் வீதிக்கு வீதி வீட்டுக்கு வீடு சென்று பாவைக்கூத்து நடத்திக் காட்டிச் சொற்பப் பணம் வாங்கிக்கொண்டு செல்வார்கள். தென்னிந்தியாவில் அப்படி அல்ல. இரவுக் காலத்தில் சிறந்த நாடகங்களைப் பாவைக் கூத்தாகத் தென்னிந்தியாவில் நடத்திக் காட்டுவார்கள். பாவைக் கூத்தைச் சிறப்பாய் நடத்த மூன்று பேர் ஒத்துழைக்கவேண்டும்: (1) தலை முதலிய அங்கங்களைச் செய்து இணைத்து அமைக்கும் சிற்பி; (2) பாவைகளுக்கு ஏற்ற உடை அமைத்துக் கொடுக்கும் அலங்காரக் கலைஞன்; (3) பாவையை ஆட்டி வைக்கும் நட்டுவன். சில சமயம் பாவையின் ஆட்டத்துக்கு இசையப் பாடும் ‘அண்ணாவி’ என்ற நான்காவது ஆளும் இருப்பதுண்டு. பாவைகளின் அங்கங்களை நீண்ட கம்பிகளின் ஒரு நுனியில் கோத்து வைக்கிறார்கள். இந்தக் கம்பிகளின் மறு நுனியை ஏற்றபடி நட்டுவன் தன் கை முதலிய அங்கங்களில் மாட்டிக்கொண்டு பாதையை ஆட்டி வைக்கிறான். நட்டுவனின் அங்க அசைவே பாவையின் நாட்டியமாகிறது. நாம் பாவைகள் ஆடுவதைப் பார்க்கலாம்; பாட்டையும் பக்க வாத்திய ஒலியையும் கேட்கலாம். ஆட்டிவைக்கிறவனையோ, பாடுகிறவனையோ, பக்க வாத்தியக்காரரையோ காண முடியாது. பாவைகளே ஆடிப் பாடிப் பேசுவது போல்தான் நமக்குத் தோன்றும்.

“பாவைக் கூத்திலே, மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைப் பூசித்துக்கொண் டிருக்கும்போது எருமைக்கடாமீது எமன் வந்து அவரை அதட்டி அழைப்பதும், அவர் மறுத்துச் சிவலிங்கத்தை அணைவதும், எமன் கோபமுற்றுச் சிவலிங்கத்தையும் சேர்த்துக் கட்டியிழுக்கப் பாசக்கயிற்றை வீசு

வதும், உடனே சிவலிங்கம் இரு பிளவாக, அதனிடையே விசுவ நாதப் பெருமான் தோன்றிக் காலனை வாமத் திருவடியால் உதைக்க அவன் எருமைக்கடா வோடு புரண்டு ஓலமிட்டு வீழ்ந்து மடிவதும், மார்க்கண்டேயருக்கு எம்பெருமான் அபயமளிப்பதும் பார்ப்பவர் உள்ளத்தை உருக்கிப் பரவசப்படுத்தும்.

"உலகில் உள்ள ஆன்மகோடி களை ஆட்டி வைக்கும் நட்டுவன் நடராசப் பெருமான் என்பதைக் குறித்துப் பட்டினத்தடிகள் பாடி யுள்ள இந்தப் பாட்டே, பாவைக் கூத்துத் தொன்மையான கலை என்பதை நமக்கு உணர்த்தும்:

"நன்னூரில் பூட்டிய
சூத்திரப்பாவை
நன்னூர் தப்பினல்
தன்னாலும் ஆடிச்
சலித்திடுமோ அந்தத்
தன்மையைப் போல்
உன்னுல் யானும்
திரிவதல்லால் மற்
றுனைப் பிரிந்தால்
என்னுலிங் காவ
துண்டோ இறைவா
கச்சியேகம்பனே."

## இல்லை, இல்லை!

ஜப்பானியச் சரித்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ராணுவத் தளபதி ஹிடெயோஷி என்பவர், தம் பக்கத்தில் இருந்த ஒரு துணைவரைப் பார்த்து, "இதோ இந்தப் பயல் சொல்லுகிருனே, நான் குரங்கு மாதிரி இருக்கிறேன் என்று; அப்படியா இருக்கிறேன்?" என்று கேட்டார்.

"இல்லவேயில்லை. நீங்கள் குரங்கு மாதிரி இருப்பதாகச் சொல்வது உண்மையே இல்லை. குரங்குதான் உங்கள் மாதிரி இருக்கிறது" என்ருர் துணைவர்.

—'ஜப்பான் இன் எ நட்ஷெல்'

## புரியாத இடம்

ஸச்சா கைட்ரி என்ற பிரபல நடிகரை, ஆங்கில வாலிப நாடகாசிரியர் ஒருவர் வந்து பார்த்தார்.

ஆசிரியர் முன்னதாகவே தாம் எழுதிய நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை நடிகருக்கு அனுப்பியிருந்தார். அது அப்படியொன்றும் சுவாரஸ்யப்படவில்லை.

"உங்கள் நடை சற்றுச் செயற்கையாயிருக்கிறது. புரிவது கடினம். ஒரு விஷயம் நீங்கள் மனத்தில் இருத்த வேண்டும். நாடக சம்பாஷணை ஒரு மூடனுக்கும் புரியும்படி சுலபமாயிருக்க வேண்டும்" என்ருர் நடிகர்.

வாலிப ஆசிரியர் வாய் குழறியபடி. "வந்தனம், கைட்ரி. உங்களுக்குச் சிறிது சிரமம் கொடுக்கலாமா? எந்த இடம் உங்களுக்குப் புரியவில்லை, சொல்லுங்கள். திருத்தி விடு கிறேன்" என்ருர்.

—'ஸண்டே க்ராஃபிக்'

# ஆயுர்வேதமும் புது மருந்தும்

**த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி**

**நவீன வைத்திய மருந்தை ஆயுர்வேத வைத்தியர்கள் அடியோடு நிராகரிக்கலாமா, கூடாதா? இந்தக் கேள்விக்குப் பதில் அடங்கிய இது, சாஸ்திரியாரின் பிரசங்கத்திலிருந்து எடுத்த ஒரு பகுதி. மார்ச்சு இரண்டாவது வாரத்தில் திருச்சியில் நடந்த 19-ஆவது தமிழ் நாடு ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தில் தலைமை வகித்துச் செய்தது இந்தப் பிரசங்கம்.**

ஆயுர்வேதம் ஜனங்களுக்குத் தர்மம், அர்த்தம், சுகம் முதலியவைகளை அடைய வழி காட்டவே அமைந்தது. அதர்வ வேதம் இதை மிகவும் புகழ்கிறது. நம் தர்சனங்களின் மூலம் அறியத்தக்க ஆயுர்வேதம், வேதத்தைப் போல் அநாதி. பரம்பரையாக அந்தரங்க உபதேசத்தால் அக்கினிவேசர் முதலியவர்கள் வரையில் வந்து, நமக்குத் தற்காலம் புஸ்தகங்கள் மூலமும் அநுபவம் வாய்ந்த பெரியோர் மூலமும் அது கிடைத்திருக்கிறது.

நம் நாடு செழிப்புற்றிருந்த பழைய நாட்களில் ஆயுர்வேதம் ஜனங்களுடைய நன்மையைப் பெருக்குவதில் மிகவும் உபயோகப்பட்டது. ஆயுர்வேதம் இல்லை என்றால் ராஜ்ய நிர்வாகமே இல்லை என்றுகூடச் சொல்லலாம். பிரஜைகள் ஆரோக்கியத்தை இழக்கக்கூடாது என்பதே முக்கியமாக நம் ரிஷிகள் கருத்து. அதனால் அவர்கள் தினசர்யை, ருதுசர்யை, உணவு இருப்பிட நியமங்கள், நித்திரை, பிரம்மசரிய விதிகள் இவைகளை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரப் போதித்தார்கள். அதோடு நிற்கவில்லை. வியாதி வராமலே தடுப்பதற்கு இயற்கையுடன் எந்த அளவுக்கு நாம் ஒத்துப் போகவேண்டும் என்பதை அறிவுறுத்தினர்கள். சாகச கர்மங்களைச் செய்யக்கூடாது என்று கூறினர்கள். சரீர வேகங்களை அடக்கக்கூடாது என்று கூறி, அப்படி மீறினல் எந்த விதத்தில் வியாதி பீடிக்கும் என்று எச்சரித்தார்கள்.

சரீரத்தைக் காப்பாற்றச் சரீர தர்மங்களை மட்டும் அநுஷ்டித்தால் போதாது; மனநிலையையும் சரிவர வைத்துக்கொள்ளுவது அவசியம். இதற்காகவே பத்து விதப் பாவங்களையும் விடவேண்டும் என்றும், மனோவேகங்களாகிய காமக்குரோதாதிகளை அடக்கவேண்டும் என்றும் உபதேசித்தார்கள். மேலும், மனிதன் கிராமங்களிலும் நகரங்களிலும் கூட்டமாக வசித்து விவகாரங்கள் புரிவதால், பலவித இடையூறுகளைப் பெற்று ஆரோக்கி

மூலம்: வைத்திய சந்திரிகை (தமிழ்: மார்ச்'54), கரூர்.

யத்தையும் இழந்துவிடக்கூடும். அப்படி நேராமல் இருப்பதற்காகப் பலவித நீதிகளேயும் விவகார விதிகளேயும் தர்ம சாஸ்திரங்களில் நன்ருக விவரித்திருக்கிருர்கள். அவை சுகாதாரம் பற்றியவை. ஏககாலத்தில் தண்ணீர், காற்று, பூமி முதலியவைகளினுல் தீங்கு ஏற்படலாம் என்பதை விவரித்து, அதற்குப் பாதுகாப்பான பல விதிகளேப் போதித்தார்கள். தொத்து வியாதிகள் பரவக்கூடும் என்பதை எச்சரித்து, அவைகளினின்றும் தங்களேத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள ஆசாரங்களேயும், தீட்டு முதலியவைகளேயும், ஜப ஹோமாதிகளேயும் கூறிஞர்கள். கூர்ந்து நோக்கிஞல் பல உண்மைகள் நம் முன்னேரின் பாகுபாடுகளில் எளிதில் புலனுகும். 'சாஸ்த்ராய ச ஸுகாய ச' என்று நம் பெரியவர்கள் அடிக்கடி இந்த ஆசாரங்களேப் புகழ்ந்ததன் கருத்து, சுகாதாரம் பெருக வகுத்த தருமங்கள் இவை என்பதைக் காட்டுகிறது.

தர்மம் குறைந்து, வியாதி ஜனங்களேப் பீடித்தால், அதற்கும் பரிகாரம் அவசியம். இதற்காகச் சிகிச்சை முறைகளே விளக்கிஞர்கள். சிகிச்சை பூர்ணமாகச் சோபிக்க வைத்தியன் மட்டும் போதாது. வைத்தியன், பரிசரர்கள், ரோகி மூவரும் ஒத்துழைக்க வேண்டும். திரவியங்களும் வேண்டும். இதனுல்தான் நான்கு பாதங்கள் கொண்டது சிகிச்சை என்ருர்கள். ரோகியின் குணத்தை விவரிக்கையில் 'பிஷக் வச்யன்' என்று கூறியிருக்கிருர்கள். பெரிய பொறுப்பை ஏற்கத் தகுதி வாய்ந்தவன் என்று மதித்தே, ரோகியை வைத்தியனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று அது குறிக்கிறது. வைத்தியனே தனக்கு மாதா, பிதா, பந்து, தெய்வம் என்ற நிலேக்கு ரோகி வந்துவிடுகிருன். வைத்தியர்களும் ஆயுர்வேத தர்மத்தைக் கடைப்பிடித்தார்கள்.

மனிதர்களுக்கு மட்டுமா வைத்தியம்? ஞானிகள் வகுத்த ஆயுர்வேதம் உயிருள்ள எல்லாவற்றுக்குந்தான் பயன்படும். செடிகொடிகளே நன்கு போஷித்து வருவதற்கு விருட்சாயுர்வேதமும் மிருக வைத்தியத்துக்கு ஹஸ்தி ஆயுர்வேதமும் வகுத்திருக்கிருர்கள். எவ்வளவு விஸ்தாரமாக நம் சாஸ்திரம் லோகத்தை ரட்சிக்கச் சிரத்தையுடன் போதனைகள் செய்கிறது!

யுத்தம் முதலியவை பெருத்தால் வியாதியும் சங்கடங்களும் பெருகும். அந்தச் சங்கடங்களில் நிவாரணம் அளிக்க, சல்யம், சாலாக்யம் என்ற சஸ்திர சிகிச்சை மிகவும் அவசியம் என்றே 'சுச்ருதம்' முதலிய கிரந்தங்கள் ஏற்பட்டன. பலவித அங்கச் சேதங்களேச் சரிப்படுத்த அவைகளில் வழிகள் கூறியிருக்கிருர்கள். க்ஷத்திரியர்கள் தங்களுக்கு ஊழியம் செய்யும் சேனேக்கு உதவியளிக்க இந்த மாதிரி ஆயுர்வேதக் கிரந்தங்களேப் படிக்கவேண்டும் என்று விதித்தார்கள்.

பழைய பெருமை இப்படி இருக்க, நம் சாஸ்திரமும் சாஸ்திராப்யாசமும் இன்று துர்த்தசையை அடைந்துவிட்டன. ஆரியாவர்த்தத்தைப் பல அந்நியர் படை எடுத்தார்கள். அப்போது நூல்களும் அறிஞர்களும் கஷ்டங்களுக்குள்ளாக வேண்டி வந்தது. அழிவு மேலும்மேலும் பெருத்த அள

வில் விளைந்தது என்கிறது சரித்திரம். லோகத்தின் நன்மையிலேயே கருத்துக்கொண்ட நம் முன்னோர்கள், நூல்களைக் கூடுமானவரையில் காப்பாற்றினார்கள். பலருக்கு நம் கலைகள் மனப்பாடமாக இருந்தன. பிறகு அமைதி நிலவியபோது இந்த நூல்களைத் தேடிப் பிடித்து ஞாபகத்திலிருந்தவைகளையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தொகுத்த சாஸ்திரங்களே நமக்குப் புஸ்தகரூபத்தில் கிடைத்திருக்கின்றன. பல பாகங்கள் இதற்குள் அழிந்துவிட்டபடியால், நம் கலைகள் பூர்ணமாகக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் நம் நாடு ஆங்கிலேயருக்கு அடிமையாயிற்று. அடிமைகொண்டவர்களின் சுயநலமும் அறியாமையும் சேர்ந்து கலைகளை மீண்டும் நசுக்கிவிட்டன. நேரடியாகக் கொல்லாமல் கவனிப்பையும் போஷாக்கையும் நிறுத்தினார்கள். கலை வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி விழுந்தது.

ஞானதிருஷ்டியும் தர்சன ஞானமும் நம்முள் ஊறி ஊறி மலர வேண்டியிருக்கிறது. காலத்தின் கோலத்திலே இந்த ஞானக்கினி நம்மிடம் மங்கி இருக்கிறது. நவ நாகரிகம் சாம்பல் போல் நம் அறிவை மூடி மறைக்கிறது. இந்த நிலையில் திடீர் திடீர் என்று ரோகிகளுக்கு ஏற்படும் உபத்திரவ உற்பாதங்களைச் சமாளித்து நிற்க, நம் ஜனங்களுக்கும் பண்டிதர்களுக்கும் பலம் குறைந்துவிடுகிறது. ''நோய்க் கிருமியால் ஏற்பட்டிருக்கும் இந்த உபத்திரவத்தைத் தடுக்க நவீன மருந்து அவசியம்'' என்று நவீன வைத்தியர் கூறிவிட்டால், ''அது தேவை இல்லை; இந்த உபத்திரவத்தைத் தணிக்க அநுபவம் காட்டிய இன்ன சிகிச்சை எங்களிடம் இருக்கிறது'' என்று சொல்ல நாம் இன்று சக்தி பெற்றிருக்கவில்லை. இது ஆயுர்வேதத்தின் குறைவு இல்லை. கர்மாப்பியாசத்தைக் குருமுகமாகச் சரிவரப் பயில, சிரத்தையுடன் நாம் முயற்சி எடுத்துக்கொள்ளாததே காரணம்.

ஆகவே, அநுபவம் இல்லாமல் இப்படிப்பட்ட சங்கடத்தில் சிக்கிக் கொள்ளும்போது என்ன செய்வது? தற்காலச் சமனியாக நவீன மருந்தை நாமே உபயோகிக்கலாம்; அல்லது நவீன வைத்தியம் பயிலுகிறவரை உபயோகிக்கும்படி சொல்லிப் பலன் பெறலாம். கூடவே, பிரதான வியாதியை நம் சித்தாந்தப்படியே தொடர்ந்து சிகிச்சையினால் குணப்படுத்த முயல வேண்டும். இதை விட்டு 'நவீன மருந்தா?' என்று நாம் தயங்கக் கூடாது. தயங்குவது அறிவுடைமையும் ஆகாது; பூத தயையும் ஆகாது. நிச்சயமாகக் குருமுகமாகப் பெற்றுள்ள முறைகள் உடனுக்குடனே உபயோகிக்கக் கூடியவையாக இருந்தாலொழிய, நவீன மருந்துப் பிரயோகங்களை ஆபத்-தர்மமாக ஏற்க வேண்டியது நம் கடமை.

ஆயன் தன் கழியால் பசுக்களைப் புல்வெளிக்கு ஓட்டிச் செல்வதுபோல் மூப்பும் சாக்காடும் மக்களின் ஆயுளை ஓட்டுகின்றன.

—புத்தர்



# பிரகலாத சரிதம்

ஒரு சமயம் பரீட்சித்து மன்னன் சுக முனிவரைப் பார்த்து, "முனிவரே, பகவானுக்கு யாராலும் ஒன்றும் ஆகவேண்டியதில்லையே! அவர் ஏன் அசுரர்களை எப்போதும் கொல்ல வேண்டும்? தேவர்களை மட்டும் ஏன் எப்போதும் காக்கவேண்டும்?" என்று கேட்டான்.

சுக முனிவர், "அரசே, பகவானுக்கு விருப்பும் வெறுப்பும் இருப்பதாகக் கருத வேண்டாம். அவரவர் செயலுக்குத் தக்கபடி அவரவர் நன்மையும் தீமையும் அடைகிறார்கள். அசுரர்கள் பகவானுக்கும், முக்கியமாகப் பக்தர்களுக்கும் செய்யும் அபசாரத்தால் தமக்கு அழிவு தேடிக்கொள்கிறார்கள். ஆகவே, விருப்பு வெறுப்புக்கள் பகவானிடம் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்வது சரியல்ல. இது சம்பந்தமாக நாரத முனிவர் யுதிஷ்டிரருக்குச் சொன்ன ஒரு கதையைக் கேளுங்கள்" என்று சொல்லலானார்:

"ஒரு சமயம் சனகாதி முனிவர்கள் குழந்தை வடிவத்தோடு வைகுண்டம் சென்றார்கள். துவாரபாலகர் அவர்களை உள்ளே விட அனுமதிக்கவில்லை. அதனால் அந்த முனிவர்கள் கோபமுற்றுச் சாபமிடவே துவாரபாலகர்கள் இரணிய கசிபு, இரணியாட்சன் என்ற அசுரர்களாகப் பிறந்தார்கள். இரணியாட்சன் பூமியைக் கடலில் ஒளித்தபோது, பகவான் வராக அவதாரம் எடுத்து அவனைக் கொன்றார்.

"இப்படித் தம்பி கொலையுண்டதைக் கேட்டதும் இரணியகசிபு உதட்டைக் கடித்துக்கொண்டான். அவன் கண்களிலிருந்து கனல் எழுந்தது. அதனால் திசைகள் எங்கும் புகை கிளம்பியது. சூலத்தை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, 'அசுர வீரர்களே, என் அன்புக்குரிய தம்பியை அந்த விஷ்ணு, அவனுக்குத் தெரியாதபடி பின்புறமாக வந்து கொன்றான். மாயையினால் பன்றி வடிவம் எடுத்த அந்த விஷ்ணுவை



**கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.**

என் சூலத்தால் குத்திக் கொல்வேன். அப்போதுதான் தேவர்கள் வேரற்ற மரம்போல் வாடி மடிவார்கள். நீங்கள் உடனே பூமிக்குப் போய் யாகம், விரதம், தவம் இவைகளையெல்லாம் அழித்து வாருங்கள்' என்றான்.

"பிறகு அசுரர்கள் தேவலோகம் சென்று தேவர்களைத் துன்புறுத்தினார்கள். அவர்கள் பயந்து ஒளிந்து வாழலானார்கள். இரணியகசிபு தன் தம்பியின் மனைவி மக்கள், தாய் முதலியவர்களைத் தேற்றிவிட்டு, கிழத்தன்மையும் சாவும் தனக்கு வராதபடி பார்த்துக்கொள்ளவும் பகைவர்கள் எல்லோரையும் வெல்லவும் வேண்டி மந்தர மலைக்குப் போய்க் கடுந் தவம் செய்தான். அதனால் பல உற்பாதங்கள் நேர்ந்தன. கடல் கொதித்தது. மலைகள் ஆடின. நட்சத்திரங்கள் கீழே விழுந்தன. திசைகள் எரிந்தன.

"ஒளிந்து வாழ்ந்துவந்த தேவர்கள் இதற்குள் இரணியகசிபு தவம் செய்யப் போயிருப்பதைக் கேட்டுத் தைரியமாக வெளியே வந்து தம் தம் இடங்களைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவனுடைய தவத்தின் ஜ்வாலை உலகையே எரிப்பதைக் கண்டதும் அவர்கள் பிரம்மாவிடம் முறையிட்டார்கள். 'அவனுடைய தவத்தை எப்படியாவது கலைத்துவிடுங்கள்' என்று வேண்டினார்கள்.

"பிரம்மா அவன் தவம் செய்யும் இடத்துக்குச் சென்றார். புல், மூங்கில் இப்படி ஏதேதோ மூடிக் கிடக்கவே, அவரால் முதலில் அவனை அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. பிறகுதான் தெரிந்துகொண்டார். 'கசியபரின் மகனே, எழுந்திரு; எழுந்திரு. உனக்கு மங்களம் உண்டாகட்டும். உனக்கு வேண்டிய வரம் தருகிறேன். உன் நெஞ்சுறுதியை உணர்ந்துகொண்டேன். உன் உடல் முழுவதையும் புழுக்கள் அரித்தும் எலும்பில் எப்படியோ உயிரை வைத்துக்கொண்டிருக்கிறாய். இத்தனை ஆயிரம் ஆண்டுகள், தீர்த்தங்கூட உட்கொள்ளா

மல் யாராலே இருக்க முடியும்? தவத்தால் நீ என்னை வென்று விட்டாய்!' என்று சொல்லி அவன்மேல் ஜலம் தெளித்தார். உடனே அவன் வஜ்ரம்போல் திடமான மேனியுடன் விளங்கினுன். எதிரே பிரம்மாவைக் கண்டதும் மகிழ்ச்சி பொங்கச் சொன்னுன்: 'தாங்கள் எனக்கு விருப்பமான வரம் ஒன்றைத் தர வேண்டும். தாங்கள் படைத்த சிருஷ்டி எதனுலும் எனக்குச் சாவு நேரக்கூடாது. உள்ளும் வெளியும், பகலிலோ இரவிலோ, ஆயுதங்களாலோ, பூமியிலோ, ஆகாயத்திலோ, மனிதர்களாலோ, மிருகங்களாலோ எனக்குச் சாவு நேரக் கூடாது. போரில் எனக்கு நிகராக எவரும் இருக்கக்கூடாது. நானே மூன்று உலகத்துக்கும் அரசன் ஆகவேண்டும்'' என்று வேண்டினுன்.

''அதற்குப் பிரம்மா, 'அப்பா, நீ கேட்கும் வரம் யாராலும் பெற முடியாதது. இருந்தாலும் நான் உனக்குத் தருகிறேன்' என்று சொல்லி அப்படியே கொடுத்தருளி மறைந்தார்.

''பிறகு இரணியகசிபு பகவான் நாராயணரிடம் பகை கொண்டு மூன்று உலகங்களையும் வென்று அடக்கினுன். தேவலோகத்தில் இந்திரனின் அரண்மனையில் வசிக்கலானுன். முனிவர்கள் அவனுக்குக் காணிக்கை செலுத்தினுர்கள். யாகத்திலும் ஒரு பாகத்தை அவன் பெற்று வந்தான். உலகமே அவனைக் கண்டு நடுங்கியது. வேறு வழியின்றி லோக பாலகர்கள் பகவான் நாராயணரைத் தியானிக்கலானுர்கள். அப்போது அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் அசரீரி ஒன்று கேட்டது: 'பயப்படாதீர்கள். அவன் தன் மகனும் மகாத்மாவுமான பிரகலாதனிடம் பகைமை கொள்வான். அப்போது அவனை நிச்சயமாக அழிப்பேன்' என்பதே அந்த வாக்கு.

''இரணியகசிபுவுக்கு நாலு புதல்வர்கள் உண்டு. அவர்களில் இயல்பாகவே பகவானிடத்தில் பக்திகொண்டு சிறந்து விளங்கினுன் பிரகலாதன். குழந்தைப் பருவத்தில் விளையாடிக்கொண்டிருப்பான். திடீரென்று விளையாட்டுச் சாமான்களைத் தூர எறிந்துவிட்டு உலகையே மறந்து தியானத்தில் ஆழ்ந்துவிடுவான். எப்போதும் கடவுள் நினைவாகவே இருந்து வந்தான். சில சமயம் சிரிப்பான்; சில சமயம் பாடுவான்.

''சுக்கிராசாரியருடைய புதல்வர்கள் அசுரச் சிறுவர்களுக்குப் பாடம் சொல்லி வந்தார்கள். அவர்கள் இரணியகசிபுவைப் புகழ்ந்து, பகவானைத் தாழ்த்திப் பாடம் கற்பித்தார்கள். பிரகலாதனுக்கு 'இது சரி' என்று படவில்லை.

''ஒரு நாள் இரணியகசிபு பிரகலாதனைத் தன் மடியில் எடுத்து வைத்துக்கொண்டு, 'கண்ணே, உலகத்தில் எது மிகவும் நன்மையானது?' என்று கேட்டான். பிரகலாதன், 'காட்டுக்குப் போய்ப் பகவான் நாராயணனைத் தியானிப்பதுதான்' என்ருன்.

''இதைக் கேட்டதும் இரணியகசிபு தன் மகனுக்குச் சுக்கிராசாரியர் வீட்டில் யாரோ ரகசியமாக விஷ்ணுபக்தியைப் போதிப்பதாக எண்ணினுன். குருமார் பயந்து போய்ப் பிரகலாதனை, 'இப்படி யார் உபதேசித்தார்கள்?' என்று கேட்டார்கள். அதற்குப் பிரகலாதன், 'என் மனம்

தானாகவே காந்தத்தைக் கண்ட இரும்புபோல் விஷ்ணுவிடம் ஈடு பட்டுவிட்டது' என்றான். குருமார் அவனைப் பலவாறு பயமுறுத்திப் பார்த்தார்கள். அப்படியும் அவன் கொள்கை மாறவேயில்லை.

''மறுபடியும் ஒரு நாள் பிரக லாதனை மடியில் வைத்துக் கொண்டு இரணியகசிபு, 'இது வரை உன் ஆசிரியர்கள் என்ன கற்றுக்கொடுத்தார்கள், சொல் பார்க்கலாம்' என்று கேட்டான். அதற்குப் பிரகலாதன், 'விஷ்ணு வின் திருவடிகளைத் தியா னிப்பதே ஜீவனுடைய கடமை என்பதைத் தெரிந்து கொண்டேன்' என்றான்.

''இரணியகசிபுவுக்கு ஆசிரிய ரின்மேல் கோபம் மூண்டது. அவரைக் கண்டபடி இகழ்ந்தான். ஆனால் அவர் நடுங்கியபடி, 'இது இயல்பாகவே வந்தது' என்றார். பிரகலாதனும், 'ஏன் அப்பா, கோபப்படுகிறீர்கள்? பகவா னுடைய பாததூளி பட்டால் தானே சம்சார பந்தம் நீங்கும்?' என்றான்.

''உடனே இரணியகசிபு தன் மகனைக் கீழே தள்ளினான். கண்கள் சிவக்க மற்ற அசுரர்களை நோக்கி, 'இப்போதே இந்தப் பயலைக் கொன்று விடுங்கள். இவன் என் பிள்ளையானாலும் எனக்குப் பகைவனே' என்று கூவினான்.

''அசுரர்கள் கொடிய வடிவம் தாங்கிப் பிரகலாதனை இம்சிக்கத் தொடங்கினார்கள். அப்படியும் பகவத் தியானத்தில் ஈடுபட் டிருந்தான் அவன். ஆகவே, அவனிடம் எதுவும் பயன் அளிக்க வில்லை. இதைக் கண்ட இரணிய கசிபு திக்கு யானைகளை விட்டு மகனை முட்டச் செய்தான்; பாம்பை விட்டுக் கடிக்க வைத் தான். என்ன செய்தும் பிரக லாதனைக் கொல்ல முடியவில்லை.

''இதைக் கண்டு இரணியகசிபு தான் செய்த தீங்குகளுக்காக மகன் பழி தீர்த்துக்கொள்வானோ என்று உள்ளுக்குள் நடுங்கினான்.

''அப்போது பிரகலாதனின் ஆசிரியர்கள், 'இவன் பாவம், ஒன்றும் தெரியாத குழந்தை; வயது வந்தால் மனம் மாறும். சுக்கிராசாரியர் வரும்வரையில் இவனைக் கட்டிவைத்தால் அவருடைய உபதேசத்தால் திருந்துவான்' என்றார்கள். இரணியகசிபுவும் அதற்கு இணங் கினான்.

''ஒரு நாள் பாடம் முடிந்த பிறகு பிரகலாதன் மற்ற மாணவர் களிடம் விஷ்ணுவின் மகிமையைப் பற்றி வர்ணிக்கலானான். அவர் கள், 'அது சரி; நாம் எல்லாரும் ஒரே ஆசிரியரிடம் படிக் கிறோம். உனக்கு மட்டும் இது எப்படித் தெரிந்தது? அவர் இதைக் கற்றுக் கொடுக்க வில்லையே!' என்றார்கள்.

''பிரகலாதன், 'என் தந்தை தவம் செய்யப் போயிருந்தாரே, அப்போது இந்திரன் என் தாயைப் பலாத்காரமாக இழுத்துச் சென்று கொல்லப் பார்த்தான். கேட்போர் இரங்கும்படி அவள் கதறினாள்; அப்போது நாரதர், இவளைக் கொல்ல முயலாதே; இவள் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை பெரிய விஷ்ணுபக்தனாக விளங்கு வான்; ஆகவேதான் இவளைப் பகவான் காத்துவருகிறார். இவளை நீ ஒன்றும் செய்ய முடியாது என்றார். பிறகு என்

தந்தை திரும்பும் வரையில் அவர் என் தாயைத் தம் ஆசிரமத்தில் இருக்கச் செய்து பகவானைப் பற்றிப் போதித்து வந்தார். அதனால்தான் எனக்கு இது தெரிந்தது’ என்றான்.

“மற்ற அசுரச் சிறுவர்களும் அவன் சொன்னதை அப்படியே கற்றுக்கொண்டார்கள். ஆசிரியர் உபதேசித்தது அவர்கள் மனத்தில் பதியவில்லை. இதைக் கண்டு ஆசிரியர் பயந்து போய் இரணிய கசிபுவிடம் முறையிட்டுக் கொண்டார். இரணியகசிபு பிரக லாதனை அழைத்து, ‘அடே குலத்தை அழிக்கவந்த பயலே! இதோ உன்னை யமனிடம் அனுப்பி விடுகிறேன் பார். எந்தப் பலத் தைக் கொண்டடா என் கட்டளையை அவமதிக்கிறாய்?’ என்று சீறினான்.

“அதற்குப் பிரகலாதன், ‘உமக் கும் எனக்கும் எல்லாருக்குமே எவ்வளவோ மேலானவர் பகவான் நாராயணர். அவர் எங்கும் இருப்பார். அவர்தான் அனைவருக்கும் பலம். அவரைத் தான் நாம் வழிபடவேண்டும்’ என்று பதில் அளித்தான்.

இரணியகசிபு, ‘சரி; உனக்குச் சாவு நெருங்கிவிட்டது. அதனால் தான் இப்படிப் பேசுகிறாய்! எங்கும் உன் பகவான் இருப்பா ரானால் இந்தத் தூணில் ஏன் அவர் இல்லை? இதோ உன் தலையை வெட்டுகிறேன். உன் பகவான் உன்னைக் காக்கட்டுமே, பார்க்க லாம்’ என்றான். பிறகு தன் ஆசனத்திலிருந்து எழுந்து கத்தியை ஓங்கித் தூணில் அடித்தான்.

“உடனே தூணிலிருந்து ஒரு பயங்கரமான சத்தம் கிளம்பியது. உலகமே வெடித்துவிடும்படி இருந்தது அந்த ஒலி. பகவான் தம் பக்தனின் சொல்லைக் காக்க மனிதனும் மிருகமும் இரண்டும் அல்லாத நரசிங்க ரூபத்துடன் தோன்றினார். இரணியகசிபு பயங் கரமாகக் கூவிக்கொண்டே பகவான்மேல் பாய்ந்தான். அவர் அவன் உடலைக் கீறி அவனுடைய குடலை எடுத்துவிட்டார். இதைக் கண்டு ஓடிவந்த அசுரர்களையும் விளையாட்டாகவே கொன்று விட்டார்.

“ஆகாயத்திலிருந்து மலர்மாரி பொழிந்தது. தேவர்கள் மகிழ்ச்சி யுடன் துந்துபி முழக்கினார்கள். பகவானைப் போற்றினார்கள். ஒரு வரும் அவரை அணுகத் துணிய வில்லை. லட்சுமி தேவியும் அச்ச முற்று விலகி நின்றாள். கடைசி யில் பிரம்மா பிரகலாதனிடம் பக வானை அணுகும்படி சொன்னார். அவன் அப்படியே செய்து பகவானை வணங்கினான். அவர் அவனை எழுப்பி அவன் தலையில் கை வைத்தார். இதனால் பிரக லாதன் ஞானக்கண் திறந்த வனாய்ப் பகவானைத் தோத்தரிக்க லானான்.

“தன் தந்தை பாவம் நீங்கிப் பரிசுத்தனாக வேண்டும் என்றும் வேண்டினான். பகவானும் அப்படியே அருள் புரிந்து மறைந் தார்.”

ஆண்டானைப்போல் கருமம் செய்யவேண்டும்; அடிமை யைப்போல் அல்ல.

—விவேகானந்தர்.

குழந்தை அழகாயிருக்க, பெற்றோர் ஒன்றுமே செய்ய முடியாதா?

# அழகுக்கு ஆதாரம்

**கான்ஸ்டன்ஸ் ஜே. ஃபாஸ்டர்**

ஒவ்வொருவரும் தம் குழந்தை கண்ணுக்கு நன்றாயிருக்க வேண்டும் என்று விரும்புவது நியாயந்தான். இந்தக்காலத்தில், தோற்றத்தில்தான் எல்லாம் இருக்கிறது என்றே சொல்லிவிடலாம். மிட்டாயை அழுக்குப் படிந்த காகிதத்தில் பொட்டலம் கட்டியிருந்தால், விற்பனையாகாமல் அப்படியே கிடக்கும். அதே மிட்டாயை நல்ல காகிதத்தில் அழகாய்ப் பொட்டலம் கட்டி வைத்திருந்தால் அதிக விலைக்கே மளமளவென்று ஒரு நொடியில் விற்றுப் போய்விடும். இதில் என்ன அதிசயம்! இயற்கையே தோற்றத்துக்குத்தான் அதிக மதிப்புக் கொடுத்திருக்கிறது. சூரியாஸ்தமனத்தைப் பாருங்கள்! என்ன வர்ண ஜாலங்கள் கண்ணைப் பறிக்கின்றன! மரங்களில் இலைகள் பழுத்து உதிர்ந்ததும் இளந் தளிர்களின் பசுமை கண்ணை எப்படிக் கவர்கிறது! வைரமணிகள் போல் உதிரும் மழைத் துளிகளையும் குளிர்காலத்தில் பளிங்கு முத்துக்கள் போல் பிரகாசிக்கும் பனித்திவலைகளையும் காணும்போது இயற்கைத் தேவி அழகுக்கே தன்னை அர்ப்பணம் செய்துகொண்டிருப்பது தெரிகிறதில்லையா?

ஆகவேதான், பிறர் கண்ணுக்குக் கவர்ச்சிகரமாய் விளங்குவதாகச் சிறுவயதிலிருந்தே குழந்தை நினைக்கும்படி பெற்றோர்கள் நடந்துகொள்ள வேண்டும். தன்னைக் கண்டால் மற்றவர்களுக்குப் பிடிக்கிறது என்ற எண்ணமே குழந்தையின் மனத்துக்கு நல்ல தெம்பையும் சந்தோஷத்தையும் அளிக்கும். தன்னைப் பிறர் விரும்புகிறார்கள், மதிக்கிறார்கள் என்ற நிச்சயம் ஏற்பட்டால்தான், தன்மதிப்பும் உண்டாகும். இதற்குப் பெற்றோர்கள்தான் உதவி செய்ய முடியும். சிறுவயதிலிருந்தே தன்னைப் பற்றித் திருப்தியோடும் மதிப்போடும் குழந்தை வளரும்படி செய்வது, அதற்குப் பெரிய நன்மையை உண்டாக்கும். தன்னைப்பற்றிக் குறைவாக நினைக்கும் குழந்தைக்கு, பிறர் என்ன நினைக்கிறார்களோ என்ற கவலையிலேயே, நேரம், தெம்பு இரண்டும் வீணாகிவிடும். அவ்விதம் தாழ்ந்த மனப்பான்மை இல்லாத குழந்தைதான் தன்னைப்பற்றிக் கவலை இல்லாமல் இருக்கும்.

ஜூலியா என்ற பெண்ணை எல்லாருக்கும் பிடிக்கும். அவளும் எல்லாருடனும் பிரியமாய் நடந்துகொள்வாள். அவள் பள்ளிக்கூடம் போவதற்காக விரைநது சென்று பஸ்ஸில் ஏறுவதுகூடப் பார்க்க நன்றாகத்தான் இருக்கிறது.

“பார்! ஜூலியா கவலை இல்லாமல் எவ்வளவு நிம்மதியாய் நடந்து செல்லுகிறாள்! வாழ்க்கை

**காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: ஜனவரி '54), சிக்காகோ.**

யிலும் இப்படித்தான் அவள் ஒரு கவலையும் இல்லாமல் வாழ்வாள்'' என்று பார்ப்பவர்கள் அவளைப் பாராட்டிப் பேசுகிறார்கள். இவ்வளவுக்கும் ஜூலியா கண்ணுக்கு ரொம்பச் சாதாரண மாய்த்தான் இருப்பாள். அவள் பெற்றோர்கள் இதைப் புரிந்து கொண்டதால், அலங்கார விஷயத்தில் அநாவசியமான சிரமம் எடுத்துக் கொள்ளவில்லை. சாதாரண ஆடையணிகளே அவளுக்குப் பொருத்தமாயிருந்தன.

பிள்ளைக் குழந்தைகள் விஷயத்திலும் இவ்விதமான சங்கடம் உண்டு. சிறு வயதிலேயே பீட்டர் குள்ளமாய்த்தான் இருப்பான் என்று தெரிந்துவிட்டது. அதுவும் குடும்பத்தில் எல்லாரும் ஆறு அடிக்குக் குறையாமல் இருக்கும்போது, பீட்டர் மட்டும் குட்டை என்றால்..? ஆனால் அவன் பெற்றோர்கள் அவன் காது கேட்க, அதைப்பற்றி ஒன்றும் பேசுவதில்லை. எனவே, பீட்டருக்கு அதைப்பற்றி மனக்கிலேசம் உண்டாகவில்லை. நல்ல உயரமுள்ள பையன்களுக்குச் சரியாக அவனும் எல்லா விளையாட்டுக்களிலும் சேர்ந்து, அவர்களுக்குப் போட்டியாய் விளையாடக் கூடியவனாய் விட்டான்.

ஸ்பர்ஜன் இங்க்லீஷ் என்ற ஃபிலாடெல்ஃபியா மனச்சிகிச்சை (ஸைக்கியாட்ரிஸ்ட்) டாக்டரை, "கவர்ச்சிகரமாய் விளங்குவதற்கு எப்படி இருக்க வேண்டும்?'' என்று கேட்டேன். "சந்தோஷந்தான் அவசியம். மனத்திருப்தி இல்லாத குழந்தை கவர்ச்சிகரமாய் இருக்க முடியாது. கண்ணுக்கு எவ்வளவு லட்சணமாக இருந்தாலும் அதிருப்தி, அவமானம், வெறுப்பு இவை போன்ற உணர்ச்சிகள் அழகைக் குறைத்து விடும். குழந்தை சந்தோஷமாயிருக்கும்படி அதை வளருங்கள். தானே அதற்கு அழகு உண்டாகி விடும்'' என்று அவர் சொன்னார். குழந்தையின் மனத்தை அறிந்து நடப்பதில்தான் அதற்குச் சந்தோஷம் உண்டாகும். எப்போதும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருக்கக் கூடாது.

விந்தியா என்ற பெண்ணின் பெற்றோர்கள் அவளைப்பற்றியும் அவள் தோற்றத்தைப்பற்றியும் ஏதாவது குறை கூறியவண்ணம் இருப்பார்கள். அதனால் அவள் மனம் ஒன்றிலும் செல்லாமல், எப்போதும் அவள் சோர்வுடனேயே இருப்பாள், ஒருநாள் அவர்களுக்குத் தங்கள் தவறு தெரிந்தது. குறை கூறுவதை விட்டு, அவளைப் புகழ்ந்து பேசத் தொடங்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக விந்தியாவுக்கு உற்சாகம் பிறந்து அவள் முகத்தில் நல்ல களைகூட ஏற்பட்டது. அவள் சிரித்தால் முகம் அழகாகவே தோன்றிற்று.

கண்ணுக்கு அழகாயிருப்பது முக்கியந்தான். ஆயினும் இயற்கையிலேயே அழகாயிருக்கும் குழந்தைக்குக்கூடப் பெற்றோர்கள் விதம் விதமான ஆடைகளை அணிந்து அலங்கரித்தால் மட்டும் போதாது. குழந்தையின் மனம் சந்தோஷமாயிருக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். வெளி அலங்காரத்தைக் காட்டிலும் மனத்திருப்திதான் அதிக அவசியம். தன்மதிப்பும் உற்சாகமும் உள்ள குழந்தையின் தோற்றத்தில் அலாதியான ஒரு கவர்ச்சி இருக்கும்.

சிறு கதை:

# க்வஹே-ரி!

அசல்: எஸ். கே. பொற்றக்காட்
தமிழ்: சௌரி

**மலையாளத்தில் பிரபல கதாசிரியர் பொற்றக்காட், சில வருஷங்களுக்கு முன் ஐரோப்பா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் பிரயாணம் செய்தவர். இன்று கலவரம் செய்யும் கிக்குயூ மக்கள் சம்பந்தப்பட்ட இந்தக் கதை, அந்த நாட்டின் சூழ்நிலையைத் தத்ரூபமாகக் காட்டுகிறது.**

நைரோபியிலிருந்து என் நண்பர் கோமஸ் என்பவர் அனுப்பிய கடிதத்தை ஆர்வத்துடன் படித்துக்கொண்டிருந்தேன். அதில் கண்ட கடைசி வாக்கியம் என்னைத் திடுக்கிட வைத்தது. உள்ள வேதனையோடு அதைத் திரும்பத் திரும்பப் படித்தேன்: "ஸாலியை வெள்ளைக்காரர்களே சுட்டுக் கொன்றுவிட்டார்கள்" என்று எழுதியிருந்தது.

நாலு வருஷங்களுக்கு முன் நான் கென்யாவில் கழித்த அந்தத் தினங்கள் எனக்கு நினைவு வந்தன. அப்போது அங்கெல்லாம் 'மாவ் மாவ்' பயங்கர இயக்கம் தலையெடுக்கவில்லை. அந்த இயக்கத்தாரின் தலையை வெட்டிக்கொண்டு வருகிறவருக்குத் தென் ஆப்பிரிக்கச் சர்க்கார் சம்மானம் அளிப்பதும் அப்போது தொடங்கவில்லை. கிக்குயூ பிராந்தியவாசிகளான பல சுதேசிகள், நகரங்களில் வீட்டு வேலைக்காரர்களாகவும், தோட்டத் தொழிலாளிகளாகவும் உடல் ஓடிய உழைத்து, வயிறு வளர்த்து வந்தார்கள். தம் இனத்தையே ஒடுக்கி இழிவாக நடத்தி வரும் வெள்ளைக்காரரிடம் சுதேசிகளுக்குப் பொதுவாக அதிருப்தியும், ஆத்திரமும் உள்ளூறப் புகைந்து கொண்டிருந்தன. அந்தப் புகை ஒருநாள் பற்றியெறிந்து பரவத் தொடங்கி விடுமென்று அப்போது எவரும் நினைக்கவில்லை. அதை முன்கூட்டியே உணர்ந்து என்னிடம் அநுதாபத்தோடு சொன்னவர் ஸாலி ஒருவர்தான். அவர் சொன்னார்: "சுதேசிகள் மாத்திரம் ஒன்று சேர்ந்து உறுதியுடன் எதிர்க்க ஆரம்பித்துவிட்டால், இந்த வெள்ளைக்காரர்கள் போட்டது போட்டபடியே விட்டு ஓடவேண்டியதுதான். இந்தக் கென்யாவில் மட்டும் நாற்பது லட்சம் ஆப்பிரிக்கச் சுதேசிகளும், ஒரு லட்சம் இந்தியரும் வசிக்கிறார்கள். இவர்களுக்கெதிரே எழாயிரம் வெள்ளைக்காரர்கள் என்ன செய்ய முடியும்? லிவிங்ஸ்டன் பாதிரி

மாத்ருபூமி (மலையாளம்: 24-1-'54), கள்ளிக்கோட்டை.

அன்பால் தம் வசப்படுத்திய இந்தச் சுதேசிகளை இப்போது துப்பாக்கி கொண்டு அடக்கி ஆளலாமென்று இவர்கள் நினைக்கிறார்கள்!'' - இதைச் சொல்லிய அந்த ஸாலியும் ஒரு வெள்ளைக்காரர் தான்.

மொம்பாஸாவிலிருந்து நைரோபிக்குப் போகும் ரெயிலில் நானும் அவரும் சேர்ந்து பிரயாணம் செய்தோம். அதுதான் எங்களுடைய முதல் சந்திப்பு. சிற்றுண்டிக் காரேஜில் டீ குடித்துக்கொண் டிருந்த எனக்கெதிரே பீர் பாட்டிலை வைத்துக்கொண்டு, திறந்த ஜன்னல் வழியாய் இயற்கையை ரசித்துக்கொண் டிருந்த அவர், என் பக்கம் திரும்பி, ''மிஸ்டர்! நீங்கள் நைரோபிக்குப் போகிறீர்களா?'' என்று புன்சிரிப்புடன் கேட்டார்.

ஒரு வெள்ளைக்காரனுக்குக் கறுப்பு மனிதனிடம் இவ்வளவு சுமுகமாகப் பழக எப்படி மனம் வந்தது? என் ஆச்சரியத்தை அடக்கிக்கொண்டு, ''ஆம், நைரோபிக்குத் தான்'' என்று பதில் அளித்துவிட்டு, ''நீங்கள் எவ்வளவு தூரமோ?'' என்று கேட்டுவைத்தேன்.

மிகவும் சௌஜன்யமாக, ''நான் நையேரி போகிறேன். 'வோய்' ஸ்டேஷனில் இறங்க வேண்டும்'' என்று அவர் பதில் சொன்னார்.

வறண்ட மேடுகளுக்கிடையே ரெயில் ஓடிக்கொண்டிருந்தது. சிறு சிறு பாறைகளும், மாமிச வர்ணத்தில் மண் வெளிகளும், குதிரை வால் போல் சில புல் திட்டுகளும் அந்த அந்தி வேளையில் ரம்மியமாகக் காட்சியளித்தன. பருத்து வளர்ந்த 'பயோபாப்' மரங்கள் எட்டி எட்டிப் பார்த்தன. காட்டுமிராண்டிகளின் பரட்டைத் தலைகள் போலப் பல முட் புதர்களும், குத்திட்டு நிற்கும் எலும்புக் கூடுகள் போன்ற காட்டுக் கள்ளிகளும், சந்தடியற்ற அந்தப் பொட்டல் வெளிக்குக் காவல் நிற்கும் பூதகணங்களாகத் தோன்றின. பல பெரிய பாம்புப் புற்றுகள் அங்கங்கே தென்பட்டன.

''இங்கே எங்கே வேலை பார்க்கிறீர்கள்?'' - என் தன்மயத்தை அவர் கேள்வி கலைத்தது. நான் சுற்றுப் பிரயாணத்துக்காக வந்திருப்பதை அவரிடம் தெரிவித்தேன். முகமலர்ச்சியோடு, ''அப்படியா!'' என்று கூறிவிட்டு, மேலே பேச்சைத் தொடங்கினார்: ''என்னை ஸாலி என்று அழைப்பார்கள். என் தந்தை நைரோபியில் ஒரு பிரபல தோட்ட முதலாளி. ஆப்பிரிக்காவின் இயற்கையழகை ரசிக்கச் சுதேசிகளுடன் கூடி அலைகிறேன் என்பதற்காக, அவர் என்னைத் தம் வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டார்.'' ஒரு கிளாஸ் நிறைய பீரை ஊற்றி லேசாக உறிஞ்சிக்கொண்டே, ''நீங்கள் இங்கே வந்து எத்தனை நாளாகிறது?'' என்று கேட்டார்.

''ஒரு மாதம் ஆகிவிட்டது.''

''இந்த ஒரு மாதத்தில் எப்போதாவது நீங்கள் இந்த ஆப்பிரிக்காவின் உண்மையான ஆத்ம சௌந்தரியத்தைக் கண்டிருக்கிறீர்களா?''

என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தோன்றவில்லை. 'ஆப்பிரிக்காவின் ஆத்ம சௌந்தரியமா? அது எப்படி இருக்கும்?'- மூளையைக் குழப்பிக்கொண் டிருந்தேன்.

''சரி, அது போகட்டும்; சுதேசிகளின் கூட்டு நடனத்திலா

வது நீர் சேர்ந்து ஆடியிருக்கிறீரா?"

"இல்லையே...."

"உலகத்தின் கட்டுப்பாடுகளுக்குச் சிறிதும் அடங்காத சுதந்தர ஆவேசம் ஒன்று ஆப்பிரிக்கர்களின் 'கோமா' என்னும் அந்தக் கூட்டு நடனத்தில் ஓங்கி நிற்கும். ஒரு தடவையாவது அவர்களுடன் ஆடிப் பாருங்கள்; ஆப்பிரிக்காவின் இதயத் துடிப்புகளே உருவெடுத்து வந்து நடனமாடுவது போலத் தென்படும்."

"இருக்கலாம். ஆனல் எனக்கென்னவோ இந்தப் பொட்டல் வெளிகள், கள்ளிச் செடிகள், முள் புதர்கள் முதலியவைகளையே மாற்றி மாற்றிப் பார்த்து அலுப்புத் தட்டிவிட்டது."

ஒரே உறிஞ்சில் பீர் பாட்டிலைக் காலி செய்துவிட்டு ஸாலி புது வேகத்துடன் எனக்குப் பதில் சொன்னர்: "நீங்கள் இந்த வெளித் தோற்றங்களிலேயே கருத்தைச் செலுத்துகிறீர்கள். வெளிக் கவர்ச்சியில் ஜீவ அழகை எப்படிக் காண முடியும்? காட்சிகளுக்குள்ளேதான் உயிருள்ள அழகு, 'மிஸ்டிஸிஸம்' போல் பட்டும் படாமலும் தனி ரகஸ்யப் பொலிவோடு பிரகாசிக்கிறது."

சிக்னல் காட்டாததால் ஒரு மலைச் சரிவில் ரெயில் வந்து நின்றது.

"ஆகா! அதோ பாருங்கள், எவ்வளவு ரம்மியமான அபூர்வக் காட்சி!"-ஸாலி கை நீட்டிக் காட்டிய இடத்தை உற்று நோக்கினேன். பாறை இடுக்கில் ஆள் உயரத்துக்கு வளர்ந்திருந்த ஒரு காட்டுக் கள்ளிச் செடி முட்களை நீட்டிக்கொண்டு காட்சியளித்தது.

"இதிலே என்ன அப்படி அபூர்வ அழகு இருக்கிறது?"

"நன்ருய்க் கவனித்துப் பாருங்கள்: இயற்கையின் செழுமையில் பங்கு பெற்று வளர்ந்திருக்கும் இந்தச் செடி ஆனந்த நடனம் செய்வதை நீங்கள் இப்போது காண்கிறீர்களா, இல்லையா?"



ஸாலி கூறியபடியே கவனித்துப் பார்த்தேன். நடராஜரின் தாண்டவ முத்திரையில் அந்தக் கள்ளிச் செடி நிற்பதாகத் தோன்றியது.

"பத்மராகக் கற்களைப் பதித்தாற் போல விளங்கும் அந்தச் சின்னப் பூக்களைக் கவனியுங்கள். இந்த மாதிரி புது நிறமும், அபூர்வ அழகும் உள்ள பூக்களை வேறெங்காவது பார்த்திருக்கிறீர்களா?"

'சுருங்கிச் சிவப்பாய்த் தென்படும் இந்தக் கள்ளிப் பூக்களுக்கா இவ்வளவு வர்ணனை!' என்று நினைத்துக்கொண்டேன்.

"இந்தக் கள்ளிச் செடிக்குள்ளிருந்து மலர்ந்து நிற்கும் சிவப்புப் பூக்களைப் போல, இந்த ஆப்பிரிக்கப் பெண்களின் இருதயத்திலிருந்து எழும்பி மலரும் காதலைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

ஆச்சரியம் தாங்காமல் ஸாலியைப் பரக்கப்பரக்கப் பார்த்தேன். ஸாலியின் வாழ்விலேயே இப்படி ஏதாவது ஏற்பட்டிருக்குமோ?

உரக்கக் கூவிவிட்டு ரெயில் புறப்பட்டது. அது கக்கிய புகைப் படலம் ஆகாயத்தைப் பழுப்பேறிய பழம் கடுதாசி போல ஆக்கிக்கொண்டிருந்தது. மூடி போட்டாற் போன்ற சிலந்திக் கூடுகளுக்குள் பல முள் செடிகள் அந்தி வெயிலால் பொன்னிறம் பெற்று மின்னின. அதற்கப்பால் கம்பீரமாய் எழும்பி நின்ற கிக்குயூ மலைகள், காவியும் ஊதாவும் கலந்த நிறத்தில் காட்சியளித்தன.

கிக்குயூ மலைகளில் மறைந்துகொண்டிருக்கும் செம்பருதியை நோக்கிக் கையை ஆட்டிக்கொண்டே ஸாலி உரக்கச் சொன்னார்: "க்வஹே-ரி."

அவர் சொன்னதன் பொருள் எனக்குப் புலப்படவில்லை. எதற்காகச் சொன்னாரோ? ஸாலி திரும்பி என் எதிரே வந்து உட்கார்ந்தார்.

"சேர்ந்து யாத்திரை செய்பவர்கள் பிரியும்போது இந்தியர்கள் சொல்லிக்கொள்ளும் அன்பு மொழி என்ன?"

வட இந்தியர் 'நமஸ்தே', 'ஷுக்ரியா' என்றெல்லாம் சொல்லுவார்கள். மலையாளத்திலோ 'என்னாலங்ஙனெயாட்டெ, பின்னெக் காணும் (அப்படியானால் சரி, பின்பு சந்திக்கலாம்)' என்பதுதான் வழக்கு. இவ்வளவு நீளம் ஸாலிக்குப் பிடிக்காது என்று நினைத்துக்கொண்டு, பொதுவாக, "நமஸ்தே என்று சொல்லுவோம்" என்றேன்.

"என்ன? நமாஷ்டே.... நாமஷ்டே.... ஊஹூம். இது அவ்வளவு இனிமையாயில்லை. இங்கிலீஷ்காரர் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் 'குட் பை' அல்லது 'ஃபேர்வெல்' என்ற வார்த்தைகளில்கூட அந்த இனிமை இல்லை. பிரெஞ்சுக்காரன் சொல்லும் 'ஓ-ரிவார்' என்பதிலாவது சிறிது கவர்ச்சி இருக்கிறது. அதெல்லாம் கிடக்கட்டும். நான் கேட்டவரையில் மிக இனிமையும், சங்கீத நாதமும் நிறைந்து இருதயத்தைத் தொடும் பிரிவுபசார மொழி ஆப்பிரிக்கச் சுதேசிகள் சொல்லும் 'க்வஹே-ரி' என்ற மதுரமான சொல்தான்." குப்பியில் எஞ்சியிருந்த சாராயத்தை அப்படியே வாயில் ஊற்றிக்கொண்டு பரவசத்தோடு ஸாலி உரக்கக் கூவினார்: "க்வஹே-ரி!"

என் மனத்தில் ஸாலியிடம் தனி மதிப்பு ஒன்று வளர்ந்துகொண்

டிருந்தது. சுதேசிப் பெண்ணின் காதல் மலர்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டாரே; அதைப்பற்றி நேரடியாகக் கேட்டுவிடவேண்டுமென்று எனக்குள் ஆசை துடித்துக் கொண்டிருந்தது. ஒரு சாராயப் புட்டிக்கு ஆர்டர் கொடுக்க ஸாலி எழுந்து சென்றார். மஞ்சள் வெயில் மறைந்து கருமை படரத் தொடங்கியது. பல கிக்குயூவாசிகள், தம் தம் குடிசைகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

சாராயப் புட்டி வந்து சேர்ந்ததும், கிக்குயூக்களின் குடிசைகளை ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டிருந்த ஸாலி, என்னெதிரில் வந்து உட்கார்ந்தார்.

"காப்பிரிப் பெண்ணின் காதல் மலர்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டேனே, அந்தக் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்!" என்ற பீடிகையுடன் ஸாலி பேச்சைத் தொடங்கினார்:

"ஆப்பிரிக்கரின் நடனங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு நான் கிராமம் கிராமமாகச் சுற்றி அலைந்துகொண்டிருந்த சமயம் அது. என்னைப்பற்றிப் பல தப்பபிப்பிராயங்கள் வெள்ளைக்காரர் சமுதாயத்தில் பரவிக்கொண்டிருந்தன. நேர்மையான வழியில்தான் செல்கிறேமென்கிற நம்பிக்கையில், நான் எந்த எதிர்ப்பையும் லட்சியம் செய்யவில்லை. சுதேசிகளின் பற்பல நடனங்களில் நானும் பங்கு கொண்டிருக்கிறேன். அதிக நேரமாகிவிடும்போதெல்லாம், இரவுப் பொழுதையும் அவர்களுடைய குடிசைகளிலேயே கழித்துவிடுவது வழக்கம். காட்டுமிராண்டிகள் என்று ஐரோப்பியர் ஏசும் இந்தச் சுதேசிகளின் சிறந்த வாழ்க்கை முறைகளும் பண்பாடுகளும், நாகரிக ஜாதியாரிடம் காணக் கிடைக்காத இவர்களுடைய களங்கமற்ற மனோபாவமும் சிநேக உணர்ச்சியும் என்னை மிகவும் வசீகரித்து விட்டன. நான் இவர்களுடன் நெருங்கிப் பழகி வருவதற்காக என்னைத் தந்தை வெளியேற்றியதும், கிக்குயூ மக்கள் வாழும் நையேரிக்குப் போய்க் குடியேறிவிட்டேன்.

"ஒரு மாதகாலம் பக்கத்துச் சிறு கிராமத்தில் வசித்துவந்தேன். கிக்குயூக்களில் ஒரு சாராருக்கு என்பேரில் விபரீதமான சந்தேகம் ஏற்பட்டது. வெள்ளையரின் ஐந்தாம்படையாக நான் அங்கே வேவு பார்க்கவே வந்திருப்பதாக அவர்கள் நினைத்துவிட்டார்கள். அந்தக் கிராமத்து மந்திரவாதி, கிராமத் தலைவனின் மைத்துனன், ஒரு வெள்ளைக்காரனின் நாயைக் கொன்று தின்றதற்காக நாலு வருஷம் சிறை சென்றுவந்த கிக்குயூக் கூனன் ஒருவன் இவர்களெல்லாம் எனக்கு எதிரிகள். தான் செய்து வரும் ரகசியச் சதிகளை இந்த 'முசூங்கு' (வெள்ளைக்காரன்) கண்டுபிடித்துத் தன் இனத்தாருக்குத் தகவல் கொடுத்துவிடுவானோ என்கிற திகில் அந்த மந்திரவாதிக்கு. கிராமத்தலைவன் என்னிடம் காட்டும் பரிவையும் மரியாதையையும் கண்டு அசூயை ஏற்பட்டது அவன் மைத்துனனுக்கு. கூனனுக்கோ தன் சிறைத்தண்டனைக்குப் பழி வாங்க வேண்டுமென்ற ஆத்திரம். அதனால் அவன் எந்த வெள்ளையனையும் தன் விரோதியாகப் பாவித்தான்.

"நான் அவர்களுடைய விரோதத்தைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. வழக்கம் போல இரவு வேளைகளில் அவர்களுடைய

காட்டு நடனங்களில் சேர்ந்து கொள்வேன். பகலில் என் குடிசைக்குள் சீனக் களிமண் பொடி (ப்ளாஸ்டர் அவ் பாரிஸ்) கொண்டு பற்பல நடனத் தோற்றங்களின் சிலைகள் செய்துகொண் டிருப்பேன். கிராமத் தலைவன் எனக்கென்று தனியாக நல்ல வசதியுடன் ஒரு குடிசை கட்டிக் கொடுத்திருந்தான். ஒரு நாள் இரவு அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்தேன். 'ப்வானா! ப்வானா!' என்று யாரோ படபடத்த தொனியில் மெல்லக் கூப்பிடுவதைக் கேட்டு எழுந்தேன். 'ப்வானா' என்றால் 'ஐயா' என்று அர்த்தம். டார்ச்சு விளக்கை அழுத்திப் பார்த்தபோது என் கால்மாட்டில் ஒரு கிக்குயூச் சுதேசிப் பெண் கலவரத்துடன் நின்றுகொண் டிருந்தாள். 'உனக்கு என்ன, அம்மா வேண்டும்?' என்று கேட்டதும், அவள் அவசர அவசரமாகச் சொன்னாள்: 'ஐயா! உங்களைக் கொல்ல ஒரு கரும் புலி புறப்பட்டுக்கொண் டிருக்கிறது. உங்கள் காலை அது கடிக்கும். அப்புறம், கால் வீங்கித் துடிதுடித்து நீங்கள் சாக வேண்டியதுதான். இப்போதே எங்கேயாவது ஓடி விடுங்கள்; தாமதிக்காதீர்கள். சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இதோ நான் போகிறேன்.' அடுத்த கணம் அவளுடைய கரிய உருவம் என் குடிசையை விட்டுக் கிளம்பிக் கும்மிருட்டில் மறைந்ததைக் கண்டேன்.

"அந்தப் பெண்ணை நடனக்காரிகளுக்கிடையில் பல தடவை பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவள் என் பக்கம் அடிக்கடி நோக்கிப் புன்முறுவல் செய்வது வழக்கம். அவள் முன் எச்சரிக்கை செய்துவிட்டுப் போனதில் உண்மை இருக்கத்தான் வேண்டும். பகைவர்களைக் கொல்லப் பல பயங்கர முறைகளைக் கையாளுபவர்கள் இந்தச் சுதேசிகளென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இருந்தும், ஓடிப்போக மனம் வரவில்லை. என் காலைக் 'கரும்புலி' கடிக்கும் என்றாளே; இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதையுந்தான் பார்க்கலாமே என்ற முடிவுக்கு வந்தேன்.

"சட்டென்று எனக்கொரு யுக்தி தோன்றியது. நான் புதிதாகச் செய்து வைத்திருந்த பெரிய பதுமையை என் கட்டிலின் மேல், கால்கள் சற்று வெளியே தெரியும்படி நீட்டிப் படுக்கவைத்தேன். ஈரம் காயாத அதன் கால்கள் மனிதனுடைய கால்களைப் போல ஜில்லென்றிருந்தன. நான் கம்பளியால் உடலை மூடிக் கொண்டு கட்டிலின் தலைமாட்டில் ஒருக்களித்து உட்கார்ந்தேன். ஒரு கையில் துப்பாக்கியையும், மற்றொரு கையில் டார்ச்சு விளக்கையும் தயாராய் வைத்துக் கொண் டிருந்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சரசரவென்று கதவைத் தட்டித் திறக்கும் சத்தம் கேட்டது. என் கண்கள் மிக உன்னிப்பாகக் கவனித்தன. வானத்தின் மங்கிய வெளிச்சத்தில், கரிய உருவம் ஒன்று என் கால்மாட்டை நோக்கி மெல்ல நகர்ந்து வந்தது. ஒரு நிமிஷம் அங்கே தங்கிவிட்டுத் திரும்பிச் செல்லும்போது மறு முறையும் உன்னிப்பாக அந்த உருவத்தைப் பார்த்துக்கொண்டேன். நான் நினைத்தது உண்மைதான்! உடனே எழுந்து விளக்கேற்றி, ப்ளாஸ்டர் பதுமையின் கால்களை உற்று

நோக்கினேன். இடது உள்ளங் காலில் ஊசியால் குத்தியது போன்ற வடுவுடன் ஒரு கரும் புள்ளி தென்பட்டது. 'இது ஒரு கொடிய விஷமென்பதில் சந்தேக மில்லை. இந்தக் குத்து நம் காலில் விழுந்திருந்தால்...?' என் உடல் பதறியது. கரும்புலியின் தோலால் உடலை மூடிக்கொண்டு வந்தவன் வேறு யாருமில்லை! பண்டித னென்று கிராமத்தார் போற்றும் அந்த மந்திரவாதிதான். நான் நினைத்திருந்தால் அவனைச் சுட்டுக் கொன்றிருக்கலாம்; ஏனோ நான் அதைச் செய்யவில்லை.

''முக்கியமான சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு அந்தக் கிராமத்தை விட்டே புறப் பட்டேன். என் உயிரைக் காப் பாற்றிய அந்தக் கிக்குயூப் பெண் ணைக் கண்டு, நன்றி செலுத்த வேண்டுமென்று என் மனம் துடித் துக்கொண்டிருந்தது. விடை பெற்றுக்கொள்ளும் வியாஜத்தில் ஒரு குடிசை விடாமல் போய்ப் பார்த்தேன். எங்கேயும் அவளைக் காணவில்லை. ஏமாற்றமும் வேதனையும் மனத்தை அழுத்த, காட்டுப் பாதையில் தனியாகச் சென்றுகொண்டிருந்தேன்.

'' 'ஜாம்போ, ப்வானா! (நமஸ் காரம், ஐயா!)' என்ற மதுரமான ஒரு குரல் கேட்டது. திகைப்புடன் திரும்பிப் பார்த்தேன். பாதைக் கருகே இருந்த இரண்டு பாறை களுக்கு நடுவில் சிவப்புப் பூக்க ளுடன் கள்ளிச் செடி ஒன்று நின் றது. அதன் மறைவிலிருந்து, வைரக் கல் பளிச்சிடுவதுபோலப் பல் வரிசை தெரிய லேசாகச் சிரித் துக்கொண்டு, ஒரு கிக்குயூ யுவதி வெளியே வந்தாள். இவளா?...! என் உயிரைக் காத்த அந்தப் பெண்ணேதான்! சில கணம் அவளையே திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தேன். மோகனப் புன்னகை மாறாமல் வலது கையைத் தூக்கி அசைத்துக் கொண்டே, என்னை வழியனுப்பும் தோரணையில் இனிமையாக அவள் சொன்னாள்: 'க்வஹே - ரி!'

''நான் பெட்டியைத் திறந்து சில விலையுயர்ந்த பொருள்களை அவளெதிரில் காணிக்கையாக நீட்டினேன். அவள் ஒன்றைக்கூட எடுத்துக்கொள்ளவில்லை. வேண் டாம் என்பதற்கு அடையாள மாகத் தலையை மட்டும் ஆட்டி னாள். எவ்வளவு சொல்லியும் அவள் ஏற்கவே இல்லை. 'சரி, உன் பெயரென்ன?' என்றேன். 'கபீநா' என்று வெட்கத்தோடு முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு சொன்னாள். 'நீ எந்தக் குடிசை யில் இருக்கிறாய்?' என்று கேட் டேன். 'முக்குருவின் குடிசையில் தான். அவர் பெண்தான் நான்' என்றாள். என் உள்ளத்தின் பட படப்பு ஓயச் சற்று நேரமாயிற்று. முக்குரு!-மந்திரவாதியின் பெயர் அது. அவன் பெண்ணா இவள்!- இந்தக் கபீநா? கடைசி முறை யாக ஏதாவதொரு பொருளை என் நினைவாக வைத்துக்கொள்ளும் படி கபீநாவை வேண்டினேன். அதே புன்சிரிப்புடன் தலையை ஆட்டி மறுத்துவிட்டாள். மனக் குறையோடு அவளிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டேன். சில அடிகள் சென்று திரும்பிப் பார்த்தேன். அதே கள்ளிச் செடி யின் பின்னால் நின்றுகொண்டு, தன் கையை உயர்த்தி உள்ளங் கனியும் குரலில், 'க்வஹே-ரி' என்று கூறி விட்டுக் கபீநா மறைந்தாள்.

"நான் விடியற்காலம் ரெயிலேறி மொம்பாஸாவுக்குப் பிரயாணமானேன். என் சிந்தனைகளெல்லாம் கபீநாவையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கரும்பாறைகளுக்கிடையில் சிவப்புப் பூக்கள் குலுங்க நின்ற கள்ளிச் செடி, அதன் மறைவில் தோன்றிய கபீநாவின் அன்பு வடிவம், அவள் முகத்தில் மின்னிய வெள்ளிச் சிரிப்பு இவையெல்லாம் என் மனத்தில் அழியா ஓவியங்களாகப் பதிந்துவிட்டன. 'க்வஹே-ரி'- இந்த இனிய கீதம் என் ஒவ்வொரு நரம்புத் துடிப்பிலும் எதிரொலித்துக்கொண் டிருந்தது.

"அவள் ஏன் என் அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை?... எவ்வளவோ யோசித்தும் காரணம் புலப்படவில்லை. ரெயில் 'ட்ஸாவோ' ஸ்டேஷனில் வந்து நின்றபோதுதான் எனக்கு ஞானோதயம் ஏற்பட்டது: 'ஆமாம், கபீநாவுக்கு வேண்டியது என் அன்பு ஒன்றுதான்.' - உடனே ரெயிலைவிட்டு இறங்கி மொம்பாஸாவுக்குப் போகாமல், திரும்பி நையேரிக்கே வந்து சேர்ந்தேன்.

"இப்போது நான் யார் தெரியுமா? கபீநாவின் கணவன்; அந்த மந்திரவாதி முக்குருவின் மாப்பிள்ளை. இப்போது நான் போய்க் கொண்டிருப்பது என் மனைவி கபீநாவின் வீட்டுக்குத்தான்."

ஸாலி கதையைக் கூறி முடித்தார். வோய் ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது. ஸாலி தம் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு இறங்கினார். ப்ளாட்ஃபாரத்தில் நின்றுகொண்டு, பிடித்திருந்த பெட்டியோடு வலது கையை உயர்த்திச் சிரித்துக்கொண்டே, "க்வஹே-ரி!" என்று கூறி, என்னிடம் விடை பெற்றார். அன்பும் மரியாதையும் பொங்கப் புன்சிரிப்புடன் நானும் அவருக்கு; 'க்வஹே - ரி' கூறினேன்.

வோய் ஸ்டேஷனின் மங்கிய ஒளியிலும் 'சுதேசிகள் வெளியே போகும் வழி' என்ற போர்டு தெளிவாகத் தெரிந்தது. அந்த வழியாகவே ஸாலியும் கறுப்பு ஆப்பிரிக்கர்கள் பலருடன் கம்பீரமாகப் போய்க்கொண் டிருந்தார்.

நைரோபி வந்து சேரும் வரையில் என் சிந்தனைகள் ஸாலியை விட்டுப் பிரியவே இல்லை. அந்த உத்தமரின் சந்திப்பால் ஆப்பிரிக்க யாத்திரையின் முழுப் பயனையும் பெற்றுவிட்ட பெருமையில் நான் பூரித்துப்போனேன்.

நாலைந்து வருஷங்களுக்குப் பின் இப்போதுதான் ஸாலியைப் பற்றிய தகவல் நண்பர் கோமஸ் எழுதியிருக்கும் இந்தக் கடிதத்தின் மூலம் கிடைத்திருக்கிறது. அதிகம் ஒன்றுமில்லை; "ஸாலியை வெள்ளைக்காரர்களே சுட்டுக் கொன்றுவிட்டார்கள்." இவ்வளவு தான் தகவல்.

இந்த ஒரு வாக்கியத்திலிருந்து அந்த லட்சிய வீரருடைய புரட்சிகரமான வாழ்க்கையின் பின் பகுதிகளை எப்படி அறிந்து கொள்ள முடியும்?

உத்தமர் ஸாலி!.. 'க்வஹே-ரி!'

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# கடைசிக் கல்

உடலிலே மிதமிஞ்சிய சோர்வு; நெஞ்சிலே அளவற்ற ஏமாற்றம். ஒரு பாறையின்மேல் சாய்ந்தான் ஸோலானோ. வறண்டு கிடந்த ஆற்றின் அந்தப் பாறைப் பிரதேசத்திலே அவன் மாதக் கணக்காகக் கடும் வெயிலிலும் சூறைக் காற்றிலும் பாறுங்கற்களை எண்ணிக் குவித்துக்கொண் டிருந்தான். இந்த வேலையில் அவனுக்கு உதவியாக இரண்டு பேர் இருந்தார்கள்.

அலுத்துப் போய் வருத்தம் தோய்ந்த குரலில் ஸோலானோ அவர்களிடம், "போதுமப்பா, இந்த வேலை! இன்னும் ஒரு கல்லை நான் எடுத்துவிட்டால் அதனோடு பத்து லட்சம் கற்கள் கணக்காகின்றன. இவ்வளவிலும் ஒரு பொடி வைரம் கிடைக்கவில்லையே! இதைவிடத் துரதிருஷ்டம் வேறு என்ன வேண்டும்?" என்றான்.

ஒவ்வொரு கல்லாக எடுத்து உற்றுப் பார்ப்பதும் எறிவதுமாக எத்தனையோ மாதங்களை அவர்கள் கடத்திவிட்டார்கள். அவர்களுடைய கந்தைத் துணிகளின் இடையே உடலின் எலும்புகள் தலை நீட்டிப் பார்த்தன. இடைவிடாத உழைப்பினாலும் கடும் வெயிலினாலும் அவர்களுடைய கண்கள் வீங்கியிருந்தன. இப்பொழுதும் அவர்கள் நம்பிக்கையை இழந்ததாகத் தெரியவில்லை.

அவர்களில் ஒருவன் வேடிக்கையாக, "இன்னும் ஒரு கல்லை எடுத்துப் பார்த்துவிடு, ஸோலானோ! பத்து லட்சம் ஆகிவிடும். அந்தக் குறைதான் ஏதுக்கு?" என்றான்.

"ஒரே ஒரு கல்லைத்தான் எடுக்கப்போகிறேன்; அதோடு சரி. அதுதான் கடைசிக் கல்!" என்று சொல்லிவிட்டு, ஸோலானோ ஒரு கல்லை எடுத்தான்.

அது மற்றக் கற்களைப்போல இல்லை. கனமாக இருந்தது. வெயிலில் அது பளிச்சென்று ஒளி வீசியது. ஸோலானோவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை; "நண்பர்களே, இது வைரம்! வைரச் சுரங்கத்தை நாம் கண்டுபிடித்துவிட்டோம்!" என்று கூச்சலிட்டான்.

இந்தச் சம்பவம் நடந்த மூன்றாம் நாள் நியூ யார்க் நகரில் ரத்தின வியாபாரி ஒருவரின் கடையில் ஸோலானோவின் அந்தக் கடைசிக் கல் இரண்டு லட்சம் டாலருக்கு விற்றது.

நண்பர்களே, உங்களுக்கு வாழ்க்கையில் ஏமாற்றமும் தோல்வியும் நேர்ந்தால் அலுப்புற்று உங்கள் முயற்சியை விட்டு விடாதீர்கள். ஸோலானோவின் கடைசிக் கல்லை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

—டபிள்யூ. ஜி. மான்ட்கோமரி

April '54 Regd. No. M. 4975

# மஞ்சரி

ஜய - சித்திரை


| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் | | 1 |
| எகிப்திலே நடந்தது | டைம் | 3 |
| மணம் வீசும் பூச்சி | அமிர்த பஜார் பத்திரிகை | 7 |
| விஞ்ஞானி போஸ் | விஞ்ஞானி | 11 |
| சஞ்சீவிக் குளம் | கிராம ராஜ்யம் | 15 |
| நான் வாழும் மலாயா | மாசி மக மலர்-1954 | 16 |
| வேலூர்க் கோட்டை | ஹிந்து | 21 |
| புரட்சி விளைத்த இந்திய எஃகு | பம்பாய்க் கிரானிக்கிள் | 25 |
| கார்ட்டூன் கதம்பம் | | 30 |
| உலகமறியாத் தீவு | ரா. ஸ்ரீ. தேசிகன் | 32 |
| நந்தகுமார் தியாகியா? | பாரத வர்ஷ | 37 |
| பிரார்த்தனை மறந்தது | ஸர்வோதயம் | 41 |
| தேயிலைத் தோட்டம் | சுதேசமித்திரன் | 43 |
| என்னைக் கேளுங்கள் | காப்டன் என். சேஷாத்திரிநாதன் | 48 |
| சிறுகதைப் பஞ்சம் | | 51 |
| சாவின் நினைப்பு | விநோபா பாவே | 57 |
| பாபுராவ் பதில் சொல்லுகிறார் | ஃபில்மிண்டியா | 62 |
| பாவைக் கூத்து | ஸ்ரீலங்கா | 65 |
| ஆயுர்வேதமும் புது மருந்தும் | வைத்ய சந்திரிகா | 71 |
| பிரகலாத சரிதம் | | 74 |
| அழகுக்கு ஆதாரம் | பேரெண்ட்ஸ் மகஸீன் | 79 |
| க்வஹேரி | (மலையாளக் கதை) எஸ். கே. பொற்றேக்காட் | 81 |
| கடைசிக் கல் | | (3-ஆம் அட்டை) |